# நமது செட்டிநாடு

மலர் 10 ✿ மணம் 09 ✿ ஸ்ரீ குரோதி ஆண்டு ✿ தை ✿ சனவரி 2025 ✿ ரூ.25
Namadhu Chettinad ✿ Volume 10 ✿ Issue 09 ✿ January 2025 ✿ Rs.25



வாசகர்கள் அனைவருக்கும் மனம் கனிந்த
இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகள்...



Chettinad
Academy
of Research and Education
(Deemed to be University)
Experience Your
Natural Holistic Healing
Treat the ill with
a sweet pill
@ Chettinad Premium
Homoeopathy Wellness
Clinic
BOOK YOUR APPOINTMENTS NOW!
98417 36000 | 95512 97000
044 474 11000

நமது செட்டிநாடு

மலர் 10 மணம் 09 சனவரி 2025
ஸ்ரீ குரோதி ஆண்டு தை மாதம்

ஆசிரியர்: ந.ஆவுடையப்பன்
ஆசிரியர் குழு:
புதுவயல் செல்லப்பன்
குழ.கதிரேசன்
ஆறாவயல் ஆர்எம்.சண்முகம்
முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி
விசாலாட்சி சுப்பிரமணியம்
புதிய சந்தா, சந்தா புதுப்பித்தல்,
தட்டச்சு: முரு.மலர்விழி
வடிவமைப்பு: பி.தாமோதரன்
விளம்பரம் தொடர்புக்கு:
99622 43750
இணைய இதழ் முகவரி: www.namadhuchettinad.com
செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
நமது செட்டிநாடு மாத இதழ்
ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை - 600 006
தொலைபேசி: 044–42951888

கரு.மணிகண்டன்
மக்கள் தொடர்பு அலுவலர்
காரைக்குடி 86818 28284

இதழ் சந்தா விவரம்

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ.300 |
| இரண்டாண்டு | ரூ.500 |
| ஐந்தாண்டு | ரூ.1250 |

கட்டுரைகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

மின்னஞ்சல்
namadhuchettinad@gmail.com

வாட்ஸ்ஆப்
9962243750



# அச்சு இதழ் தொடரும்...

சென்ற இதழில், 2025 பிப்ரவரி மாதம் முதல் நமது செட்டிநாடு இதழை மின் இதழாக மட்டும் கொண்டு வருவது பற்றி தெரிவித்து வாசகர்களின் ஆலோசனைகளைத் தெரிவிக்க கேட்டுக்கொண்டோம். பல வாசகர்கள் தொலைபேசியிலும் வாட்ஸ் அப்பிலும் தங்கள் கருத்துக்களை தெரிவித்து இருந்தார்கள். அவற்றில் முக்கியமாக திருச்சி நகரத்தார் சங்க முன்னாள் தலைவர் திரு. சுப்பையா அவர்கள் தனது கருத்தை வாட்ஸ் அப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவித்திருந்தார்கள்.

'மின் இதழாகும் நமது செட்டிநாடு செய்தி படித்தேன். ஒருகருத்து. மின் இதழ் இன்னும் ஆயிரக்கணக்கான வாசகர்களை ஈர்க்கும். இருப்பினும் மின் இதழை கைபேசியில் தள்ளிக்கொண்டே படிக்க வேண்டும். அது நடைமுறையில் 60 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கு எளிதல்ல. ஒரு புத்தகம் கையில் வைத்துக் கொண்டு படிப்பது, பேரக்குழந்தைகளை கையில வைத்து கொஞ்சுவது போல. மின் இதழ் என்பது வெளிநாட்டில் பிறந்த குழந்தையை காணொளி வழியாக காண்பது போல. 'சிறு கை அளாவிய கூழ்' என்று,... புத்தகமாகவும் வரட்டும். மின் இதழும் வரட்டும். நல்ல அரிய செய்திகள் கொண்டு, மற்ற படங்கள் அதிகம் இல்லாமல், அறிவார்ந்த இதழாக உள்ளது. வெளிநாட்டுக்கு மின் இதழ் சரி. உள் நாட்டில் புத்தகம் நல்லது. வீட்டில் அந்த புத்தகம் இருந்தால் அந்த ஒரு மாதம் வரும் உறவுகள், நண்பர்கள் படிப்பார்கள். செட்டிநாடு குழுமம் இதைச் செயல்படுத்தும் என்று நம்புகிறேன்.'

இது போன்ற கருத்துக்களை முக்கியமாக நெற்குப்பை தியாகராஜன், கோட்டையூர் என்.சௌரிராஜன், கண்டரமாணிக்கம் பழனியப்பன் அவர்களும் தெரிவித்திருந்தார்கள். அண்ணாமலை பல்கலைக்கழக மேனாள் பொறியியல் துறை பேராசிரியர் அரு.இராமநாதன் அவர்கள் தாளில்லா பதிப்பு சூழல் பாதுகாப்பு எனக் கருத்துத் தெரிவித்து மின் இதழை வரவேற்று இருக்கிறார். மேலும் சிலர் வயதானவர்களுக்கு அச்சு இதழும் இளைஞர்களுக்கு மின் இதழும் அதிகப் பயனுள்ளதாக இருக்கும் என்ற கருத்தையும் தெரிவித்து இருந்தார்கள். இன்றைய காலகட்டத்தில் திறன் பேசி மூலம் பல செயலிகளின் வழியாக பேசுவதும் படிப்பதும் பணப் பரிவர்த்தனைகள் நடப்பதும் வாடிக்கையாக உள்ளன. இந்நிலையில் மின் இதழும் எல்லோரும் பயன்படுத்தக் கூடியதுதான் என்ற கருத்தையும் சிலர் தெரிவித்து இருந்தார்கள். நம் வாசகர்களின் மேலான கருத்துக்களுக்கு மதிப்பளித்து செட்டிநாடு குழுமத் தலைவர் **டாக்டர் முத்தையா ராமசாமி** அவர்கள் அச்சு இதழும் மின் இதழும் தொடர்ந்து வெளிவர அனுமதி வழங்கி உள்ளார்கள் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம். தங்கள் மேலான கருத்துக்களை வழங்கிய வாசகர்கள் அனைவருக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மின் இதழ் கூடுதல் வசதிகளுடன் வெளிவர நடவடிக்கை எடுத்து வருகின்றோம். வாசகர்கள் தங்கள் ஆதரவை தொடர்ந்து வழங்க கேட்டுக் கொள்கிறோம். ♦

# ஹூஸ்டன் தமிழாய்வுகள் இருக்கைக்கு தமிழக அரசு நிதி உதவி




அமெரிக்காவின் நான்காவது பெருநகரமான ஹூஸ்டன் மாநகரத்தில் 1927-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட ஹூஸ்டன் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் தமிழ்மொழி ஆராய்ச்சிக்காக தமிழ் இருக்கை நிறுவிட தமிழ்நாடு அரசு இதுவரை ரூ.3,44,41,750/- வழங்கியுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசு கொடையாக ரூ.1,50,00,000/- வழங்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப் பட்டதற்காக பல்கலையில் வாழ்த்துச் செய்தி 12.12.2024 அன்று அமெரிக்காவில் உள்ள ஹூஸ்டன் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆய்வுகள் இருக்கை சார்பாக நடைபெற்ற விழாவில் படிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் சார்பாக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு.வே. ராஜாராமன், இ.ஆ.ப. மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் கலந்து கொண்டனர். ஹூஸ்டன் தமிழ் ஆய்வுகள் இருக்கை அமைப்பின் தலைவர் திரு. சொக்கலிங்கம் சாம் கண்ணப்பன் மற்றும் செயலாளர் திரு. பெருமாள் அண்ணாமலை ஆகியோர் உடன் இருந்தனர்.

## உள்ளே...


அறிந்து கொள்ள வேண்டிய நகரத்தார்... மருத்துவர் திரு.ஜெயபாலன் வள்ளியப்பன் ...... 06

தலைமுறைக்கு தரவேண்டிய சிறந்த சொத்து! வள்ளியம்மை அருணாசலம் ... 08

வாங்க... வாங்க... வியட்நாமுக்கு வாங்க... .... 12

நகரத்தார் திருப்பணிகள்.......................... 14

பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் .................... 16

திருமாலின் திவ்ய தேசங்கள் ..................... 18

துதிக்கையில்லா கரிமுகன் ........................ 20

தொழில் தொடங்கலாம் வாங்க ............. 21

இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு ............................................ 26

நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு ..... 28

நூற்றாண்டு கண்ட “அருணோதயம்” அருணன் ........................................... 30

இராம காவியம் .................................... 32

திருமந்திரச் சுவை ................................ 34

உங்களுடன் உரையாடுங்கள் ................ 35

பார்த்தேன்... படித்தேன்... பகிர்கிறேன் ......... 36

நகரத்தார் பற்றிய பதிவுகள் வர வேண்டும் ...................................... 38

நகரத்தார் சிகரத்தார் ................................ 40

பிள்ளையார் நோன்பு விழா நிகழ்வுகள் ..... 42

வாழையடி வாழை ................................ 44

சந்தா படிவம்!........................................ 45


**அட்டை படம் உதவி**
**திருமதி உமையாள் பழனியப்பன்**
**ஆசிரியர், "The Nagarathar Way" ஆங்கில நூல்**



Vees Star™
Diamonds & Jewelry
ஸ்ரீ அடைக்காத்தாள் பெரியகருப்பண்ண சாமி துணை
GIA
CERTIFIED
SOLITAIRE
Happy Pongal
CHENNAI: W-182, NORTH MAIN ROAD ANNA NAGAR WEST EXTN., TN-600 101.
SURAT: SURAT DIAMOND BOURSE DREAM CITY KHAJOD, GUJARAT - 395007.
www.vstardiamonds.com
CHENNAI I SURAT I MADURAI I KARAIKUDI
CHENNAI - 044 4553 6003 1, 9383007477
MADURAI - 9884473330
KARAIKUDI - 9884803349
S. விஜயகுமார்
V. விசாலாட்சி
பள்ளத்தூர்

# அறிந்து கொள்ள வேண்டிய நகரத்தார்...

## மருத்துவர்
# திரு.ஜெயபாலன் வள்ளியப்பன்



மா.அரு.சோமசுந்தரம்.
(தெலுக் இந்தான்- மலேசியா)
தேவகோட்டை.



மருத்துவத் தொழிலில் மகத்துவம் கண்ட பேராளர். தேன் மதுரத் தமிழ் கொண்டு, வண்ணக் கவிதை படைக்கும் பேராசான். சைவம், ஆன்மிகம் என்று கேட்போர் மனம் நிறைக்கும் பேச்சாளர்.

சந்தத் தமிழ் தந்த “அருணகிரிநாதப் பெருமானுக்கு” மலேசிய நாட்டில், ஈப்போ நகரில், 2010-ஆம் ஆண்டு முதல், “அருணகிரிநாதர் விழா” ஆண்டின் முதல் நாள், ஜனவரி முதல் தேதியில் பெருவிழாவாக நடத்தி வருகின்ற பெருமைக்குரியவர்.

இத்தனை சிறப்புக்கும் உரியவர். மலேசிய நாட்டில், ஈப்போ நகரில் வாழ்ந்து வருகின்ற பேராசிரியர், மருத்துவர், ஜெயபாலன் வள்ளியப்பன் அவர்கள் தான். அவர்களை, அவர்களுடைய கலை நயம் மிக்க ஈப்போ இல்லத்தில் சந்தித்து, அவர்களிடமிருந்து பெற்ற விவரங்களை நமது செட்டிநாடு வாசகர்களுடன் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். அவர்களுடைய இல்லத்தில் வழங்கிய தமிழக பாரம்பரியம் மிக்க மதிய உணவிற்குப் பின் எங்கள் சந்திப்பு.

06.10.1969-ஆம் தேதி பிறந்த இவர் “இளையாத்தங்குடி கோவில்” - “பட்டிணசாமி” பிரிவைச் சார்ந்தவர். இவரின் பெற்றோர், தந்தையார்: திரு.கரு.வ.வள்ளியப்ப செட்டியார், தாயார்: திருமதி.கல்யாணி ஆச்சி. இவர்களும் ஈப்போ நகரில் வாழ்ந்து வருகிறார்கள். இவர் பிறந்த ஊர் சிவகங்கை மாவட்டத்திலுள்ள ஆவணிப்பட்டி. திரு.வள்ளியப்ப செட்டியார் அவர்களும், ஆன்மிகச் சிந்தனையும், தயாள குணமும் உடையவர். ஈப்போ லகாட் சாலையில் உள்ள நகரத்தார் தெண்டாயுதபாணி கோவில் காரியக்காரர்களில் ஒருவராக இருந்து வருகிறார். 10.02.2019-ஆம் ஆண்டு இவர் தலைமையில் இக் கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

**கல்வி:**

துவக்க கல்வி, இடை நிலைக் கல்விகளை, ஈப்போ நகரிலும், மருத்துவக் கல்வியினை மணிப்பால் பல்கலைக் கழகத்திலும், முது நிலை மகப்பேறு மருத்துவத்தை மலாயா பல்கலைக் கழகத்திலும், சோதனைக் குழாய் குழந்தை சிறப்பு மருத்துவத்தை மலேசிய தேசிய பல்கலைக் கழக மருத்துவமனையிலும், சோதனைக் குழாய் மற்றும் லேப்ரோஸ்பிக் அறுவை சிகிச்சை சிறப்புப் பயிற்சியினை மும்பை, புது டெல்லி, மற்றும் தாய்லாந்து சியாங் - மாய் பல்கலைக் கழக மருத்துவமனைகளிலும் பெற்றவர்.

**பணி:**

ஈப்போ - பந்தாய் மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் சோதனைக் குழாய் குழந்தை மருத்துவர். ஈப்போ - குவெஸ்ட் அனைத்துலக மருத்துவக் கல்லூரி மருத்துவப் பேராசிரியர்.

**குடும்பம்:**

புதுக்கோட்டை மாவட்டம், “அரிமளம்“ ஊரைச் சார்ந்த மலேசியாவில் “கிள்ளான்” நகரில் இருந்து வருகின்ற பொறியாளர் திரு.திருநாவுக்கரசு செட்டியார், திருமதி. உமையாள் ஆச்சியின் புதல்வி திருமதி கீதா ஆச்சி அவர்கள் இவருடைய துணைவியார். இத்தம்பதிகளுக்கு கார்த்திக் வள்ளியப்பன், கல்யாணி, செந்தில்நாதன் என்று மூன்று குழந்தைகள். பையன்கள் இருவரும், தந்தை போன்றே மருத்துவத் துறையிலும், மகள் கணக்கு ஆய்வாளராக (Chartered Accountant)-வும் இருந்து வருகிறார்கள்.

மருத்துவர் ஜெயபாலன் வள்ளியப்பன் அவர்கள் பெற்ற விருதுகளும், வகித்து வருகின்ற பதவிகளும் எண்ணிலடங்காதவை.

**விருதுகள்:**

மருத்துவம் மற்றும் பொதுச் சேவைத் துறைகளில் சிறப்பாக பணியாற்றியமைக்காக, பேரா மாநில அரசின் உயரிய விருதான “PADUKA MAHKOTA PERAK (P.M.P) என்ற

விருதினை மேன்மை தங்கிய பேரா மாநில சுல்தான் அவர்கள் 2015-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வழங்கி கௌரவித்துள்ளார்.

“ஜோன் தீவி சமுதாயச் சேவை விருது” பேரா மாநில மலேசிய இந்திய காங்கிரஸின் 70-ஆம் ஆண்டு விழாவை ஒட்டி 03/10/2016 அன்று வழங்கப்பட்டது.

“சிறந்த கவிஞர்” விருது 2017-ஆம் ஆண்டு ஈப்போ முத்தமிழ் பாவலர் மன்றத்தாரால் வழங்கப்பட்டது.

“அருணகிரிச் செல்வர்” விருது 01.01.2018 அன்று திருவையாறு ஔவைக் கோட்டத்தாரால் வழங்கப்பட்டது.

“ஆன்மிகச் சேவைச் செம்மல்” விருது 2018-ஆம் ஆண்டு புதுச்சேரி பன்னிரு திருமுறை மன்றத்தாரால் வழங்கப்பட்டது.

“திருப்புகழ் அருட் செல்வர்” விருது 2019-ஆம் ஆண்டு மதுரை திருப்புகழ் சபை நூற்றாண்டு விழாவில் வழங்கப்பட்டது.

“சங்கரத்னா” விருது 2023-ஆம் ஆண்டு மலேசியா இந்து சங்கத்தாரால் வழங்கப்பட்டது.

“திருப்புகழ் திலகம்“ விருது 2023-ஆம் ஆண்டு, திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதினம் 24-வது குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகளால் வழங்கப்பட்டது.

“கந்தபுராணக் கச்சியப்பர்” விருது 2024-ஆம் ஆண்டு பழனியம்பதியில் நடந்த அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் தமிழக அரசாங்கத்தால் வழங்கப்பட்டது.

நூறாயிரம் பேர்களுக்கு மேல், உலகெங்கும் இருந்து வந்து கலந்து கொண்ட, இந்த மாநாட்டில் இவர்களுடைய சிறப்புரை மிகச் சிறப்பாக இருந்தது.

**பொது வாழ்க்கை:**

பொது வாழ்க்கையில் 15-ற்கும் மேற்பட்ட அமைப்புகளில் தலைவராக, உறுப்பினராக சேவையாற்றி வருகிறார். மலேசிய முருக பக்திப் பேரவையின் தோற்றுனர் மற்றும் தலைமை பொறுப்பிலும் இருந்து சேவை செய்து வருகிறார்.

மருத்துவ ஆய்வுக் கட்டுரைகள், ஆன்மிக, இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள் நூற்றுக்கும் மேற்பட்டவைகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. பல இலக்கிய மேடைகளிலும், பல கவியரங்களிலும், பல ஊடக நிகழ்வுகளிலும் தொடர்ந்து பங்கு பெற்று வருபவர். முத்தமிழும், முருக பக்தியும், சங்கமிக்கும் பெருவிழாவாக “அருணகிரி நாதர்” விழாவும், அதையொட்டி ஒரு வாரம், “அமுதம்” விடுமுறைக் கால பண்பாட்டு சமய வகுப்புக்களை தலைமையேற்று ஈப்போவில் நடத்தி வருகிறார்.

சிரவை ஆதீன குரு மகா சன்னிதானம் அவர்களின் அருள் வழிகாட்டலில் வருடந்தோறும் டிசம்பர் மாதம், 25-ஆம் தேதி முதல் மலேசியாவில் பல்வேறு நகரங்களில் மிகப்பெரிய அளவில் நடைபெறும் அருணகிரிநாதர் விழா, முத்தமிழும் முருக பக்தியும் சங்கமிக்கும் ஆன்மிகப் பெருவிழாவாக நடைபெற்று வருகின்றது. மலேசியன் முருக பக்தி பேரவையின் சார்பில் அருணகிரிநாதர் விழாவை கீழ்க்கண்ட ஊர்களில் மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார்.

திருமுருகன் ஆலயம் – சுங்கைவே சிலாங்கூர,

ஸ்ரீ பாலதண்டாயுதபாணி ஆலயம் – சிரம்பான்,

ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயம் – காமரன் மலை,

அருள்மிகு தண்டாயுதபாணி நாட்டுக்கோட்டை செட்டியார் ஆலயம் – பினாங்கு,

அருள்மிகு அன்னை கருமாரியம்மன் ஆலயம் – பாயா பெஸார், லுனாஸ்,

ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலய தேவஸ்தான பரிபாலன சபை – சுங்கை சிபுட்,

அருள்மிகு கருமாரியம்மன் ஆலயம் – பிறை, பினாங்கு, சுப்ரமணிய பரிபாலன சபை, மாசாய் ஜோகூர்,

“அருணகிரிநாதர் விழாவினை” ஈப்போ அருகில் உள்ள பெரு நகரங்களுக்கும் கொண்டு சென்று அங்கு வாழும் தமிழர்களிடையே ஆன்மிகச் சேவை செய்து வருகிறார்.

மலேசியாவில் உள்ள பல முருகன் திருக்கோயில்களில் அருணகிரிநாதப் பெருமானின் சிலை நிறுவப் பெறவும் மருத்துவர் ஜெயபாலன் முயற்சி செய்து வருகின்றார்.

கடந்த நான்கு வருடங்களாக தைப்பூசத் தினத்தன்று மலேசியா அஸ்ட்ரோ தனியார் தொலைக்காட்சி நேரலை நிகழ்ச்சியில் உரையாற்றி வருகின்றார்.

மலேசிய வானொலியில் கண்ணதாசனைப் பற்றி தொடர்ந்து ஒரு வருடம் இவர் பேசிய உரைகள் நல்ல வரவேற்பைப் பெற்றன

“கண்ணதாசனின் திரையிசை இலக்கியம்”, “அமுதே தமிழே”, “ஜெயபாலன் கவிதைகள்”, “தமிழ் புத்தாண்டும் தைப் பொங்கலும்“என்றதலைப்புகளில் புத்தகங்கள் எழுதி பதிப்பித்துள்ளார்.

“அருணகிரியின் அருள் நெறி” என்ற கட்டுரைத் தொகுப்பும் இவர்களுடைய எழுத்துப் பணியின் சிறப்பு ஆகும்.

தெளிந்த நீரோடையென எழுத்தும், தீர்க்கமான, கம்பீரமான பேச்சு நடைக்கும் சொந்தக்காரர்.

14.11.2024 அன்று நடந்த பினாங்கு தண்ணீர்மலை ஆண்டவர் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் இவரின் சிறப்புரையும், குடமுழுக்கு விழா வர்ணனையும் கவனிக்கத் தக்கதாக இருந்தது.பேராசிரியர் பொற்கிழிக் கவிஞர் சொ. சொ.மீ. சுந்தரம் அவர்கள் மருத்துவர் திரு.ஜெயபாலன் வள்ளியப்பன் அவர்களைப் பற்றி முத்தாய்ப்பாக சொன்ன வார்த்தைகள்.....

“.....ஜெயபாலன் அவர்கள் மருத்துவர்களுக்குள் ஒரு கவிஞர், கவிஞர்களுக்குள் ஒரு மருத்துவர். தாய் சேய் நலம் பேணும் இவர், தமிழ்த்தாயின் வளம் பாடும் சேயாகத் திகழ்கிறார்....”

ஈப்போவில் கண்ணதாசப் பெருங் கவிக்கு முதன் முதலாக விழா எடுத்து பெருமை சேர்த்த “மலேசியா நாட்டின் கண்ணதாசன்” மருத்துவர் திரு. ஜெயபாலன் வள்ளியப்பன் அவர்கள், மருத்துவப் பணி, ஆன்மிகப் பணி, இலக்கியப் பணி சிறக்க வாழ்த்தினைத் தெரிவித்து விடை பெற்றேன். ♦

## தனி மனித ஒழுக்கம்

# தலைமுறைக்கு தரவேண்டிய சிறந்த சொத்து!

# வள்ளியம்மை அருணாசலம்



ஒரு பெண் அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டு, இல்லத்தையும் நிர்வகிப்பது என்பது இப்போது சர்வ சாதாரணமாகி விட்டது. ஆனால் ஒரு பெண் வேலைக்கும் போய்க் கொண்டு, வீட்டையும் நிர்வகிப்பதுடன், புத்தகங்கள் எழுதிப் பதிப்பித்தல், யூ.ட்யூப் சேனல் நடத்துதல், ட்ரெக்கிங் செல்லுதல், தன்முனைப்பு மற்றும் ஆளுமை மேம்பாட்டுப் பயிற்சிப் பட்டறைகள் நடத்துதல் மற்றும் செம்பருத்தி, சங்குப்பூ போன்ற மலர்களை வைத்து தேநீர் தயாரிக்கும் தொழிலில் கணவருக்கு உதவுதல், என இத்தனை அவதாரங்களையும் எடுப்பது என்றால் சும்மாவா! செய்கிறாரே ஒருவர்! அஷ்டாவதானி போல அத்தனை பணிகளையும் ஆர்வத்துடனும், ஈடுபாட்டுடனும் செய்யும் வள்ளியம்மை அருணாசலத்தை சந்திக்கலாம் வாருங்கள்.

**நீங்கள் பிறந்த ஊர், பெற்றோர், வேலை மற்றும் குடும்பம் பற்றி கூறுங்கள்.**

நான் பிறந்தது ஓ. சிறுவயலில். பெற்றோர் திரு. அருணாசலம் செட்டியார், திருமதி. உமையாள் ஆச்சி. தற்போது HCL நிறுவனத்தில் Testing துறையில் பணிபுரிகிறேன். திருமணமான ஊர் கோட்டையூர். என் கணவர் திரு. நாராயணன். மாமனார் திரு. சுப்ரமணியன் செட்டியார், மாமியார் திருமதி. மீனாட்சி ஆச்சி. நாங்கள் இரணிக் கோயிலைச் சேந்தவர்கள். எங்களுக்கு இரு மகள்கள்.



பிரேமா நாராயணன்

**எழுத்தில் ஆர்வம் வந்தது எப்படி? இதுவரை எழுதியுள்ள புத்தகங்கள் பற்றி பகிர்ந்து கொள்ளலாமே!**

“சிறு வயதில் எது கிடைத்தாலும் வாசிப்பது வழக்கம். இந்தப் பழக்கம் அப்படியே தொடர்ந்து, தேர்ந்தெடுத்து வாசித்தல் நிகழ்ந்தது. வாழ்க்கை சில சவால்களை நமக்குப் பரிசாகத் தரும் போது அந்த சவால்களை எதிர்கொள்ளக் கற்றுத் தரும் புத்தகங்களை வாசிக்க ஆரம்பித்தேன். இந்தக் கற்றல் நிகழ்ந்த தளத்திலேயே பகிர்தலும் எழுத்தின் மூலம் தொடங்கியது. என்னுடைய புரிதலை மற்றவர்களுக்குப் பகிர்வது எழுத்தின் மூலம் சாத்தியமாகிறது. கற்றலும், புரிதலும் தொடரும் வரை எழுத்தும் தொடரும் என்று நினைக்கிறேன்.

நான் எழுதிய நூல்கள் நான்கு. அவை “40+ மாற்றம்”, சக மனிதர்களை சரியாக அணுகும் முறை, Book of Youngish (இளந்தளிர்களின் புத்தகம்) மற்றும் அலைபேசியுடன் நாம்.




‘40+ மாற்றம்’ என்ற புத்தகம், என் வாழ்வில் நடந்த சம்பவங்களையும், அவை நிகழும் போது அவற்றை எப்படிப் பார்த்தேன், நாற்பது வயதில் எப்படி பார்க்கிறேன் என்பது பற்றியது.

‘சக மனிதர்களை சரியாக அணுகும் முறை’ என்ற நூலில் மற்றவர்களை மதிப்பீடு செய்வது பற்றி எழுதினேன். மதிப்பீடு செய்வதால் நிகழ்வது என்ன, மதிப்பீடு செய்வது எது வரை சரியானது, மதிப்பீடு செய்யும் பழக்கத்திலிருந்து எப்படி வெளியே வருவது என்பனவற்றை அலசும் புத்தகம்.




‘இளந்தளிர்களின் புத்தகம் (Book of Youngish)’, பதின்ம வயதில் இருக்கும் பிள்ளைகளுக்கு மனம் பற்றிய புரிதலை எளிமையாக விளக்கும் புத்தகம். அறிவுரைகள் கூறுவது போல இல்லாமல் கதைகளும், படங்களும் நிறைந்து இருக்கும்.

‘அலைபேசியுடன் நாம்’ – இது என்னுடைய முக்கியமான படைப்பு. அலைபேசியின் ஆபத்துகளைப் பேசியபடியே எல்லோரும் அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதைத் தேவையான பொழுது, தேவையான அளவு எப்படிப்

பயன்படுத்துவது என்பது பற்றியது இப்புத்தகம். அப்படியே அலைபேசியை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தினாலும் அதன் பிடியிலிருந்து குற்ற உணர்வு இல்லாமல் வெளியே வர உதவும் புத்தகம். இந்த நூலுக்குக் கிடைத்து வரும் நேர்மறையான பின்னூட்டங்கள் மற்றும் பாராட்டுகள் இன்னும் தொடர்கின்றன."

**தங்கள் பதிப்பகம் குறித்தும், அதில் வெளியிட்டுள்ள நூல்கள் குறித்தும் சொல்லுங்கள்.**

"சில்வர்பிஷ் (Silverfish – The Writers Confluence) என்பது எங்கள் பதிப்பகத்தின் பெயர். என் கணவர் திரு. நாராயணன் அவர்கள் பதிப்பகத்தை நடத்தி வருகிறார். வலையொளி (You tube Channel), இணைய வழி மற்றும் நேரடி வகுப்புகள் (Online & Offline classes), இணைய வழி மற்றும் நேரடி உளவியல் ஆலோசனைகள் (Online & Offline counselling & psychotherapy) இவை அனைத்தும் சில்வர் பிஷ் எனும் குடையின் கீழ் வரும் கிளைகள்.

நான் எழுதிய நூல்கள் தவிர தியானம், நீண்ட ஆயுளுக்கு 101 வழிகள், மொழியோடு விளையாடு, நன்னெறிக் கதைகள், Parenting Revo, Decode Your Dream Career போன்ற பிற எழுத்தாளர்களின் புத்தகங்களையும் வெளியிட்டுள்ளோம். அனைத்துமே உடல், மனம், ஆன்மிகம் மற்றும் குழந்தைகளுக்கான கதைகள், விளையாட்டுகள் பற்றிய நூல்கள்".

**சக மனித உறவுகள் மற்றும் சமூகம் மீதான அக்கறை போன்ற விஷயங்களை உங்கள் நூல்களில் மையப்படுத்துகிறீர்கள். இதற்கான காரணம் என்ன?**

"மனித உறவுகளில் நிறைய சிக்கல்களை சந்தித்து, சிக்கல்கள் இல்லாமல் இருப்பது எப்படி என்று யோசித்துப் பின்னர் சிக்கல்களை (சிக்கல்களைத் தரும் உறவுகளையும் கூட) எல்லாம் தவிர்க்க முடியாது, எப்படி அவற்றை எதிர்கொள்வது என்று வேண்டுமானால் தெரிந்து கொள்ளலாம் என்று புரிந்து கொண்டேன். தவறு நம் மீது இருக்கிறதோ இல்லையோ, நம்மை மாற்றிக் கொள்வதின் மூலம்தான் நாம் நிம்மதியாக இருக்க முடியும் என்ற புரிதல் "தனி மனித ஒழுக்கத்தின்" அவசியத்தைப் புரிய வைத்தது. தனி மனிதனின் மாற்றமே உறவுகளின் மாற்றம், சமூகத்தின் மாற்றம் என்பது புரிந்ததால் இயல்பாகவே அவற்றை நோக்கியே என் வாசிப்பும் எழுத்தும் செல்கிறது என்று நினைக்கிறேன்".

**ஆன்மிகத்தின் மீதான ஈடுபாடு குறித்து.**

"வாழ்க்கையில் சவால்கள் நம்மை நெருக்கும் போது அனைவரும் தேடிச் செல்லும் வழி ஆன்மிகம். நானும் சென்றேன். பெருவாரியான மக்கள் நினைப்பது போல மதம், பக்தி இவற்றையே ஆன்மிகம் என்று நினைத்துப் பயணித்து, ஒரு வழியாக உண்மையான ஆன்மிகம் என்ன என்று தெரிந்து கொண்டு என் பயணம் தொடர்கிறது.

உண்மையான ஆன்மிகத்தைத் தெரிந்து கொள்ள என் பயணத்தில் உதவிய நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஞானி திரு. பகவத் ஐயா அவர்களுக்கும், தன்னுடைய சொற்பொழிவுகள் மற்றும் எழுத்தின் மூலம் என்னை வழி நடத்தும் திரு. ஓஷோ அவர்களுக்கும் என்னுடைய நன்றிகள். படைப்புத் தத்துவத்தைப் (Concept of Creation) புரிய வைத்த ஸ்ரீ ஸ்ரீ பரமஹன்ச யோகானந்தா அவர்களுக்கும், இறைவனும் (God) படைத்தவனும் (Creator) வேறு என்பதைப் புரிய வைத்த திரு. பிரதீப் முகர்ஜீ அவர்களுக்கும் என் நன்றிகள்".

**எப்போதிலிருந்து யூ.ட்யூப் சேனல் நடத்துகிறீர்கள்? உங்கள் காணொலி பதிவுகள் பற்றியும் பார்வையாளர்களின் கருத்துகள் குறித்தும் சொல்லுங்களேன்..**

"2020 முதல் வலையொளியில் (யூ.ட்யூப் தளத்தில்) இருக்கிறேன். நான் வாசித்த புத்தகங்களைப் பற்றிய மதிப்புரையும், புத்தக சுருக்கமும், நான் சந்தித்த மனிதர்களின் பணி சிறப்பாகவும் மற்றவர்களுக்குத் தேவையானதாகவும் இருக்கும் போது அவர்களின் நேர்காணலையும் பதிவிடுகிறேன். உடல், மனம், ஆன்மிகம், முற்பிறவிகள் மற்றும் என்னுடைய சில முக்கியமான பயணங்கள் பற்றிய காணொலிகளையே வலையொளியில் காண முடியும்.

புத்தகம் வாசிக்க விருப்பமும், நேரமும் இல்லாத நண்பர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதாக அவர்கள் பதிவிடும் கருத்துக்களின் மூலம் தெரிந்து கொள்கிறேன். சில புத்தகங்களின் ஆசிரியர்கள் அவர்களின் புத்தகங்கள் பற்றிய என்னுடைய மதிப்புரைகளைப் பாராட்டியது உண்டு. பகவத் ஐயாவின் புத்தகங்களுக்கான விளக்கங்களுக்கு ஐயாவிடம் இருந்து கிடைத்த பாராட்டுக்கள், ஐயாவை நேர்காணல் எடுக்கக் கிடைத்த வாய்ப்பு இவையும் மகிழ்ச்சி அளிக்கின்றன".

**தங்களுக்கு ஆர்வமுள்ள மற்ற துறைகள் எவை?**

"மலையேற்றம் (Trekking), தனிமையாகச் செல்லும் பயணம் (Solo Travel) இவை எனக்கு மிகவும் பிடிக்கும். அதைத்தவிர, ஆன்மிகம், தனி மனித ஒழுக்கம், விழிப்பு உணர்வு (Awareness/Mindfulness) இவற்றில் என் தேடலும், வகுப்புகள் மற்றும் எழுத்தின் மூலம் என் பகிர்தலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இவையே என்னுடைய ஆர்வமாகவும் இருக்கின்றன".

**எதிர்கால லட்சியம் என்ன? நகரத்தார் பெண்களுக்குச் சொல்ல விரும்பும் செய்தி என்ன?**

"இப்போது செய்து கொண்டிருக்கும் பணிகளை உற்சாகமாக, தேடல் (searching), கற்றல் (Learning) மற்றும் பகிரலுடன் (Sharing) தொடர வேண்டும் என்பதே என் விருப்பம்.

**பெண்களுக்கு மட்டும் என்று இல்லாமல் பொதுவாக எனக்குத் தெரிந்ததைக் கூறுகிறேன்.**

வெளியில் என்ன நடக்கிறது, மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று வெளியிலேயே இருக்கும் நம் கவனத்தை நம் பக்கமும் சற்று திருப்பினால் நமக்கும் நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கும் நல்லது என்று

நினைக்கிறேன். இது ஒன்றைச் செய்தாலே “தனி மனித ஒழுக்கம்” என்ற இன்றியமையாத பண்பை அடைய முடியும் என்பது என் தனிப்பட்ட கருத்து.

குறிப்பாக, நம் உடல் என்ன செய்கிறது என்று கவனித்தால் நம் உடலுக்கு என்ன உணவு தேவை, எதைத் தவிர்த்தால் நல்லது, என்ன நோய்கள் எப்போது வருகின்றன, என்ன செய்தால் குணப்படுத்தலாம் போன்ற பல செய்திகள் நமக்குக் கிடைக்கும். நாம் ஆரோக்கியமாக இருந்தால் நம்மைச் சுற்றி இருப்பவர்களும் நிம்மதியாக இருப்பார்கள். மற்றவர்களுக்கு நாம் செய்யும் ஆகச் சிறந்த உதவி நிச்சயமாக நம் ஆரோக்கியம் மட்டுமே.

நம் மனம் எப்படி செயல்படுகிறது என்பதைக் கவனிக்க ஆரம்பித்தால் மனதின் விளையாட்டுக்கள் புரியும். இதனால், மனதின் அடிமையாக (Slaves of our mind) இருக்கும் நாம் மனதின் தலைவனாக (Master of our Mind) மாற முடியும். மனம் சம்மந்தப்பட்ட நோய்களைத் தவிர்த்து நிம்மதியாக இருக்க முடியும்.

உண்ணுதல், எண்ணுதல் (thinking) போன்று உடலாலும், மனதாலும் நாம் செய்யும் அனைத்து செயல்களையும் கவனிக்க ஆரம்பித்தால் நம்மைச் சுற்றி இருப்பவர்களின் தவறுகளை மட்டுமே கவனித்துக் கொண்டிருந்த நமக்கு நம் தவறுகளும் புரிய ஆரம்பிக்கும். நம்மை நாமே திருத்திக் கொள்ளலாம். மற்றவர்கள் செய்யும் தவறுகள் பெரிதாகத் தெரியாது. மற்றவர்களை மன்னிக்கவும், நேசிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருப்போம். இதனால், உறவுகளில் சிக்கல்கள் இல்லாமல் நிம்மதியாக இருக்க முடியும். கோயில்களில் மட்டுமே இறைவனைத் தேடிக் கொண்டிருந்த நமக்கு, இறைவன் நமக்குள்ளும், நம்மைச் சுற்றி இருக்கும் அனைத்து உயிர்களிலும் நிறைந்து இருக்கிறார் என்பது புரிய ஆரம்பிக்கும்.

இப்படி ஒவ்வொருவரும் தனி மனித ஒழுக்கத்துடன் இருக்கும் போது, நாம் மாறுகிறோம், நம் குடும்பத்தினர் மாறுகிறார்கள், சமூகம் மாறுகிறது. அடுத்த தலைமுறைக்கு “தனி மனித ஒழுக்கம்“ எனும் சொத்தை (Legacy) விட்டுச் சென்ற பெருமையும் நமக்குக் கிடைக்கும். நகரத்தார் என்று வரும் போது நிறைய பெருமைப்படக் கூடிய செய்திகள் உள்ளன. அவற்றைப் பற்றி வாய்ப்புக் கிடைக்கும் போது பேசுகிறோம். ஆனால், சில சிக்கல்களை நாம் பேசுகிறோமா என்பது எனக்குத் தெரியவில்லை.

சூழ்நிலைகளுக்கு ஏற்ப சட்ட திட்டங்களும் இருந்தால்தான் அவை நம் வாழ்வுடன் பொருந்திப் போகும். நாம் பயன்படுத்தும் அலைபேசி, கணினி இவை மட்டும் அடிக்கடி புதுப்பிக்கப்பட்டால் போதுமா? சட்ட திட்டங்களும் காலத்திற்கு ஏற்ப மாறினால்தான் அவை நம் வாழ்வுடன் பொருந்திப் போகும். இல்லை என்றால் தொடரும் சிக்கல்களைத் தவிர்ப்பது கடினம்.

நிறைய சடங்குகளை, நம் முன்னோர்கள் செய்தது போல செய்யாமல் காலத்திற்கு ஏற்ப மாற்றிக் கொள்கிறோம். உதாரணத்திற்குப் பல நாட்கள் ஒன்று கூடித் திருமணம் செய்து கொண்டிருந்த நாம் இப்போது ஒரே நாளில் திருமணத்தை முடிக்கிறோம். சீர் வரிசையைப் பரப்பிக் கொண்டிருந்த நாம் இப்போது அதை நிறுத்தி விட்டோம். சொத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை என்று சட்டம் இயற்றப்பட்டு விட்டது. அது போல, பணம், நகைகள், சாமான்கள் சம்மந்தப்பட்ட சிலவற்றை மாற்றிப் பெரியவர்கள், சுய பெருமைக்காக எழுதாமல் சமூக அக்கறையுடன் பேசுபவர்கள் மற்றும் எழுதுபவர்களுடன் இணைந்து ஒன்று கூடி, பொதுவான விதிகளாக (Rules) வகுத்துக் கொடுத்தால் அடுத்த தலைமுறை பிள்ளைகளுக்கு நல்லது. சமூக அக்கறை கொண்ட இளம் தலைமுறை பிள்ளைகளையும் இணைத்து ஒரு குழுவாக உருவாக்கி இந்தப் பணியை மேற்கொள்ளலாம். நாம் ஒன்று கூடி தற்போதைய கால சூழ்நிலைக்கு ஏற்ப நம் சமூகத்தின் சட்ட திட்டங்களை மாற்றி அமைப்பது காலத்தின் கட்டாயம் மற்றும் தேவையும் கூட. சிந்திப்போம்! செயல்படுவோம்!”

உணர்வுப்பூர்வமாக மட்டுமல்லாம்மல் மிக அறிவுப்பூர்வமாகவும், யதார்த்தமாகவும் சிந்திப்பதிலும், பேசுவதிலும், எழுதுவதிலும் தேர்ந்த வள்ளியம்மையின் சொற்கள் நம்மை யோசிக்க வைப்பது நிஜம்! ♦




Dr.மணிஸ் பல் மருத்துவமனை

No: 315/24 MAM பில்டிங் பூரணி மருத்துவமனை எதிரில்
(மீனாட்சி பேன் ஹவுஸ் காம்ப்ளக்ஸ் மாடி)
செக்காலை ரோடு - காரைக்குடி
வார நாட்கள் காலை 9.30 முதல் 1.30 வரை
மாலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு முன் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்

இலவச பல் பரிசோதனை செய்யப்படும்

பல் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற Dr.மணிஸ் பல் மருத்தவமனைக்கு வருகை தாருங்கள்.

பல் பாதுகாப்பிற்கு காலை மற்றும் இரவு இருவேளையும் பல் துலக்குங்கள்

Dr.S.மணிகண்டன்,BDS., MBA(HM)
9551624126 / 7904079923

27 கிளைகள், 36 வருட அனுபவம்




# ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி

Incredible India

RECOGNIZED GOVT. OF INDIA TOURISM

98421 62416
97918 48265
98424 47305
98421 62265



H.O. 10, வடக்கு ஆவணி மூல வீதி. மதுரை-1

## SPECIAL TOURS 2024

www.srimurugantravel.com

- 10 நாள் ஆக்ரா-காசி அயோத்தியா — மாதந்தோறும் 9,21 — Rs. 13500/-
- 13 நாள் டெல்லி-ஆக்ரா அயோத்தியா — மாதந்தோறும் 6,18,27 — Rs. 17500/-
- 6 நாள் ஸ்ரீரடி பண்டரிபுரம் — மாதந்தோறும் 1,8,15,22 — Rs. 8000/-
- 10 நாள் குஜராத்-துவாரகா பட்டேல்சிலை — மாதந்தோறும் 17 — Rs. 17000/-
- 17 நாள் பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி — மாதந்தோறும் 10,20 மே முதல் — Rs. 30000/-
- 13 நாள் பத்ரிநாத் கேதார்நாத் — மாதந்தோறும் 10,20 மே முதல் — Rs. 25000/-
- 14 நாள் முக்திநாத்-நேபாள் கொல்கத்தா — மாதந்தோறும் 18 — Rs. 27000/-
- 15 நாள் நவஜோதிர்லிங்கம் — மாதந்தோறும் 18 — Rs. 20000/-
- 10 நாள் சிம்லா-மணாலி ஆக்ரா — ஏப் 1,8,15,22,29 மே. 1,8,20,27 — Rs. 18000/-
- 13 நாள் அமர்நாத் — ஜூலை முதல் — Rs. 16000/-

- 2 நாள் மும்பை-ஸ்ரீரடி — தினந்தோறும் — Rs. 14990/-
- 4 நாள் கோவா SPL — Rs. 24990/-
- 4 நாள் டெல்லி-ஆக்ரா ஜெய்ப்பூர் — வாரந்தோறும் வியாழன் — Rs. 26990/-
- 5 நாள் அந்தமான் ஹேவலோக் — தினந்தோறும் — Rs. 29990/-
- 5 நாள் காஷ்மீர் குல்மார்க் — வாரந்தோறும் புதன் — Rs. 44990/-
- 5 நாள் டார்ஜலிங் கேங்டாக் — வாரந்தோறும் புதன் — Rs. 39990/-
- 7 நாள் NORTH EAST — வாரந்தோறும் திங்கள் — Rs. 44990/-
- 3 நாள் பூரி புவனேஸ்வர் — வாரந்தோறும் வெள்ளி — Rs. 24990/-
- 7 நாள் குஜராத் துவாரகா — வாரந்தோறும் செவ்வாய் — Rs. 35990/-

- 6 நாள் காசி அயோத்தியா — Rs. 34990/-
- 8 நாள் பத்ரி-கேதார் — வாரந்தோறும் ஞாயிறு — Rs. 44990/-
- 12 நாள் பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி — வாரந்தோறும் திங்கள் — Rs. 54990/-
- 6 நாள் முக்திநாத் நேபாள் — ஏப்ரல் 1,18 மே 1,10,18 — Rs. 29990/-
- 6 நாள் பூடான் SPL — வாரந்தோறும் செவ்வாய் — Rs. 44990/-
- 8 நாள் காஷ்மீர் லே-லடாக் — வாரந்தோறும் ஞாயிறு — Rs. 64990/-
- 5 நாள் சிம்லா-குளு மணாலி — வாரந்தோறும் புதன் — Rs. 27990/-
- 5 நாள் லே-லடாக் — வாரந்தோறும் — Rs. 54990/-
- 6 நாள் நைனிட்டால் முசௌரி-கார்பெட் — வாரந்தோறும் புதன் — Rs. 34990/-

- 6 நாள் சிங்கப்பூர் மலேசியா — Rs. 84,990/-
- 5 நாள் சிங்கப்பூர் மலேசியா — Rs. 74,990/-
- 10 நாள் சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து — Rs. 1,34,990/-
- 8 நாள் சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து — Rs. 94,990/-
- 5 நாள் பாங்காக் பட்டாயா Standard — Rs. 52,000/-
- 4 நாள் பாங்காக் பட்டாயா Basic — Rs. 37,990/-
- 5 நாள் புக்கட் கராபி — Rs. 64,990/-
- 8 நாள் Exclusive தாய்லாந்து — Rs. 94,990/-
- 4 நாள் மாலத்தீவு Special — Rs. 59,990/-

- 5 நாள் ஸ்ரீலங்கா Special — Rs. 44,990/-
- 8 நாள் Exclusive ஸ்ரீலங்கா — Rs. 64,990/-
- 5 நாள் இந்தோனேசியா பாலி — Rs. 64,990/-
- 6 நாள் வியட்நாம் கம்போடியோ கலாங் விரிகுடா — Rs. 94,990/-
- 7 நாள் Exclusive சீனா — Rs. 1,54,000/-
- 10 நாள் ஹாங்காங் மக்காவ் — Rs. 1,34,990/-
- 6 நாள் ரஷ்யா Special — Rs. 1,34,990/-
- 4 நாள் எகிப்து Special — Rs. 1,29,990/-
- 8 நாள் எகிப்து Cruise — Rs. 1,65,990/-

- 5 நாள் துபாய் அபுதாபி — Rs. 74,990/-
- 7 நாள் சௌத்கொரியா — Rs. 1,69,990/-
- 7 நாள் கென்யா — Rs. 1,59,990/-
- 9 நாள் ஆஸ்திரேலியா — Rs. 2,94,990/-
- 11 நாள் ஆஸ்திரேலியா நியூசிலாந்து — Rs. 5,29,990/-
- 9 நாள் ஜப்பான் — Rs. 2,94,990/-
- 12 நாள் ஈரோப் Special — Rs. 2,74,990/-
- 4 நாள் உஸ்பெகிஸ்தான் — Rs. 54,990/-
- 4 நாள் கஜகஸ்தான் அல்மைட்டி — Rs. 74,990/-

## தைப்பூசம் ஸ்பெஷல் 2025

சிங்கப்பூர் - மலேசியா பினாங்கு

6-2-2025 ரூ. 79,990 முதல்



## தைப்பூசம் ஸ்பெஷல் 2025

மலேசியா-ஜென்டிங்

8-2-2025 ரூ. 37,990 முதல்

இது தவிர மேலும் பல சுற்றுலாக்கள் மற்றும் குருப் சுற்றுலா, தனி நபர் சுற்றுலா, கல்வி, கம்பெனி குருப் சுற்றுலாக்களுக்கு 97918 48265 / 98421 62416

கிளைகள் : சென்னை, வடபழனி, பெரியமேடு, மாம்பழம், மைலாப்பூர், காஞ்சிபுரம், பாண்டிச்சேரி, காரைக்குடி, கோவை, திருச்சி, பழநி, சேலம், திருநெல்வேலி, ஈரோடு, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருப்பூர், இராஜபாளையம்

24x7 Calling Mobile : 98424 47305

# வாங்க... வாங்க... வியட்நாமுக்கு வாங்க...

## 10 அண்டை நாடு – கம்போடியா



சோமலெ
சோமசுந்தரம்




### பல்லி, பாச்சைகள் எங்கள் ஜாதி!

வியட்நாமிற்கு சுற்றுலா செல்லும் பலரும் அதன் அண்டை நாடான கம்போடியாவையும் பார்க்க விரும்புகிறார்கள். அந்நாட்டில் உலகின் மிகப்பெரிய இந்துக் கோவிலான 'அங்கோர் வாட்' இருப்பதே அந்த ஆசைக்குக் காரணம்.

தாய்லாந்தை ஒப்பிடும் போது வியட்நாம் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியுள்ளது. கம்போடியா அந்த இரண்டு நாடுகளையும் விட பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. தமிழ்நாட்டை விட பரப்பளவில் கிட்டத்தட்ட ஒன்றரை மடங்கு பெரிய (1,81,035 சதுர கிலோமீட்டர்) கம்போடியாவின் 1.7 கோடி மக்கள் தொகையோ தமிழக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு தான். பரந்த பகுதி, குறைந்த மக்கள் தொகை, பொருளாதார வளர்ச்சி அடையாத சூழ்நிலை ஆகிய காரணங்களால், கம்போடியா முழுவதும் நமது கிராமத்துப் பகுதிகளைப் போல, போக்குவரத்து நெரிசலன்றி, அமைதியான இயற்கை காட்சிகளோடு காட்சியளிக்கிறது.

அங்கோர் வாட் கோவிலுக்கு அருகில் உள்ள பெரிய நகரம் என்பதால் சியேம் ரீப் (Siem Reap) ஆசியாவின் முக்கியமான சுற்றுலா நகரங்களில் ஒன்றாகும். அங்கு நாங்கள் தங்கிய நட்சத்திர (?) விடுதியின் குளியல் அறையில் பல்லியையும், பாச்சைகளையும் பார்த்தபோது சற்று அதிர்ச்சியாகவே இருந்தது! பாரதியின் 'காக்கை குருவி எங்கள் ஜாதி' பாடல் நினைவில் வந்து எங்களின் பதட்டத்தை சற்று குறைத்தது! கொரோனா தொற்று காலத்தில் சுற்றுலா விடுதிகள் மூடப்பட்டதன் விளைவே இந்த நிலைக்குக் காரணம் என்றும், படிப்படியாக சுற்றுலா பயணிகளின் வருகை கூடி வருவதால், விடுதிகளின் தரம் காலப்போக்கில் சீரடையுமென்றும் உள்ளூர்வாசிகள் எங்களுக்குத் தங்கள் நாட்டைப் பற்றி நம்பிக்கையூட்டினர்.

### கம்போடியாவும் தமிழ்நாடும்

1863 முதல் 1953 வரை (இடையே 1943 –1945 வரை ஜப்பானியர்கள் ஆளுகையைத் தவிர) பிரெஞ்சு பாதுகாவலில் இருந்த கம்போடியா, 1953–இல் சுதந்திர நாடாகியது. பிரெஞ்சு ஆளுகைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கம்போடியாவிற்கும். தமிழகத்தின் பல்லவ மற்றும் சோழ அரசர்களுக்கும் தொடர்புகள் இருந்துள்ளன.

கி.பி. 11–ஆம் நூற்றாண்டில் கடல் வழியாக தென் கிழக்காசிய நாடுகளில் பட்டு வணிகம் செய்த சோழ மன்னர்கள் கம்போடியாவின் 'அங்கோர்' மற்றும் 'கம்புஜா' முடியரசுகளுடன் திருமண உறவுகள், வணிக மற்றும் அரசியல் கூட்டணிகள் மூலம் கம்போடியாவில் தடம் பதித்துள்ளனர்.

பல்லவ மன்னர் பரமேஸ்வர வர்மன் வாரிசு இன்றி கி.பி.731–இல் இறந்த போது, அவருடைய தூரத்து உறவினர்களான வியட்நாமின் 'சம்பா' முடியரசைச் சார்ந்த பல்லவமல்லா என்ற 12 வயது சிறுவன் பல்லவர்களின் அடுத்த மன்னராக, இரண்டாம் நந்திவர்மன் என்ற பெயரில் முடிசூட்டப்பட்டார்!

பல்லவ மன்னர்களைப் போல பல கம்போடிய மன்னர்கள் பெயர்களும் 'வர்மன்' என்று முடிகின்றன கம்போடிய மக்களில் 95 சதவிகிதத்தினர் 'கெமெர்'



இனத்தினர். அவர்களின் மொழிக்கும் அதே பெயர். கம்போடியாவின் அரசு மொழியான 'கெமெர்' மொழியின் எழுத்து வடிவம் பல்லவ எழுத்துக்களில் இருந்தே உருவானது.

### அங்கோர் வாட்

இந்தியா என்றால் வெளிநாட்டவருக்கு தாஜ் மஹால் நினைவுக்கு வருவது போல் கம்போடியா என்றால் மனதில் உடனே வருவது அங்குள்ள உலகின் மிகப் பெரிய இந்துக் கோவிலான அங்கோர் வாட் ஆகும். பல நூற்றாண்டுகளாக மத, அரசியல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் போர்கள் ஆகியவற்றின் காழ்ப்புணர்ச்சிகளாலும், பல நூற்றாண்டுகளாக இயற்கையின் தாக்கத்தாலும், மிகவும் சிதைந்த நிலையில் உள்ள தற்போதைய 'அங்கோர் வாட்' என் பார்வையில் கோவிலாகக் காட்சியளிக்கவில்லை.





தற்போது அங்குள்ள எஞ்சியுள்ள சிலைகள் துண்டிக்கப்பட்ட அல்லது பாழடைந்த நிலையில் இருப்பதாலும், நாம் பழகிப்போன அபிஷேகம், தீபாராதனை போன்ற வழிபாடுகள் இல்லாததாலும், அங்கோர் வாட் ஆலயமாக இல்லாமல் தொல்பொருள் ஆய்வுக் களஞ்சியமாக, முற்றிலும் பாதுகாக்கப்படாத வரலாற்றுப் பெட்டகமாகவே என் கண்ணில் தென்பட்டது. பிரம்மாண்டமான கோவிலை எதிர்பார்த்துச் சென்ற எனக்கு சற்று ஏமாற்றமே!

### 37 டாலரில் 37 சொர்க்கங்கள்!

அங்கோவர் வாட் கோவிலைக் கட்ட 37 வருடங்கள் ஆகியதாலும், இந்து மத நம்பிக்கையின் படி 37 சொர்க்கங்கள் இருப்பதாலும், வெளிநாட்டவர்களுக்கான ஒரு நாள் நுழைவுச் சீட்டின் விலை 37 அமெரிக்க டாலர்கள்! கொடுக்கின்ற 37 டாலர்களுக்கு நீங்கள் 37 சொர்க்கங்களையும், 32 நரகங்களையும் (கல்வெட்டுக்களில்) பார்த்துவிடலாம்!

400 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்தக் கோவில் வளாகத்திற்குள் நுழைவதற்கு முன்பு நம்மை வரவேற்கின்ற ஐந்து கிலோமீட்டர் சுற்றளவில் உள்ள அகழியைப் பார்க்கும்போது, 900 வருடங்களுக்கு முன்பு எப்படி இதையெல்லாம் கட்டினார்கள் என்ற ஆச்சரியத்தில் மூழ்குவது இயல்பே! உள்ளே சென்றதும் காண்கின்ற பிரகாரத்தில் உள்ள நான்கு கோபுரங்கள், தெப்பக்குளம், மஹாபாரதத்தையும், ராமாயணத்தையும் விவரிக்கும் எண்ணற்ற சிற்பக் கல்வெட்டுக்கள், இவை அனைத்தையும் சிதைந்த நிலையில் பார்த்தாலும் நம்மை மூக்கில் கை வைத்து பிரமிக்க வைக்கிறது அங்கோர் வாட்! மையப் பகுதியில் செவ்வக வடிவில் உள்ள 699 அடி உயர மூன்று அடுக்கு கோவிலின் சிற்பக் கலை வேலைப்பாடுகளை உன்னிப்பாகப் பார்த்து மகிழ பல நாட்கள் வேண்டும்.

### விஷ்ணு புத்தராக மாறிய கதை

இரண்டாம் சூரியவர்மனால் கி.பி. 1113-1150 கால கட்டத்தில் கட்டப்பட்ட இந்தக் கோவிலின் இயற்பெயர் 'பரம விஷ்ணு லோகா'. இங்கு விஷ்ணு விக்கிரகமே மையமாக வைத்து வழிபடப்பட்டது. கி.பி.1171-இல் ஆட்சியில் இருந்த ஏழாம் ஜெயவர்மன், தன் மனைவி புத்த மதத்தை பின்பற்றியதால் அவர் விருப்பப்படி விஷ்ணு சிலையை புத்தராக மாற்றி, பல இந்து சிலைகளை அகற்றி, புத்த கலைச் சிற்பங்களை புதிதாக சேர்த்தார்.



கோவில் நுழைவாயிலின் வெளிப் பிரகாரத்தில் உள்ள சிலைக்கு முன் மட்டுமே ஊதுபத்தி, மலர்கள் ஆகியவை தென்பட்டன. அந்த விஷ்ணு சிலையின் எட்டு கைகளும் அப்படியே உள்ளன. தலையை மட்டும் அகற்றி விட்டு அதில் புத்தர் தலையை வைத்துள்ளனர்.

(தொடரும்)




சென்ற இதழ் தொடர்ச்சி

# நகரத்தார் திருப்பணிகள்



சொ.சொ.மீ.சுந்தரம்

115) திருவண்ணாமலை – (Pincode -- 606 601):

பஞ்சபூதத் திருத்தலங்களில் நெருப்புக்குரிய திருத்தலமான திருவண்ணாமலை. நினைத்தாலே முக்தி தரும் நெடும்பதியாகும். விழுப்புரத்திலிருந்து செஞ்சி வழியாகத் திருவண்ணாமலை செல்லலாம். இது கார்த்திகைப் பௌர்ணமி நாளில் தீபப் பெருவிழா நடக்கும் தலம். இங்கே அண்ணாமலையார் உண்ணாமுலையாளுடன் அருள்மழை பொழிகிறார். அருணகிரியாரை ஆட்கொண்ட முருகப் பெருமான் அவருக்குக் கோபுரத் திளையனாராகவும், கம்பத்து இளையனாராகவும் இங்குதான் காட்சி தந்தார்.

பிரமன் அரிஎன்று இருவரும்தம் பேதைமையால்
பரமம் யாம்பரமம் என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனார் அழல்உருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ

என்று திருவாசகம் பாடும் அழல் உருவே இப்போது மலை உருவாயுள்ளது. மலையின் உயரம் கடல் மட்டத்திற்கு மேல் 2668 அடியாகும். இந்த மலையே சிவபிரான் என்பதால் இங்கு மலை வலம் மிகச் சிறப்பானது. இங்கு அண்ணாமலையார் சுத்தமான தங்கத்தால் சொர்ணபந்தனம் செய்யப் பெற்றுள்ளார். சம்பந்தர், அப்பர், மணிவாசகர் மூவரும் பாடிய இத்தலத்தில் பகவான் ரமணர், சேஷாத்திரி சுவாமிகள், ஈசான்ய ஞானதேசிகர், யோகிராம் சுரத்குமார் எனப் பல ஞானிகள் வாழ்ந்தனர். ஆலயத்தில் கிழக்குக் கோபுரம் பதினொரு நிலைகளைக் கொண்டது. உயரம் 217 அடி. இங்குள்ள கோபுரத்து இளையனார் எனப்படும் முருகனுக்கு மகான் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் வேல் சார்த்தி வழிபட்டார். பகவான் ரமணர் தவம் செய்த இடமான பாதாள லிங்கக் கோயில் கிழக்குக் கோபுரத்துக்கு அருகில் உள்ளது. திருநமச்சிவாயர், குகை நமச்சிவாயர், விருபாட்சத் தேவர் முதலிய ஞானிகள் இங்கு வாழ்ந்தார்கள். இங்கு வாழ்ந்த தெய்வசிகாமணி தேசிகர் இராமேஸ்வரம் யாத்திரை சென்றார். அவரை வணங்கிய இராமநாதபுரம் மன்னர் வேண்டுகோளை ஏற்றுக் குன்றக்குடியில் திருவண்ணாமலை ஆதீனம் என்ற பெயரில் ஏற்படுத்திய மடம் தான் இன்றையக் குன்றக்குடி மடம் ஆகும். வள்ளல் பச்சையப்ப முதலியார் இக்கோயில் அர்த்தசாமக் கட்டளைக்கு ஒரு லட்சம் வராகன் (மூன்றரை லட்ச ரூபாய்) சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்னால் கொடுத்த செய்தி கல்வெட்டில் பதிக்கப் பெற்றுள்ளது. இத்தலத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தார் செய்த திருப்பணிகளை பிரமதேவன் கூட அளக்க முடியாது.

திருவண்ணாமலையில் நகரத்தார் திருப்பணிகள்:

1) கோட்டையூர், அ.க. வகையினரால், தம் பொருள் கொண்டும், நகரத்தார் பொருளுதவி கொண்டும், சுவாமி கோயில், அம்மன் கோயில், விநாயகர் முதலிய பரிவார தேவர் கோயில்கள், அணியொட்டிக் கால்கள் அமைந்த பிரகாரங்கள், துவஜஸ்தம்ப மண்டபங்கள், துர்க்கையம்மன் கோயில், கொலு மண்டபம் முதலியன பன்னிரெண்டு லட்சத்து முப்பத்தைந்தாயிரம் செலவில் திருப்பணி செய்யப் பெற்றுள்ளன.

2) கடியாபட்டி, தீ.சொ.நா., தீ.அ. வகையினரால் ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் ராஜ மண்டபம் கட்டப் பெற்றது.

3) கானாடுகாத்தான், ராஜா சர் அண்ணாமலை செட்டியாரால் எழுபத்தைந்தாயிரம் ரூபாய் செலவில் பிரம்ம தீர்த்தக் குளம் அமைக்கப்பட்டது.

4) கோட்டையூர், க.வீ.அழ. வகையினரால் ஒரு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் செலவில் சிவகங்கைத் திருக்குளம் வெட்டப்பட்டது. நந்தவனம் அமைக்கப் பெற்றது.

5) கோட்டையூர், அ.க.அ.மெ. வகையினரால் இருபதாயிரம் ரூபாய் செலவில் பிரகாரத் தள வரிசைகள் போடப் பெற்றன.

6) கோட்டையூர், அ.க.அ.சித.வெ. நடேசன் செட்டியாரால் ஐயாயிரம் ரூபாய் செலவில் தள வரிசைகள் போடப் பெற்றன.

7) கோட்டையூர், ராம.பெ. நாராயணன் செட்டியாரால் முப்பத்தைந்தாயிரம் ரூபாய் செலவில் தாமிரத் தகடு வேய்ந்த கலியாணக் கொட்டகை அமைக்கப் பெற்றது.

8) நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் விசுவாவசு ஆண்டு, வைகாசி மாதம், 30-ஆம் நாள் (12.06.1903) திருக்குட நன்னீராட்டுச் செய்யப் பெற்றது.

9) அண்ணாமலையார் ஆலயத்தில் நான்கு லட்சத்துப் பன்னீராயிரத்து ஐநூறு ரூபாய் செலவில் வெள்ளி இந்திர விமானங்கள், வெள்ளிக் காமதேனு கற்பக விருட்சம், வெள்ளி ரிஷப வாகனங்கள், வெள்ளித் தேர், மரத்தேர் முதலியன செய்யப் பெற்றன. இப்பணிகளில் கோட்டையூர் பெ.க.அ.சித. வீரப்ப செட்டியார், அவர் சகோதரி வள்ளியம்மை ஆச்சி, காரைக்குடி முத்து. அரு., கோட்டையூர், அ.க.அ.மெ.வ. வகையினர், இராமச்சந்திரபுரம் தீ.சொ.ராம., தீ.நா.மு., தீ.அ.சா., கானாடுகாத்தான் சா.ராம.மு.ராம. இராமசாமி செட்டியார், ராஜா சர் அண்ணாமலை செட்டியார், கோட்டையூர் அ.க.ராம.அரு. அருணாசலம் செட்டியார் ஆகியோர் பங்கு பெற்றனர்.

10) கோட்டையூர், க.வீ.அழ. வகையினர், பெ.க.அ.சித. வீரப்ப செட்டியார், அ.க.ராம.மெ.சித. சிதம்பரம் செட்டியார், அ.க.அ.மெ. வெங்கடாசலம் செட்டியார், ராம.அழ. சிதம்பரம் செட்டியார், அ.க.அ. சிதம்பரம் செட்டியார், அ.க.அ.சித.வெ. நடேசன் செட்டியார், கானாடுகாத்தான் வெ.சா. அண்ணாமலை செட்டியார், சா.அ. அண்ணாமலை செட்டியார், வெ.வீர.வெ.அரு. நாகப்ப செட்டியார், கொத்தமங்கலம், ராம.அரு.வெ. பெத்தாச்சி செட்டியார், சி.அ.சீ.ராம. இராமன் செட்டியார், சி.அ.சி.அரு. வள்ளியம்மை ஆச்சி, அரிமளம், பெ.சித. முத்துச் செல்லப்ப செட்டியார், பள்ளத்தூர் ந.பெ. பெத்தபெருமாள் செட்டியார், தேவகோட்டை, எ.பெரி. கரு.சித. சிதம்பரம் செட்டியார், நாக.அ.நா. பழனியப்ப செட்டியார், அவர் குமாரர் கண்ணப்ப செட்டியார், நாக.அ.பழ., இராமச்சந்திரபுரம் து.நா. முத்தையா செட்டியார், நற்சாந்துபட்டி வீ.மு. வீரப்ப செட்டியார் ஆகிய பெருமக்களால் இரண்டு லட்சத்து ஐம்பத்து மூவாயிரம் செலவில், நவமணிகள் இழைக்கப் பெற்ற திருவாபரணங்கள், தங்க நகைகள், மணிமுடிகள், தங்கக் கவசங்கள், வெள்ளிக் கவசங்கள், வெள்ளிப் பாத்திரங்கள், வெள்ளி உபசார உபகரணங்கள் முதலியன அமைக்கப் பெற்றன.

11) காரைக்குடி, முத்து.அரு. எழுபத்தைந்தாயிரம் ரூபாய் செலவிட்டு வேத பாடசாலை அமைத்து ஐம்பதாயிரம் ரூபாய் மூலதனம் வைத்தார்.

12) உற்சவ கால வேத பாராயணத்திற்குக் காரைக்குடி சா.நா. இருபத்தைந்தாயிரம் மூலதனம் வைத்தார்.

(திருப்பணிகள் தொடரும்)

உ
திருச்சி ஸ்ரீ வளத்தி
சிட் பண்ட்ஸ் (பி) லிட்.
துவக்கம் 2005
VALATHI 2005
வளத்தி ஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி) லிட். ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி) லிட்.
பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை
எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு
ரூ. 1,00,000/- முதல் ரூ. 30,00,000/- வரை
அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை
பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!
இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.
TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.
VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,
SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,
0431-2760064
0431-7968005
94439 86143
"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6-வது கிராஸ் - கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143
"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1), அருணோதயா அபார்ட்மென்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029
எண். 1, முதல் தளம்,
பழைய சொக்கநாதர்-
-கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001.
Cell : 89034 90064
★ வாய்மையே வெல்லும் ★ tvcfpl@gmail.com www.valathichitfunds.com



# பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர்

தி. மங்கையர்க்கரசி, இராயவரம்



வி + நாயகர்

வி – மேலான நாயகர், விசேஷமான நாயகர்

தனக்கு மேலான நாயகர் இல்லாதவர். மிக எளிமையான தெய்வம். மண்ணிலும், மஞ்சளிலும், சாணத்திலும் இவரை வழிபடலாம். கற்பகம் என்பதற்கு கல்லைப் பகுத்தல் என்று பெயர். பிள்ளையார் பட்டியில் உள்ள கற்பக விநாயர் குகையில் குடைந்து உருவாக்கப்பட்டவர்.

## பிள்ளையார் பட்டி:

எருகாட்டூர் அல்லது எக்காட்டூர், மருதங்குடி, திருவீங்கைக்குடி, திருவீங்கைச்சுரம், இராசநாராயணபுரம் என ஐந்து பெயர்கள் இருப்பினும் விநாயகப் பெருமான் பிள்ளையார்பட்டியில் கோயில் கொண்டு அருள் பாலித்து வருவதால் ஊர்ப் பெயரே வழக்கத்தில் உள்ளது.

## பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர்:

பிள்ளையார்பட்டி பிள்ளையார் தமிழ்நாட்டில் அனைத்து வீடுகளிலும், அனைத்து மங்கல விழாக்களிலும் முதல் இடத்தில் நிலைத்திருப்பவர்.

1. 2000 ஆண்டுகளுக்கு முன்னர் குகையில் குடைந்து உருவாக்கப்பட்டவர்.
2. இவ் விநாயகர் வடக்கு நோக்கி அருள் பாலிப்பவர்.
3. இங்கு இரு கரங்களுடன் பத்மாசனத்துடன் வீற்றிருக்கிறார்.
4. வலக்கரத்தில் சிவனை வைத்திருக்கிறார்.
5. தும்பிக்கை வலப்புறம் வளைந்து காணப்படுகிறது.
6. ஆறு அடி உயரமுடையவர்.
7. காதுகள் பக்கவாட்டில் விரிந்தும் வாயை தும்பிக்கையால் மூடியும் உள்ளார். இதன் பொருள் அதிகமாகக் கேள் குறைவாகப் பேசு என்பதாகும்.
8. தும்பிக்கையைச் சேர்த்து ஒற்றைப்படையில் கரங்கள் கொண்டவர்.
9. இக்கோயிலில் கொடி மரத்திற்கு அருகேயுள்ள சதுரத் திட்டுக்கல்லில் நின்று பிள்ளையாரையும், சிவனையும் வணங்கிய அனைவருக்கும் காரியங்கள் சித்தி அடைந்துள்ளதாகக் கூறுகிறார்கள்.
10. இங்கு விநாயகர் சதுர்த்தி ஆண்டுதோறும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

## விநாயகர் சதுர்த்தி:

யானை முகமும், தலையில் இரு கொம்புகளும் உடைய கஜமுகாசுரன் என்ற அசுரன், சுக்கிராச்சாரியாரின் ஆலோசனைப் படி சிவபெருமானை நோக்கி தவமிருந்து எந்த ஆயுதத்தினாலும் எனக்கு மரணம் ஏற்படக் கூடாது எனக் கேட்டுத் தேவர்களையும் முனிவர்களையும் கொடுமைப்படுத்தினான். தேவர்கள் அனைவரும் தன் முன்னால் தினமும் மூன்று வேளையும் ஆயிரத்தெட்டு முறைத் தோப்புக்கரணம் போட வேண்டுமென்று கட்டளையிட்டான்.

தேவர்கள் விநாயகரை வணங்க, விநாயகர் தன்னுடைய வலது தந்தத்தால் கஜமுகாசுரனை வதம் செய்தார். இத்தகைய விநாயகர் ஆவணி மாதத்தில் சதுர்த்தி அன்றுதான் அவதரித்தார். அதனையே நாம் விநாயகர் சதுர்த்தியாகக் கொண்டாடுகிறோம்.

ஒரு சுக்ல சதுர்த்தி தினத்தில் விநாயகர் கயிலாயத்தில் உற்சாகமாய் நடனமாடிக் கொண்டிருந்தார். பெரிய தொப்பை, சிறிய கால்களில் அவர் ஆடிய நடனத்தைப் பார்த்த சந்திரன் கேலியாகச் சிரித்து விட்டார். இதனைப் பார்த்த விநாயகர் ‘சந்திரனே, நீ கேலியாய்ச் சிரித்ததால் உன்னை சுக்ல சதுர்த்தியில் யார் பார்க்கிறார்களோ அவர்களுக்குத் தீமை நடக்கும்‘ அதனால் உன்னை அனைவரும் வெறுப்பார்கள் என்றார்.

சந்திரன் மன்னிப்புக் கேட்க, ஆவணி மாத சுக்ல சதுர்த்தியில் என்னை பூஜித்தால் அந்த அபவாதம் நீங்கும் என்றார். சந்திரன் வழிபட்டு பேறு பெற்றதைப் போல நாமும் வழிபட்டு நலமுடனும், வளமுடனும் வாழ்வோம்.

### மோதகம் உருவான விதம்:

ஒரு முறை விநாயகர் வசிஷ்ட முனிவரின் ஆசிரமத்திற்கு வருகை புரிந்தார். அவரை உபசரிக்கும் விதமாக இதுவரை யாரும் செய்யாத உணவை நைவேத்தியமாகக் கொடுக்க வேண்டும் என விரும்பினார். முனிவரின் மனைவி அருந்ததி. அத்துடன் விநாயகப் பெருமானை, தான் வழங்கும் உணவின் மூலம் அனைவரும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும் என நினைத்தாள்.

அதனால் அரிசி மாவினால் கூம்பு போன்று செய்து அதன் உள்ளே பூரணத்தை வைத்து நைவேத்தியம் செய்தாள். சிவன் அபிஷேகப் பிரியர், திருமால் அலங்காரப் பிரியர், விநாயகர் நைவேத்தியப் பிரியர். விநாயகர் நைவேத்தியத்தை உண்டு அதன் சிறப்பை அனைவருக்கும் தெரிவித்திடத் தனக்கு மிகவும் பிடித்த உணவு மோதகமே என்றார். அருந்ததி அமிர்ந்தமயமாகிய பூரணத்தை உள் வைத்ததால் இதற்கு மோதகம் என்று பெயர். மோதகம் என்றால் அழிவற்ற தன்மை என்று பொருள். ஒவ்வொரு ஆண்டும் பிள்ளையார்பட்டியில் விநாயகர் சதுர்த்தியன்று உச்சிக்கால பூஜையின் போது விநாயகருக்கு 8 படி முக்குறுணி அரிசியை மாவாக்கி எள் 2 படி, கடலைப் பருப்பு 6 படி, தேங்காய் 50, பசு நெய் 1 படி, ஏலக்காய் 100 கி, வெல்லம் 40 கிலோ என மொத்தம் சேர்த்து ஒரே மோதகமாகச் செய்து நைவேத்தியம் செய்யப்படும்.

### கற்பக விநாயகர் திருக்கோயிலின் சிறப்புகள்:

சிற்றூர் ஆனால் பிள்ளையார்பட்டிக்கு தனி ஊராட்சி ஒன்றியம், அஞ்சல் நிலையம், இந்தியன் வங்கி, பஞ்சாப் நேஷனல் வங்கி முதலியன உள்ளன.

கற்பக விநாயகருக்கு ஒரு நாளைக்கு மூன்று முறை அபிஷேகம். காலை 8.30, நண்பகல் 11.30, மாலை 5.30 மணி. ஒவ்வொரு நாளும் 108 மோதகங்களும், 8 வடைகளும், 8 அப்பங்களும் நைவேத்தியம் செய்யப்படும். காலை 5 பொரி உருண்டைகளும், பாலும் படைக்கப்படும். பகலில் 3 பேர் உண்ணத்தக்க அளவில் தளிகை போடப்படும்.

ஆவணி மாத சுக்லபட்ச சதுர்த்தியில் பத்து நாட்கள் திருவிழா நடைபெறுகிறது. முதல் நாள் காலை கொடியேற்றம், இரவு சுவாமி மூஷிக வாகனத்தில் திருவீதி உலா. இரண்டாம் நாள் முதல் எட்டாம் நாள் வரை காலையில் சுவாமி வெள்ளிக் கேடகத்தில் திருவீதி உலா. இரண்டாம் நாள் இரவு சுவாமி சிம்ம வாகனத்தில் திருவீதி உலா. மூன்றாம் நாள் இரவு சுவாமி பூத வாகனத்தில் திருவீதி உலா. நான்காம் நாள் இரவு சுவாமி கமல வாகனத்தில் திருவீதி உலா. ஐந்தாம் நாள் இரவு சுவாமி ரிஷப வாகனத்தில் திருவீதி உலா. ஆறாம் நாள் இரவு சுவாமி கஜமுக சூரசம்ஹாரம். ஏழாம் நாள் இரவு சுவாமி மயில் வாகனத்தில் திருவீதி உலா. எட்டாம் நாள் இரவு சுவாமி குதிரை வாகனத்தில் திருவீதி உலா. ஒன்பதாம் நாள் காலை திருத்தேருக்கு சுவாமி எழுந்தருளல். மாலை முதல் இரவு வரை சந்தனக்காப்பு அலங்காரத்தில் மூலவர். மாலை 4.30 மணிக்குத் திருத்தேர் திருவீதி உலா, இரவு சுவாமி யானை வாகனத்தில் திருவீதி உலா. பத்தாம் நாள் காலை தீர்த்தவாரி உற்சவம். இரவு பஞ்ச மூர்த்திகள் திருவீதி உலா.


## சுவீகாரம் வேண்டுகோள்

இளையாத்தங்குடி பட்டினசாமிப் பிரிவைச் சார்ந்த வசதி படைத்த ஒருவருக்கு சுவீகாரம் தேவைப்படுகிறது. 23 முதல் 25 வயதிற்குட்பட்ட படித்த பையனாக இருக்க வேண்டும். தெரிந்தவர்கள், விருப்பம் உள்ளவர்கள்

தொடர்பு கொள்ளவும் - 94431 38393


மருதீசர் – திருவீசர்; சிவகாமி அம்மன், வாடாமலர் – மங்கை, செஞ்சதீடஸ்வரர் – சௌந்தரநாயகி என இக்கோயிலில் மூன்று சிவனும், மூன்று அம்மனும் உள்ளனர். மகாலெட்சுமி சன்னதியும் உள்ளது. மருத மரம் தல விருட்சமாகும்.

இக்கோயிலின் திருநாள் மண்டபத்தின் மேற்கூரையில் 63 நாயன்மார்களின் வண்ண ஓவியங்கள் உள்ளன. இம்மண்டபத்தின் சுவரில் மூலிகை வர்ணத்தினால் ஆன விபூதி விநாயகர் ஓவியம் உள்ளது. அந்த விநாயகரை நாம் எந்தப் பக்கம் இருந்து பார்த்தாலும் நம்மைப் பார்ப்பது போலவே இருக்கும். திருக்குளத்தில் தண்ணீர் எப்பொழுதும் நிறைந்து இருக்க வேண்டும் என்பதற்காக ஊரணியின் தென்புறத்தில் ஒரு படித் துறையில் கோமுகம் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் கிழக்கு வாசலில் அஷ்டலெட்சுமி மண்டபம் உள்ளது. பிள்ளையார்பட்டி மலையைச் சுற்றி கிரிப் பிரகாரம் வருவது தனிச்சிறப்பாகும். பிள்ளையாரின் அறுபடை வீடுகளுள் இது ஐந்தாம் படை வீடாகும்.

### நகரத்தார்களின் திருப்பணி:

முதன்முதலில் மருதங்குடி வயல்களை மருதங்குடி ஊராரிடம் பிள்ளையார்பட்டி கோயில் நகரத்தார் விலைக்கு வாங்கி நாட்டாரிடமும், பாண்டி மண்டலத்தை ஆட்சி செய்த பரகேசி மூன்றாம் குலோத்துங்கச் சோழ தேவரிடம் முழு உரிமை பெற்று குடியேறி வாழ்ந்து வந்துள்ளனர். இக்கோயில் நம்மவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இக்கோயில் திருக்குளம், கோவிலுக்குத் கற்றளி அமைத்தும் ஆவணி மாதம் 10 நாள் திருவிழா ஏற்படுத்தியது என அனைத்தும் செய்து வருகிறார்கள். வடக்கு நோக்கி அருள் பாலிப்பதால் ஒரு திருமண மண்டபத்திற்கு கற்பக மூர்த்தி வடக்கு மாளிகை எனப் பெயர் வைத்துள்ளனர். தர்மத்தின் அடிப்படையில் இங்கு அனைத்தும் நடை பெறுகிறது. அர்ச்சனைக்குக் கட்டணம் இல்லை. அனைவரும் சன்னதியில் தரிசனம் செய்யலாம். காலணிகளைப் பாதுகாக்கக் கட்டணமில்லை. வாகனம் நிறுத்துவதற்குக் கட்டணமில்லை. மதிய வேளையில் பக்தர்கள் அனைவருக்கும் 200 ஆண்டுகளுக்கு மேலாக அன்னதானம் நடைபெறுகிறது. இங்கு திருக்கார்த்திகைத் திருவிழா, திருவாதிரை விழா, கொங்கு நாச்சியம்மன் திருவிழா சிறப்பாக நடைபெற தங்களது பணிகளைச் செய்கின்றனர்.

### இருப்பிடம்:

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தாலுகாவில் திருப்பத்தூர் – காரைக்குடி மெயின் ரோட்டில் உள்ளது. திருப்பத்தூரிலிருந்து 9 கி.மீ. தொலைவிலும், காரைக்குடியிலிருந்து 18 கி.மீ. தொலைவிலும் உள்ளது.




# திருச்சேறை - [15]

நா. சௌரிராஜன், கோட்டையூர்





திருச் சேறை சாரநாதனே போற்றி!
சாரநாயகி மணவாளா போற்றி!

*****

இத்தலம் கும்பகோணத்தில் இருந்து 15 கி.மீ. தொலைவிலும், நாச்சியார் கோவிலில் இருந்து 4 கி.மீ. தொலைவிலும் உள்ளது. திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட இத்தலத்தின் மூலவர்: சாரநாதன். நின்ற கோலம். கிழக்கு நோக்கியது. தாயார்: சாரநாயகி. தனிச்சந்நிதி.

முன்பு ஒரு காலத்தில் ஒரு யுகம் முடிந்து பிரளயம் வரப்போகும் காலம் நெருங்கிய போது, சிருஷ்டிக்கு ஆதாரமான வேத ஆகம சாஸ்திர புராணங்களைப் பாதுகாக்க பிரம்மா மகாவிஷ்ணுவிடம் வழி கேட்டார். அவரும் நல்ல மண் எடுத்து வலிமையான பானை ஒன்றைச் செய்து அதற்குள் வைத்துப் பாதுகாக்கும்படி கூறினார். பிரம்மனும் பல இடங்களில் இருந்து மண் எடுத்துப் பானையைச் செய்ய எல்லாப் பானைகளும் உடைந்தே போயின. வலிமையான பானையை உருவாக்க இயலாமல் மீண்டும் மகாவிஷ்ணுவின் உதவியை நாட, அவர் இத்தலத்தில் இருந்து மண் எடுத்துச் செய்யுமாறு கூற, பிரம்மனும் இறுதியாக இத்தலத்திற்கு வந்து மண் எடுத்துப் பானை செய்து, அதில் வேத ஆகமங்களை வைத்துப் பாதுகாத்தார்.

இத்தலத்து மண் (சேறு) மிகவும் சத்து (சாரம்) நிறைந்ததால் இத்தலமும் திருச்சாரம் என்றும், இத்தலப் பெருமாள் சாரநாதன் என்றும் பெயர் பெற்றது குறிப்பிடத்தக்கது. காலப்போக்கில் திருச்சாரம் என்பது மருவி திருச்சேறை ஆனது. (சேறு என்பதும் மண்தான்).

உப்பிலியப்பப் பெருமாளை தன் மாப்பிள்ளையாக ஏற்றுப் பெருமை பெற்ற மார்க்கண்டேயர் முக்தி பெற்றதும் இத்தலத்தில்தான். தனக்கு மிகவும் பிரியமான க்ஷேத்ரம் என்று பெருமாளே கூறிய தலம் இது. இத்தலப் பெருமாள், இத்தலத்தில் ஸ்ரீதேவி, பூதேவி, மகாலெட்சுமி, நீலா தேவி, சாரநாயகி என்று ஐந்து தேவியருடனும் அருள்பாலிக்கிறார்.

ஒருமுறை நதிகள் அனைத்தும் பிரம்மனிடம் சென்று தங்களில் யார் உயர்வானவர் எனக் கேட்க, அவரும் கங்கைதான் எனச் சொல்ல, அதனால் வருத்தமுற்ற காவேரி இத்தலத்தில் உள்ள சாரபுஷ்கரணியில் உள்ள அரச மரத்தடியில் திருமாலைக் குறித்து கடும் தவம் செய்ய, திருமால் அழகிய குழந்தை வடிவில் காவேரித் தாயின் மடியில் தவழ்ந்தார். “தனக்கு இந்தப் பெருமை மட்டும் போதாது” எனக் காவேரி கூறியவுடன், கருட வாகனத்தில் ஐந்து லெட்சுமிகளுடன் காட்சி கொடுத்து, “வேண்டும் வரம் கேள்” எனத் திருமால் கேட்டிட, அதற்குக் காவேரி, “தாங்கள் எப்போதும் இதே கோலத்தில் இங்கு காட்சி தர வேண்டும். அத்துடன் கங்கையிலும் மேன்மையை எனக்குத் தந்தருள வேண்டும்” என்றாள். பெருமாளும் அப்படியே செய்தார். இத்தலத்தில் வேறு எங்கும் இல்லாத வகையில் ஐந்து லெட்சுமிகளுடன் காட்சி தரும் பெருமாளுக்கு இடது பக்கம் மூலஸ்தானத்தில் காவிரித்தாய் இருப்பதை இன்றும் காணலாம். குளக்கரையில் காவேரியம்மனுக்குத் தனிக் கோயிலும் உள்ளது.

*****

# திருக்கண்ண மங்கை - [16]

கண்ண மங்கைக் கடவுளே போற்றி!
அபிஷேக வல்லித் தாயே போற்றி!
பக்த வத்சல நாதனே போற்றி!

*****

திருமங்கையாழ்வாரால் மட்டும் 14 பாக்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட இத்தலம் திருவாரூரில் இருந்து மிக அருகில் 5 மைல் தூரத்தில் உள்ளது.

தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது அதில் இருந்து பல பொருட்கள் தோன்றின. நிறைவாக திருமகள் வெளிப்பட்டாள். அப்போது திருமாலின் அழகிய திருமுகத்தைக் காண முடியாமல்



நாணத்தால் தவிர்த்த மகாலெட்சுமி இந்தத் தலம் வந்து தவம் செய்து திருமாலைக் கரம் பிடித்தாள். பாற்கடலை விட்டு வெளியே வந்து திருமகளை மணம் முடித்ததால் பெருமாளுக்கு “பெரும் புறக்கடல் பெருமாள்” என்ற பெயர் ஏற்பட்டது. லட்சுமி தவம் செய்த இத்தலம் லட்சுமி வனம் என அழைக்கப்படுகிறது. பக்தர்களுக்காக ஆவி போல வேகமாக வந்து அருள்பாலிப்பதால் பக்தர் ஆவி – பத்தராவி என்ற பெயரும், பக்தர்களை விட்டு ஒரு போதும் நீங்காது பக்தர்களின் அருகிலேயே இருப்பதால் பக்த வத்ஸலர் என்றும் பெயர் பெற்றார் பெருமாள். இங்குள்ள தர்சன புஷ்பகரிணியின் நீரினை எடுத்து பிராட்டிக்குப் பகவானால் அபிஷேகம் செய்யப்பட்டதால் –பிராட்டியாருக்கு அபிஷேகவல்லி எனப் பெயர்.

இங்கு நடந்த பெருமாள் – தாயார் திருமணத்தைக் காணத் தேவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து குவிந்ததோடு, எப்போதும் இத்திருமணக் கோலத்தைக் கண்டு கொண்டே இருக்க வேண்டும் எனத் தேனீக்களாக உருவெடுத்து கூடு கட்டி அதிலிருந்து கொண்டு தினமும் கண்டு மகிழ்கிறார்கள் என்பது ஆச்சரியப்படத்தக்க வரலாறு.

இன்றும் தாயார் சன்னதியின் வடபுறம் ஒரு தேன்கூடு உள்ளது. எத்தனை நூற்றாண்டுகளாக இது இங்குள்ளது என்று யாராலும் சொல்ல இயலாது. இந்தக் கூட்டினைச் சுற்றி வாழும் தேனீக்கள் எவரையும் ஒன்றும் செய்வதில்லை. 108 திவ்ய தேசங்களில் இங்கு இது ஒரு அற்புதமாகும்.

*****

# திருக்கண்ணங்குடி - [17]

கண்ணங்குடியில் நின்றான் போற்றி!
சியாமள மேனிப் பெருமாளே போற்றி!
லோக நாயகி நாதனே போற்றி!
லோக நாதப் பெருமாளே போற்றி!

*****

பஞ்ச கிருஷ்ண தலங்கள் என்பது ஐந்து திவ்ய தேசங்கள். (1) திருக்கண்ணமங்கை, (2) திருக்கண்ணபுரம், (3) கபிஸ்தலம், (4) திருக்கோவிலூர், (5) இந்தத் திருக்கண்ணங்குடி. இது திருவாரூர்க்குக் கிழக்கே 14 கீ.மீ. தொலைவில் உள்ளது. சிக்கல் என்னும் இடத்திற்கு 2 கி.மீ. நாகப்பட்டினத்தில் இருந்து 8 கி.மீ. தொலைவு.

வசிஷ்ட முனிவர், கிருஷ்ணரின் மீது கொண்ட அதீத பக்தியின் காரணமாக, வெண்ணெயினால் கிருஷ்ணரின் உருவத்தைச் செய்து வழிபட்டு வந்தார். ஒருநாள், கிருஷ்ணர், சிறுகுழந்தை வடிவத்துடன் அவரது ஆசிரமத்திற்கு வந்து, வெண்ணெயினால் வசிஷ்டர் செய்து வைத்திருந்த கிருஷ்ணர் உருவத்தை வாயில் போட்டு சாப்பிட்டு விட்டு ஓடினார். அவரைப் பிடிக்க வசிஷ்டரும் துரத்திக் கொண்டு ஓடினார்.

குழந்தை கிருஷ்ணர் ஓடிவந்த இடத்தில் சில முனிவர்கள் கிருஷ்ணரை நினைத்துத் தியானத்தில் ஆழ்ந்திருந்தனர். கிருஷ்ணர் தங்களை நோக்கி ஓடிவருவதை ஞான திருஷ்டியால் அறிந்தனர். வந்தது கிருஷ்ணர்தான் என முனிவர்களும், வசிஷ்டரும் உணர்ந்தனர். அவர்கள் பக்திக்குக் கட்டுண்டு, என்ன வரம் வேண்டும் என கிருஷ்ணர் கேட்க, தாங்கள் கண்ட இதே கோலத்திலேயே இந்த இடத்திலேயே கோயில் கொண்டு இருக்க வேண்டும் என அவர்கள் வேண்டிட, அவரும் அதை ஏற்று இங்கு கோயில் கொண்டார். முனிவர்களின் பக்திக்குக் கட்டுப்பட்டு அதே இடத்திலேயே நின்றதால் இத்தலத்திற்கு திருக்கண்ணங்குடி என்ற பெயர் உண்டாயிற்று.

மூலவர்: லோகநாதப் பெருமாள், சியாமள மேனிப் பெருமாள் நின்ற திருக்கோலம்.

உற்சவர்: தாமோதர நாராயணன்

தாயார்: லோக நாயகி (அரவிந்த நாயகி)

அனைத்துத் தலங்களிலும் கைகளைக் குவித்து வணங்கும் நிலையில் அருள்பாலிக்கும் கருடாழ்வார், இத்தலத்தில், வைகுண்டத்தில் இருப்பது போல, இரண்டு கைகளையும் கட்டிக் கொண்டு அருள்பாலிக்கிறார்.

திருமங்கையாழ்வாரால் மட்டும் 10 பாக்களில் மங்களாசாசனம் செய்யப்பட்ட இந்தத் திவ்ய தேசத்தில் நடைபெறும் திருவிழாக்களில் “திருநீரணி விழா” என்பது மிகச் சிறப்பான ஒன்றாகும். இந்த விழாவில் பெருமாள் விபூதி அணிந்து கொள்கிறார். சைவ வைணவ ஒற்றுமைக்கு இந்த நிகழ்ச்சி மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. (பயணம் தொடரும்)





# துதிக்கையில்லா கரிமுகன்



பழ.கைலாஷ்

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அருகே உள்ள ஊர் கண்டரமாணிக்கம். இவ்வூரையடுத்த கொங்கரத்தியில் மணிமுத்தாற்றின் நடுவே கோயிலின்றி, கும்பமின்றி, துதிக்கையுமின்றி தன்னை நாடி வரும் பக்தர்கள் வேண்டிய வரங்களைக் கொடுத்து, அருள்பாலித்து வருகிறார் 'நடுவாற்று மருதம் பிள்ளையார்'.

மருது சகோதரர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர், பாடுவார் முத்தப்பரின் தேகநோயை தீர்த்தருளியவர் என மருதம் பிள்ளையார் வரலாற்றில் நிற்கிறார்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு கண்டரமாணிக்கத்தை சேர்ந்த முருகப்ப செட்டியார் என்பவர் தன் மனைவியுடன் குழந்தை பாக்கியம் வேண்டி பற்பல புண்ணிய தலங்களுக்குச் சென்று இறைவனை தரிசனம் செய்துவிட்டு திரும்பும் வழியில், இருவரும் கண்டரமாணிக்கத்தின் அருகே கொங்கரத்தியில் ஒரு மருத மரத்தடியில் குடிக்கத்தண்ணீர் இன்றி சோர்ந்து மிகுந்த களைப்புடன் கண் அயர்ந்தனர்.

அப்போது... 'முருகப்பா, இங்கு நீங்கள் இருவரும் எப்படி தண்ணீர் இன்றி கஷ்டப்பட்டு, களைப்புடன் இருக்கின்றீர்களோ அதுபோலத்தான் இந்த வழியாக வரும் மனிதர்கள், ஆடு, மாடு, பறவைகளும் அருந்தத் தண்ணீர் இன்றி கஷ்டப்படுகின்றன. அதனால் தண்ணீர் தாகம் தீர இந்த இடத்தில் நீ ஒரு குளம் வெட்டு, அப்போது பிள்ளையார் சிலை ஒன்று கிடைக்கும். அவ்வாறு கிடைக்கும் அந்த பிள்ளையார் சிலையை இங்கு முறைப்படி பிரதிஷ்டை செய்து இந்த குளத்திலிருந்து நீர் எடுத்து பயபக்தியுடன் தினமும் அபிஷேக ஆராதனைகள் செய்து வா. அவ்வாறு செய்து வரும் நாட்களில் உன் மனைவியை மருதமரத்துக் கொழுந்தை 48 நாட்கள் சாப்பிட்டு வரச் சொல். அப்படி செய்தால் உன் மனைவிக்கு இன்னும் ஓராண்டில் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும்' என தெய்வக்குரல் ஒலித்தது.

பின்னர் இருவரும், ஒரு நல்ல நாள் பார்த்து இறைவன் கூறிய இடத்தில் குளம் வெட்டினர், தெய்வக்குரல் ஒலித்தபடி அங்கு மிகுந்த ஒளியுடன் கூடிய பிள்ளையார் சிலை ஒன்று கிடைத்தது. இறைவன் வாக்கால் மருதமரத்தடியில் கிடைத்திட்ட அந்தப்பிள்ளையாருக்கு 'மருதம் பிள்ளையார்' எனப் பெயர் சூட்டி, பிரதிஷ்டை செய்து மிகுந்த தூய்மையுடன் தினமும் அபிஷேக, ஆராதனைகள் செய்து வந்தனர். இறைவன் கூறியபடி மருத மரத்தின் கொழுந்தினை தன் மனைவிக்கு மருந்தாக கொடுத்து வந்தார் முருகப்ப செட்டியார். ஓராண்டில் அழகான ஆண் குழந்தையும் பிறந்தது. இறைவன் அருளால் பிறந்த அந்த குழந்தைக்கு 'மருதப்பன்' எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

பின்னர், இப்பகுதியை ஆண்ட மருதுசகோதரர்கள் போருக்குப் போகும் முன் இந்த மருதம் பிள்ளையாருக்கு வழிபாடு நடத்திச் செல்வதை வழக்கமாக கொண்டிருந்தனர். மருதுசகோதரர்கள் மீது கர்னல் அக்நியு என்னும் கொடூரன் படையெடுத்த போது இந்த மருதம் பிள்ளையார் யானை உருவில் வந்து ஆங்கிலேயப் படையைப் பயமுறுத்தி திசை மாற்றி அனுப்பியதாக வரலாறு உண்டு. இச்செய்தி பாடுவார் முத்தப்பர் பாடிய 'நடுவாற்று மருதம் பிள்ளையார்' பதிகத்தில் இடம்பெற்றுள்ளது.

மருதுசகோதரர்களை காத்தது இந்த மருதம் பிள்ளையார்தான் என பின்னர் அறிந்து கோபமுற்ற வெள்ளையர்கள் மருதம் பிள்ளையார் தலையை துண்டிக்க முயன்றபோது, துதிக்கை மட்டும் துண்டானது தலை துண்டாகவில்லை. இதன் சாட்சியாக தற்போதும் துதிக்கையின்றி காட்சியளிக்கின்றார் மருதம் பிள்ளையார்.

ஒருமுறை வரகவி பாடுவார் முத்தப்பரை தேகநோய் கடுமையாக தாக்கியது. கீரணிப்பட்டி முத்துமாரியம்மன் திருமுன்னே பாடல் பாடி நோயை தீர்த்தருள வேண்டினார். இரவில் கனவிலே தோன்றிய அம்பாள் 'முத்தப்பா! கண்டரமாணிக்கம் நடுவாற்று மருதம்பிள்ளையார் கோயிலுக்கு சென்று பத்து நாள் நோன்பிருந்தால் நோய் தீர்ந்து சுகம் கிடைக்கும்' என்றுரைத்தாள். அம்பாளின் உத்தரவுப்படி கண்டரமாணிக்கம் சென்று நடுவாற்று மருதம் பிள்ளையார் திருவுருவைக் கண்டு அடிபணிந்தார். நாள்தோறும் வழிபாடு செய்து நாளுக்கொரு பாடல் பாடினார். பத்து நாட்களில் நோய் முழுவதும் தீர்ந்து உடல் நலம்பெற்றார். அந்த பத்து நாட்கள் பாடிய பாடல்கள் 'நடுவாற்று மருதம் பிள்ளையார் பதிகம்' என்று அழைக்கப்படுகின்றது.

மருதப்பச் செட்டியாரின் வழிமுறையினர் மருதம் பிள்ளையாருக்கு கோவில் கட்டி கும்பாபிஷேகம் செய்ய பல முறை முயன்றபோதும் 'நான் வெட்டவெளியில் இருப்பதைத்தான் விரும்புகின்றேன்' எனக் கூறி தடுத்துவிட்டாராம். இன்றும் நட்ட நடுக்காட்டில் வானமே கூரையாய் கும்பமின்றி துதிக்கையின்றி தன்னை நாடி வரும் பக்தர்களின் நோய் நொடிகளை தீர்த்து, அருள் புரிந்து வருகிறார். ♦

# தொழில் தொடங்கலாம் வாங்க 73



சேதுராமன் சாத்தப்பன்

## ஸ்டார்ட் அப் உலகம்

## செயற்கை நுண்ணறிவு மருத்துவக் கருவிகள் ஸ்டார்ட் அப்

சித்தாந்த் ஒரு ராணுவ வீரராக வளர்ந்தார், அப்போது ராணுவ மருத்துவமனைகளுக்கு அடிக்கடி செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அங்கு போரில் ஊனமுற்ற வீரர்கள் தங்கள் செயற்கை உறுப்புகளுடன் போராடுவதைக் கண்டார். இது போல சிரமப்படும் ராணுவ வீரர்களுக்கு உதவ வேண்டும் என்று நினைத்து தனது வகுப்புத் தோழரான தீபன்ஷ் கோயலுடன் இணைந்து சிந்தனையால் (thoughts) கட்டுப்படுத்தக்கூடிய செயற்கை உறுப்புகளை (prosthetic) உருவாக்கினார்.

விரிவான ஆராய்ச்சிக்குப் பிறகு, மூளை அலைகளை capture செய்யக்கூடிய நம்பகமான சாதனங்களை உருவாக்குவதில் இருவரும் வெற்றி பெற்றவுடன், அவர்கள் 2020 ம் வருடம் Nexstem என்ற ஸ்டார்ட் அப் கம்பெனியை நிறுவினர்.

இந்த ஸ்டார்ட் அப்பின் முதன்மைத் தயாரிப்பு நெக்ஸ்ஸ்டம் V1 EEG ஹெட்செட்கள் ஆகும், இது EEG, ECG மற்றும் EMG போன்ற பயோ-சிக்னல்களைப் பிடிக்கவும், பகுப்பாய்வு செய்யவும் மற்றும் தொடர்புகொள்ளவும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் 19-சேனல் ஆக்டிவ் எலக்ட்ரோடு ஹெட்செட் மருத்துவத் தரத்தில் EEG டேட்டாவை வழங்குகிறது, அதே நேரத்தில் அதன் Artificial Intelligence மூலமாக இயங்கும் ஆன்போர்டு ப்ராஸசர் அனலாக் பயோ-சிக்னல்களை செயல்படக்கூடிய டிஜிட்டல் டேட்டாக்களாக மாற்றுகிறது.



இன்போஎட்ஜ் மற்றும் Gruhas ஆகிய கம்பெனிகளின் நிதி ஆதரவுடன், Nexstem 50 பீட்டா வாடிக்கையாளர்களையும், நான்கு பிசினஸ் பார்ட்னர்களையும் கொண்டுள்ளது.

### எப்படி செயல்படுகிறது?

இந்த ஸ்டார்ட் அப்-பின் தொழில்நுட்பம் மனிதர்களையும், செயற்கை உறுப்புகளையும் இணைக்கிறது: நெக்ஸ்ஸ்டமின் BCI (Brain Computer Interface) தொழில்நுட்பமானது எண்ணங்களை செயற்கை உறுப்புகள் மூலம் செயல்களாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. BCI என்பது மூளை-கணினி இடைமுகத்தையும், EEG என்பது எலக்ட்ரோ என்செபலோகிராபியையும் குறிக்கிறது. EEG-அடிப்படையிலான BCI என்பது மூளையின் செயல்பாட்டை அளவிடுவதற்கும், அதை ஒரு சாதனத்தைக் கட்டுப்படுத்தும் கட்டளைகளாக மாற்றுவதற்கும் எலக்ட்ரோ என்செபலோகிராபி (EEG) பயன்படுத்தும் ஒரு நுட்பமாகும்.

BCI பலவிதமான பயன்பாடுகளைக் கொண்டுள்ளது. மருத்துவத் துறையில், இது நியுரோடிஜெனரேடிவ் நோய்களில் ஏற்படும் பேச்சுக் குறைபாடுகள், ஊனங்கள் அல்லது இயக்கக் கோளாறுகளுக்கு உதவும் தொழில்நுட்பத்தை வழங்குகிறது. கேமிங்கிலும், டிபன்ஸிலும் இந்த தொழில்நுட்பம் உபயோகப்படுத்தப்படுகிறது.

இந்த ஸ்டார்ட் அப் Nexstem Instinct என்று அழைக்கப்படும் அட்ஜெஸ்ட் செய்யக்கூடிய மின்முனைகளுடன் கூடிய மேம்பட்ட EEG ரெக்கார்டிங் ஹெட்செட்டை உருவாக்கியுள்ளது. இந்த ஹெட்செட் independent கணினி திறன்களுடன் பொருத்தப்பட்டுள்ளது. சாம்சங் ப்ராஸசர் மூலம் இயக்கப்படுகிறது.

ஜூன் 2022-ல், இந்த கம்பெனி இவர்களின் V1 ஹெட்செட்டை உலகளாவிய பார்வையாளர்களுக்குக் காட்சிப்படுத்தினார்கள். அதில் ஆக்மென்டட் என்டர்டெயின்மென்ட் பிரிவில் முதல் இடத்தைப் பிடித்தார்கள். தற்போது V2 அதாவது வர்ஷன்2 ஹெட்செட்டை உருவாக்கும் பணியில் இருக்கிறார்கள். இந்த ஹெட்செட்கள் விலையும் குறைவாக இருக்குமாறு இந்த ஸ்டார்ட் அப் கவனம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

### போட்டியாளர்கள்

இந்த ஸ்டார்ட் அப் G.Tech Medical Engineering-ன் நியுரோபிசிகல் மானிடரிங், Neurable-ன் ப்ரெய்ன் கண்ட்ரோல்ட் வர்ச்சுவல் ரியாலிட்டி, Kernel-ன் அட்வான்ஸ்ட் நியுரோடெக்னாலஜி என்ற வகையில் போட்டியாளர்களை எதிர்கொள்கிறது.

BCI சந்தை குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு தயாராக உள்ளது, 2021 முதல் 2030 வரையிலான வருடாந்திர வளர்ச்சி சதவீதம் 13.9% ஆக இருக்கும். சந்தை மதிப்பு 2030 இல் 45,000 கோடி ரூபாய்களை எட்டும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

வரும் ஆண்டில் Nexstem இன் முதன்மை வணிகக் கவனம் அமெரிக்கா, கனடா மற்றும் ஜெர்மனி மீது இருக்கும்.

இவர்களை தொடர்பு கொள்ள இவர்களின் இணையதளம் www.nexstem.ai, ஈமெயில் முகவரி connect@nexstem.ai.

# இந்த மாத வழிகாட்டி நெற்குப்பை அன்னம் செந்தில்குமார், (சென்னை)




நமது அடிப்படை முக்கிய தேவை உணவு. இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் உணவு தனிச்சிறப்பு வாய்ந்தது, இருப்பினும் கலாச்சாரம் நிறைந்த செட்டிநாட்டு சமையல் உலகளவில் புகழ் பெற்றது. நமது உணவு வகைகளும், விருந்து உபசரிப்பும் குறிப்பிடத்தக்கது. நாம் விருந்தோம்பலுக்கு புகழ்பெற்ற பெருமைக்குரியவர்கள். நமது சமையல் புகழ் பெற்றதற்கு முக்கிய காரணம் சுவையுடன் கூடிய ஆரோக்கியமும் தான். நம் முன்னோர்கள் தகுந்த முறையில் கையாண்ட அளவு முறை, தரம், மற்றும் மருத்துவ மதிப்பு ஆகியவை செட்டிநாட்டு சமையலில் மிகவும் குறிப்பிடத்தக்கது. செட்டிநாட்டு சமையலில், மாமிச உணவு சமைக்கும் போது பயன்படுத்தப்படும் பல்வகை மசாலாக்கள் பிரபலமானவை. நாம் தெருவெங்கும் செட்டிநாட்டு உணவு விடுதிகளை பார்க்கிறோம். ஆனால் அவை அனைத்தும் மற்றவர்களால் நடத்தப்படுகிறது. கர்நாடகாவில் ஷெட்டி என்ற ஒரு இனத்தவர் ஹோட்டல் தொழிலில் உலகெங்கும் பிரபலமானவர்கள். நமது வீட்டிற்கு வரும் அனைவரும் நமது உணவு வகைகள் மிகவும் பிரமாதமாக இருக்கிறது என்று பாராட்டி செல்வதை கேட்டிருக்கிறோம். ஆனால் அதில் ஒரு பெரிய தொழில் இருப்பதை ஏனோ மறந்துவிட்டோம் அல்லது செய்ய விரும்பவில்லை என்பது தான் உண்மை. நமது பிரதமர் அவர்களை வெளிநாட்டினர் பார்க்க வரும் போது அவர்களுக்கு பரிமாறும் உணவு வகைகளில் ஒரு செட்டிநாட்டு உணவு வகை இருக்காமல் இருந்ததில்லை.

ஒரு ஆறுதல் என்னவென்றால் நமது செட்டிநாட்டு உணவுக் கலையை உலகெங்கும் எடுத்து செல்லும் உணவு கலைஞர்கள் (நமது ஆச்சிகள்) குறிப்பிடத்தக்க சிலர் இருக்கிறார்கள். அவர்களால் நமது உணவு வகைகள் உலகெங்கும் பிரபலமாகி வருகிறது.

அந்த வகையில் செட்டிநாட்டு சமையல் கலையை, இந்தியாவின் சமையல் கலையை உலகெங்கும் பரப்பி வரும் டி.வி., இணையம்,பத்திரிக்கைகள் ஆகியவற்றில் மிகவும் பிரபலமான நெற்குப்பையை சேர்ந்த திருமதி அன்னம் செந்தில்குமார் அவர்களை இந்த மாத வழிகாட்டி பகுதிக்காக பேட்டி கண்டோம்.

**சமையல் கலையை எப்படி கற்றுக் கொண்டீர்கள்?**

திருமணம் ஆனவுடன் முதலில் மதுரைக்கு சென்று செட்டில் ஆனோம். அங்கு எங்களுடைய உறவினர்கள் அனைவரும் அருகிலேயே இருந்தனர். ஒவ்வொரு மாதமும் எல்லோரும் கூடி மகிழ்வோம், அதாவது தற்போது நாம் சொல்கிறோமே "கெட் டுகெதர்" என்று அதுபோல. அப்போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு உணவை சமைத்து எடுத்து வர வேண்டும் என்பது கட்டாயமாக இருந்தது. இதனால் எனக்கு இரண்டு பயன்கள் கிடைத்தன. ஒன்று, விதவிதமான சமையல்களை செய்து பார்ப்பது, இரண்டாவது அதிக அளவில் சமைக்க கற்றுக் கொண்டது. எனக்கு ஒன்பது வருடம் கழித்துதான் குழந்தை பிறந்தான். ஆதலால் இந்த ஒன்பது வருடத்தை ஆர்ட்ஸ், கிராப்ட்ஸ், சமையல் கற்றுக் கொள்வது என்று கழித்தேன்.

அப்போது எனது சின்ன மாமனார் நெற்குப்பை திரு. ஞானசம்பந்தம் அவர்கள் மதுரையின் மடீசியாவில் பொறுப்பில் இருந்தார்கள். அங்கு அடிக்கடி உணவுத் திருவிழா நடக்கும். அந்த உணவுத் திருவிழாக்களில் ஆர்கனைசர் ஆகவும், நடுவராகவும் கலந்து கொள்ளும் நிறைய வாய்ப்புகள் கிடைத்தன. இதுபோல பல உணவுத் திருவிழாக்களில் கலந்து கொண்டு என்னுடைய செட்டிநாடு சமையல் கலையை வெளிப்படுத்தினேன்.

அப்போதுதான் என் கணவர் கூறினார் இந்தக் கலையை ஏன் நீ உலகுக்கு எடுத்துச் செல்லக்கூடாது என்றார். உனக்கென ஒரு ப்ளாக் தொடங்கு என்றார். 2006 ஆம் வருடம் செட்டிநாடு குக்கிங் (Chettinad Cooking) என்ற ஒரு பிளாக்கை தொடங்கினேன்.

2010ம் வருடம் உணவு சம்பந்தமான நாலு புத்தகங்களை தமிழில் எழுதினேன். ஸ்டார் ஹோட்டல் சமையல், சூப் வகைகள், ஜூஸ் வகைகள், சத்தான சமையல் என்ற தலைப்புகளில் அந்த புத்தகங்கள் வெளியிடப்பட்டன. அந்த காலகட்டத்தில் உணவுக் கலை சம்பந்தமான புத்தகங்கள் அதிகம் வெளிவராததால் என்னுடைய புத்தகங்கள் பிரபலமாகப் பேசப்பட்டன.

இவை எல்லாம் கொடுத்த உற்சாகம் தான் 2014 ஆம் ஆண்டு அன்னம்ஸ் ரெசிபிஸ் (www.youtube.com/@AnnamsRecipes) என்ற யூடியூப் தளத்தை தொடங்கி அதன் மூலமாக வீடியோக்களைப் பதிவேற்றம் செய்ய ஆரம்பித்தேன். அது இன்றைய அளவில் மிகவும் பிரபலமாகி தற்போது 3,68,000 சப்ஸ்கிரைபர்களைக் கொண்டுள்ளது. 1700க்கு அதிகமான வீடியோக்களை பதிவேற்றம் செய்துள்ளேன்.

இதுவரை 7.50 கோடி தடவைகள் அந்த யூடியூப் தளம் பார்வையாளர்களால் பார்க்கப்பட்டிருக்கிறது.

என்னுடைய இன்ஸ்டா லிங்க் https://www.instagram.com/annamsrecipes/. இதில் கிட்டத்தட்ட 61,000 followers இருக்கிறார்கள்.

**எப்படி பிரபலமானீர்கள்?**

என்னுடைய புத்தகங்களைப் படித்த பல பத்திரிகைகள் கட்டுரைகள் எழுதுமாறும், தொலைக்காட்சிகளில் பேட்டிகள் மற்றும் உணவு சம்பந்தமான லைவ் டெமோ கொடுப்பதற்காகவும் அழைத்தார்கள். குமுதம், மல்லிகை மகள், குங்குமம், சக்தி விகடன், ஆனந்த விகடன் பத்திரிகைகளில் தொடர்ந்து உணவு சம்பந்தமான கட்டுரைகள் எழுதி உள்ளேன். குறிப்பாக கூறப் போனால் ஆனந்த விகடனின் வெளியீடான அவள் கிச்சன் என்ற பத்திரிக்கையில் தொடர்ந்து இரண்டு வருடங்கள் எழுதி வந்திருக்கிறேன்.

தொலைக்காட்சிகளில் புதுயுகம் தொலைக்காட்சியில் ருசிக்கலாம் வாங்க என்ற தலைப்பில் மூன்று வருடங்களும், பொதிகை தொலைக்காட்சியில் இரண்டு வருடங்களும், தூர்தர்ஷன், ஜெயா டிவி, சன் டிவி ஆகிய தொலைக்காட்சிகளில் பல நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றுள்ளேன்.

**உங்கள் வாழ்க்கையில் நடந்த ஒரு சுவாரசியமான நிகழ்ச்சியை கூறுங்களேன்?**

அண்ணாநகரில் உள்ள ஒரு அரசாங்க கேட்டரிங் காலேஜில் குக்கரி கிளாஸ் கற்றுக் கொள்ளலாம் என்று சென்றேன். அந்த வகுப்பு எதிர்பார்த்தது போல் இல்லை. ஆதலால், அங்குள்ள முதல்வர் அவர்களிடம் அதைப் பற்றி சொல்லலாம் என்று சென்றபோது என்னை பற்றி அறிந்து கொண்டு ஏன் நீங்களே வகுப்புகள் நடத்தக்கூடாது என்று கூறினார். அங்கு பின்னர் பல வகுப்புகள் நடத்தினேன்.

**ஆன்லைனில் அன்னம்ஸ் ஷாப் ஆரம்பிக்க வேண்டும் என்று எப்படி உங்களுக்கு ஐடியா வந்தது?**

கொரோனா சமயத்தில் வீட்டுக்குள் முடங்கி கிடந்த போது சீயக்காய் பொடி, குளியல் பொடி என்று இரண்டு வகையான பொடிகளை தயார் செய்து அவற்றை அருகில் உள்ளவர்களிடமும், ஆன்லைன் மூலமும் விற்கத் தொடங்கினேன். அதுதான் என்னுடைய ஃபர்ஸ்ட் புராடக்ட். அது நல்ல முறையில் விற்பனை ஆனதால் செட்டிநாடு மாவு வகைகளையும், செட்டிநாட்டில் உபயோகப்படுத்தப்படும் எவர்சில்வர் பாத்திரங்களையும் ஆன்லைனில் annams shop மூலமாக விற்கத் தொடங்கினேன். இன்றைய தினம் அந்த ஆன்லைன் ஸ்டோர் மிகவும் பிரபலமாக இருக்கிறது. அதன் மூலமாக செட்டிநாட்டு பொருட்கள், மசாலா தயாரிப்புகள், உணவு பொருட்கள், மூலிகை பொருட்கள், பூஜை பொருட்கள் ஆகியவற்றை விற்று வருகிறோம்.

**கணவர், மகன் பற்றி கூறுங்களேன்.....**

என்னுடைய கணவர் செந்தில்குமார் அடிப்படையில் ஒரு பத்திரிகை வெளியீட்டாளர். ஆயுர்வேத பொருட்களை ஆன்லைன் மூலமாக விற்று வந்தார். கொரோனா காலத்திற்குப் பிறகு அன்னம்ஸ் ஷாப்பில் அதிக கவனம் செலுத்தி வருகிறார். நான் இந்த அளவு சாதிப்பதற்கு என்னுடைய கணவரும், என்னுடைய மகனும் தான் முக்கியமான காரணம் என்றால் மிகையாகாது. அவர்களுடைய ஆக்கமும் ஊக்கமும் இல்லாமல் இருந்திருந்தால் நான் நிச்சயம் இந்த நிலையை அடைந்திருக்க முடியாது.

மகன் அரவிந்த் எஸ்ஆர்எம் காலேஜில் பி.டெக்., முடித்துவிட்டு ஆம்ஸ்டர்டாமை சேர்ந்த ஒரு கம்பெனியின் பெங்களூர் கிளையில் UX Designer ஆக இருக்கிறார்.

இவர்களுடைய Youtube சேனல் லிங்க் – www.youtube.com/@AnnamsRecipes, அன்னம்ஸ் ஷாப் லிங்க் – www.annamsshop.com. ■

ஈமெயில் Sethuraman.sathappan@gmail.com,
மொபைல் 9820451259,
இணையதளம்
www.startupandbusinessnews.com

## வாழ்த்துகள்



ஓசூரில் வசிக்கும் ஓ சிறுவயல் வைரவன் கோவில் தெய்யனார் பிரிவைச் சேர்ந்த ஏஎல்.பெரிச்சிப்பன் – பிஆர். நாச்சுமீனாள் தம்பதியரின் மகன் பிஆர். பெரியணன், வயது 22, நவம்பர் 2024-ல் நடைபெற்ற பட்டயக் கணக்காயர் (CA) தேர்வில் 489/600 மதிப்பெண்கள் பெற்று அகில இந்திய அளவில் நான்காவது இடத்தில் தேர்ச்சி பெற்றுள்ளார். ஓசூர் டிவிஎஸ் அகாடமி பள்ளியில் படித்து SSLC தேர்வில் 478/500 மதிப்பெண்கள் பெற்று முதலாவது இடத்தையும், மகரிஷி பள்ளியில் படித்து +2 தேர்வில் 487/500 மதிப்பெண்கள் பெற்று முதலாவது இடத்தையும் பெற்றுள்ளார். பட்டயக் கணக்காயர் முதல் நிலை தேர்வில் 647/800 மதிப்பெண்கள் பெற்று தேசிய அளவில் 11ஆம் இடத்தையும் பெற்றவர். தினசரி 14 முதல் 15 மணி நேரம் வரை படிக்கும் பழக்கத்தை கொண்டுள்ளதால் தொடர்ந்து அனைத்து தேர்வுகளிலும் இவரால் அதிக மதிப்பெண்கள் பெற்று சிறப்பு நிலையில் தேர்ச்சி பெற முடிந்துள்ளது. இவர் ஓ. சிறுவயலைச் சேர்ந்த பிஆர். அழகப்பன் – ஏஎல்.வள்ளியம்மை ஆச்சியின் மகன் வழியிலும், பிஎல். கருப்பன் செட்டி – கேஆர். மல்லிகா ஆச்சியின் மகள் வழிப் பேரன் ஆவார். செல்வன் பெரியணன் மேலும் சிறப்புகள் பெற்று புகழ் சேர்க்க நமது செட்டிநாடு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.



மகன்லால்
வைரம் & தங்கம்

We Offer Diamonds
Grade by

GEMOLOGICAL INSTITUTE OF AMERICA
KNOWLEDGE

GIA®

Authorised
Forevermark Jeweller
FOREVERMARK



Maganlal
a precious legacy
87 வருடங்களாக பாரம்பரியமிக்க வைரம்
மற்றும் தங்க நகைகள் வாங்க நம்பிக்கை பெற்ற
கைராசியான ஸ்தாபனம்
இனிய பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
MAGANLAL MEHTA & CO
Diamond & Gold Jewellery Private Limited
#51, AVM Building, Kallukatti
North, Karaikudi - 630 001
# 27/43, North Usman Road,
T.Nagar, Chennai - 600 017
we@maganlalmehta.com
www.maganlaldiamonds.com
87 YEARS
CUSTOMER CARE
+91 888 111 5555
+91 888 111 4555

# இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு – 15



லெ. முத்து
இணை இயக்குனர்
(ஓய்வு) இஸ்ரோ.

## திரு. எஸ். சுப்ரமணியன்



இஸ்ரோ நகரத்தார்களைப் பற்றி நான் எழுதி வரும் தொடர் கட்டுரைகளில் அடுத்த பகுதியாக விண்வெளித்துறையில் மற்றொரு மிக முக்கியமான தொழில் நுட்பத்தில் சிறந்த வகையில் பணியாற்றி மறைந்த என் நண்பர் திரு எஸ். சுப்ரமணியன் என்கிற சம்பத் அவர்களைக் குறித்து இந்த இதழில் எழுத விழைகிறேன். இதை எழுதும் போது நமது நகரத்தார் நண்பர்கள் விண்வெளித் துறையின் அனைத்து முக்கியமான துறைகளிலும் பணியாற்றி நேர்மையும், கண்ணியமும், ஈடுபாடும் சக உறுப்பினர்களுடன் நட்பும் கொண்டு நடந்து வந்தது சிறப்பாக இன்றும் இஸ்ரோவில் பேசப்படுவதை நினைத்து என் மனம் மிக பெருமிதம் கொள்கிறது.

திரு. சுப்ரமணியன், நாட்டரசன் கோட்டை தந்த நல்முத்து. இவர் Composites என்கிற மிகக் கடினமான துறையில் சிறந்த பணியாற்றிய பெருமைக்குரியவர். இது பிளாஸ்டிக் சம்பந்தப்பட்ட துறையாகும். இது கண்ணாடி (Glass), கரி (Carbon), கெவ்லார் (Kevlar) போன்ற பொருள்களின் இழைகளையும் (Fibre) பசையையும்(Resin) சேர்த்து பாகங்களை உருவாக்கும் ஒரு தொழில் நுட்பம் ஆகும். இப்படி செய்யப்படும் பாகங்கள் Fibre Reinforced Plastics என்று அழைக்கப்படுகிறது. இதன் மூலம் பாகங்களை தகடுகளாகவோ (Laminates) ராக்கெட்டுகளின் பாகங்களாகவோ (Interstages, Heat shield), ராக்கெட் இஞ்சினின் கூம்பு வடிவ Nozzle-ங்களாகவோ, உயர் அழுத்தத்தை தாங்கக்கூடிய குடுவைகளாகவோ (High Pressure Tanks) அல்லது அதிக வெப்பத்தைத் தாங்கக் கூடிய, வெப்பத்தைத் கடத்தி விடாது தடுக்க கூடிய ஓடுகளாகவோ (Heat Resistant and Insulating Tiles) உண்டாக்க முடியும்.

ராக்கெட்டை பொருத்தவரை எந்த அளவு அதன் எடையைக் குறைக்க முடியுமோ அந்த அளவு அதால் செலுத்தப்படுகிற உபகிரஹத்தின் எடையைக் கூட்ட முடியும். அனைத்து விண்வெளி வல்லுனர்களின் தாரக மந்திரம் மூன்றேயாகும். 1. எடையைக் குறைத்தல் 2. விலையை குறைத்தல் 3. செய்ய எடுக்கும் நேரத்தைக் குறைத்தல். இந்த முயற்சியில் Fibre Reinforced Plastics - FRP தொழில் நுட்பம் மிக உதவியாக இருந்து வருகிறது.

ஆனால், இதன் குறை என்று பார்த்தால் இதனால் செய்யப்படும் பாகங்கள் உபயோகப்படுத்தப்படும் பொருள்களின் குணாதிசயங்களைப் பொறுத்து (Properties of used materials dependent) வேறுபடும் தன்மையுடையது. மேலும் இந்த பொருள்களை சரியான விகிதத்தில் சேர்த்து செய்யும் முறைகளைப் பொறுத்தும் (Process dependent) பாகங்களின் குணாம்சங்கள் வேறுபடும். ஆகவே தரக்கட்டுப்பாடு (Quality control) கடைப்பிடிக்க வேண்டியது இங்கு மிக அவசியமாகிறது. உலோகத்தினால் செய்யப்படும் பாகங்களுக்கு இந்த குறைபாடுகளில்லை. தரக்கட்டுப்பாடு குறித்து மிக விரிவாக சென்ற இதழில் நான் எழுதியதை வாசகர்களுக்கு இங்கு நினைவு கூற விரும்பகிறேன்.

- திரு. சுப்ரமணியன் பள்ளிப் படிப்பை நாட்டரசன்கோட்டை SRM பள்ளியில் படித்திருக்கிறார். பின்னர் Diploma in Mechanical Engineering படிப்பை கானாடுகாத்தான் செட்டிநாடு பாலிடெக்னிக்கில் முடித்திருக்கிறார்.
- இஸ்ரோவில் 1972-ம் வருடம் ஏப்ரல் மாதம் பணியில் சேர்ந்திருக்கிறார்.



எஸ். சுப்ரமணியன் – சாரதா ஆச்சி



மீனா, ஸன்ஜித், பிரசன்னகுமார், லோகஜித்

❖ திரு.சுப்ரமணியன் அவர்கள் ஆரம்பம் முதலே திருவனந்தபுரத்தில் வட்டியூர்காவு என்ற பகுதியில் அமைந்துள்ள Composites Group-ல் நான் மேலே விவரித்த தரக்கட்டுப்பாட்டு பிரிவில் சேர்ந்து ஓய்வு காலம் வரை அரும்பணியாற்றியிருக்கிறார்.

❖ நமது நாட்டில் இந்த தொழில் நுட்பம் முளை விடாத காலத்திலேயே இழைகளின் Properties, Resin Properties, இரண்டும் குறித்த விகிதத்தில் சேர்க்கப்படும் விதம் (Mixing), பாகங்களின் உருவத்தில் (Configuration) உண்டாக்கும் விதம் (Moulding), பின்பு பாகங்களை அதிக வெப்பத்திலும் அதிக அழுத்தத்திலும் பதப்படுத்தும் விதம் (Curing) ஆகிய Processing குறித்தும் ஒவ்வொரு நிலையிலும் தரக்கட்டுப்பாடு செய்து பாகங்களை அங்கீகரிக்கும் அணுகு முறையையும் (Parts Acceptance Methodology) அதன் Quality Assurance Specifications குறித்தும் மிகச் சிரமப்பட்டு விரிவான Documents-ஐ உண்டாக்கி இருக்கிறார்.

❖ பின்னர் இந்த செயல்முறைகளை உபயோகித்து SLV, ASLV, PSLV ராக்கெட்டுகளின் FRP பாகங்களின் தரத்தைப் பரிசோதித்து தரமற்ற பாகங்களை அப்புறப்படுத்துவதிலும் (Parts Rejection) தரமான பாகங்களை ராக்கெட்டுகளில் உபயோகப்படுத்த பரிந்துரை செய்வதிலும் (Acceptance for Flight Use) சிறந்த பணியாற்றி இருக்கிறார். இவர் ஏற்படுத்திய வரைமுறைகள் இன்றளவும் பயன்படுத்தப்படுகின்றன என்பது நமக்கெல்லாம் பெருமை.

❖ இந்த சிறந்த பணியாற்றலுக்குப் பின் 2003-ல் பணி ஓய்வு பெற்று 2006-ல் இவர் மறைந்து விட்டார்.

## குடும்பம்

| | |
|---|---|
| பெயர்: | எஸ். சுப்ரமணியன் என்கிற சம்பத் |
| பிறந்த தேதி: | 19/05/1943 |
| தகுதி: | Diploma in Mechanical Engineering |
| ஊர்: | நாட்டரசன் கோட்டை |
| வீடு: | சுண்டுமணி வீரப்ப செட்டியார் வீடு |
| கோயில்: | இளையாத்தங்குடி |
| பிரிவு: | கழனி வாசல் |
| தகப்பனார்: | சபாபதி செட்டியார் |
| தாயார்: | கல்யாணி ஆச்சி |
| மனைவி: | சாரதா ஆச்சி, பாகனேரியை சேர்ந்தவர் |
| மகன்: | பத்மனாபன் சுப்ரமணியன், Head, Accounts, Admin & HR, Tynimo Life Style Private Limited, Bangalore. |
| மருமகள்: | உமா பத்மனாபன், (மேலைச்சிவபுரி), Coordinator, Higher Secondary Class, ORCHIDS International School, Bangalore. |
| பேத்தி: | Vrushanki Padmanabhan, First Year Student in M.Sc., (Psychology), PES University College, Bangalore. |
| மகன்: | பிரசன்னகுமார் சுப்ரமணியன், Business, Woodpeck Home and Interiors, Bangalore. |
| மருமகள்: | Meena Prasannakumar, (கீழப்பூங்குடி), Team Lead, FIS Global, |
| பேரன்கள்: | Sanjith Prasannakumar, 11th standard<br>Lokajith Prasannakumar, 6th Standard. |



விருஷாங்கி, உமா, பத்மநாபன்

❖ இவர் நம்மிடையே இல்லையென்றாலும் இவரின் பெருமைகள் இன்றளவும் சக தோழர்களால் பேசப்பட்டு வருகிறது.

❖ இவருடைய துணைவியார் திருமதி. சாரதா ஆச்சி மிகுந்த திறமையும் நிர்வாகத் திறனும் உடையவர். தற்சமயம் நாட்டரசன் கோட்டையில் வசித்து வருகிறார். பல குழந்தைகளுக்கு தையற்கலையை கற்றுத் தருவதிலும், நமது சமூகத்தினருக்கு திருமண ஆலோசனை கொடுத்து திருமணங்களை முடித்து வைப்பதிலும், நாட்டரசன் கோட்டை திருமுருகன் திருப்புகழ் பாராயணக்குழுவில் ஒருங்கிணைப்பாளராக இருந்து பல ஊர்களில் திருப்புகழை பரப்புவதோடு Online-ல் குழந்தைகளுக்கு திருப்புகழ் வகுப்பு எடுப்பதிலும் தன் நேரத்தை உபயோகமாக செலவழித்து வருகிறார். ♦

# நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு 42





## செட்டிநாட்டுப் பகுதி மக்கள் மீண்டனர்

மா.இளங்கோ, குழிபிறை, 9842260955




சென்ற இதழில் 1400 முதல் 1500 வரை இடைப்பட்ட காலத்தில் நகரத்தார்களின் வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்ற தலைப்பில் பல செய்திகளைப் பார்த்தோம். இந்த இதழில் 1500-க்குப் பின்னரான காலம்.

இசுலாமிய ஆட்சி 1378-ம் முடிவுக்கு வந்தது. நாயக்கர்களின் ஆட்சி அமைகிறது. அலங்கோலங்களும் அழிவுகளும் முடிவுக்கு வந்தன. மக்கள் இயல்பான வாழ்க்கையை வாழத் தொடங்கினர். செட்டிநாட்டுப் பகுதிகளும் மலர்ச்சியைக் காணத் தொடங்கினர். நகரத்தார்களும் தங்களின் இயல்பான அறப்பணிகளைத் தொடங்கினர் என்பதற்குச் சான்றாக காளையார்கோயில் கல்வெட்டுகள் உள்ளன. காளையார்கோயில் ஊரில் உள்ள காளீசுவரர் கோயில் என்ற சோமனாதர் கோயிலில் உள்ள கல்வெட்டு 1511-ம் ஆண்டைச் சேர்ந்தது. மறுமலர்ச்சிக் காலத்தை எடுத்துக்காட்டுகிறது. (SII vol 8, Year 1937, pg. 182, கல். எண். 587/1902)

### இரணியூர் அல்லது பிள்ளையார்பட்டி கோயில் நகரத்தார்கள் செய்த பெரும்பணி - 1511-ல்

'இன்னாயனார் திருக்கோயில் திருமடைப்பள்ளி துலுக்க வாணத்திலே சரிந்து கிடக்கையிலே' என்பது கல்வெட்டு வரி. இந்த வரி இசுலாமியர் ஆட்சியில் நடைபெற்ற கலகத்தில் இக்கோயிலின் மடைப்பள்ளி இடிந்துவிட்ட செய்தியைப் பதிவு செய்கிறது. இசுலாமியர் ஆட்சி முடிவுக்கு வந்த 1378-க்குப் பின் ஏறத்தாழ 133 ஆண்டுகள் கழித்துத்தான் இக்கோயிலைச் சீர் செய்ய முடிந்திருக்கிறது. அதாவது கி.பி. 1511-ல். இடிந்து கிடந்த கோயில் மடைப்பள்ளியை எடுத்துக் கட்டினர். இந்த மடைப்பள்ளியை இன்றும் காணலாம்.

500 ஆண்டுகளுக்கு முன் அப்பணியைச் செய்தவர்கள் நகரத்தார்கள், திருவேட்பூருடையார் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர். திருவேட்பூருடையார் என்று குறிக்கப்படும் பெயரானது இரணியூர் மற்றும் பிள்ளையார்பட்டி கோயில் நகரத்தார்களுக்குப் பொருந்தும். எனவே, இரு கோயில்களில் ஒன்றைச் சேர்ந்தவர்களே இத்திருப்பணியைச் செய்திருக்கின்றனர். காலத்தை வென்ற பெரும் பெருமைக்கு உரிய பெருமக்களாவர். இக்கல்வெட்டின் மூலம் செட்டிநாட்டுப் பகுதியில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவியதும் உறுதியாகிறது.

### வயிரவன் கோயில் நகரத்தார்களும் இசைகுடிமான வரிகளும் - 1532-ல்

இதே கோயிலில் உள்ள மற்றொரு கல்வெட்டு. இதுவும் மக்களின் மீட்சியைக் குறிக்கிறது. வயிரவன் கோயில் நகரத்தாரான அடைக்கலங்காத்தார் மகன் சிதம்பரநாதர் செய்த திருப்பணியைப் பதிவு செய்கிறது.

இக்கல்வெட்டு வரி இசைகுடிமானத்தில் எழுதப்படுகிற வரியை அப்படியே பதிவு செய்து, இசைகுடிமானத்தின் மாறாப் பழமையை எடுத்துக் காட்டுகிறது. வயிரவன் கோயில் - கழனிவாசல் பிரிவு நகரத்தாரைச் சுட்டுகிற வரியை, கல்வெட்டில் பதிவு செய்திருக்கிறார்கள். 'ஏழகப்பெருந்தெருவான வீரபாண்டியபுரத்து களனிவாசலுடையான்' - என்பது வரி. மற்றொன்றையும் கவனிக்க வேண்டும் இன்று எழுதுவது போல் 'ஏழகப்பெருந்திரு' என்று எழுதவில்லை. 'ஏழகப்பெருந்தெரு' என்றுதான் எழுதியுள்ளார்கள். கல்வெட்டில் 'பெருந்தெரு' எனக் குறிப்பிடப்படும் இடங்களில் வாழ்ந்தவர்கள் பெரும்பாலோர் நாட்டுக்கோட்டை நகரத்தார்களே என்ற தெளிவான முடிவை எட்டுவதற்கு இந்த இசைகுடிமான வரிகளே துணையாக இருக்கின்றன. "பெருந்தெரு" என பதியப்பட்ட கல்வெட்டுடன் நகரத்தார் பெயரையும் கொண்டிருப்பதால், இக்கல்வெட்டு முக்கியமான கல்வெட்டுகளில் ஒன்றாக அமைகிறது. இந்தக் கல்வெட்டு என்ன சொல்கிறது? தெரிந்து கொள்வோம். அடைக்கலங்காத்தார் மகன் சிதம்பரநாதர் இடிந்த கோயிலை எடுத்துக் கட்டியிருக்கிறார். விநாயகன் திருமேனியை நிறுவி பூசை முதலான சேவைகளுக்காக, அவற்றை நாள்தோறும் செய்யும் பண்டாரத்திற்கு

நிலத்தை தேவதானமாக வழங்கியிருக்கிறார். அந்நாளில் கோயில் பூசைகள் அனைத்தையும் வேளாளர்கள், உவச்சர்கள், பண்டாரங்களே செய்துள்ளனர் என்ற செய்தியும் தெரிய வருகிறது. கல்வெட்டில் உள்ள சில வரிகளை மட்டும் தங்களின் கவனத்திற்குத் தந்துள்ளேன்.

- சகாத்தம் 1454 மெல் செல்லாநின்
- ற ஹெவிளம்பிவருசம் ஆடிமாதம் 10உ திருக்கானைப் பெருஉடைய நயினார்
- சொமநாதன்கொயிலில் எழகப்பெருந்தெருவான வீரபாண்டியபுரத்து களனிவா
- ச லுடையான் அடைக்கலங்காத்தார் சிதம்பரநாதர் உள்இட்டார் கொயிலுஂ சரிவு எடுத்
- து கட்டி வினாயகனையும் திருமெனிக்கொண்டு இவற்கு பூசைமுதலுக்கு சிறிபண்டார
- க்காரியத்துக்குக் கடவர் கையில் கொண்டுடைய நிலமாவது இன்நயினார் தெவதானம்...

கொண்டாட்டங்களும், வழிபாடுகளும், திருப்பணிகளும் நடைபெறுகின்றன என்றால் நாட்டில் செல்வமும் செழிப்பும் நிறைந்திருக்கின்றன என்று தானே பொருள்.

(காளையார்கோயில் நகரத்தார் சிற்பம் படம் உதவி திரு.பழ.கைலாஷ், தேவகோட்டை)

### போர்த்துகீசியர்கள், டச்சுக்காரர்கள் வருகை

நகரத்தார்களின் வரலாற்றை கால அடிப்படையில் பார்த்து வருகின்றோம். இந்தக் கால ஒழுங்கில் இருந்து சற்றே விலகி அப்பொழுது நிலவிய நாட்டின் சூழ்நிலைகளையும் ஆராய வேண்டியிருக்கிறது. ஏன் என்ற கேள்வி எழலாம். 1500-க்குப் பின்னரான காலங்கள் நகரத்தார்களுக்கு மட்டுமல்ல தமிழகம் உள்ளிட்ட இந்தியாவிற்கே முகாமையான காலமாக உள்ளது. இந்தியாவில் சமூக பொருளாதார மாற்றங்கள் சூறாவளி என நிகழ்ந்தன. காரணம் ஐரோப்பியர்களின் வருகை. அவர்களின் வருகை இந்தியா மட்டுமல்ல தென்கிழக்கு ஆசியா முழுமைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தின.

நகரத்தார்களின் வரலாற்றைத் தொகுக்கும் பொழுது அன்றைய அரசியல் சூழ்நிலைகளையும், பொருளாதார சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டே தொகுக்கப்படுகிறது. எந்த ஒரு சமூகமாக இருந்தாலும் அன்றைய அரசியல் பொருளாதாரத் தாக்கங்களுக்கு ஆட்பட்டே ஆக வேண்டும். மாந்தன் என்பவன் கூடி வாழும் இயல்புடையவன். ஆகவே நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் மட்டுமல்லாது மற்ற சமூகங்களையும் இணைத்தே ஆராய வேண்டியுள்ளது. எனவே, இப்பகுதியில் ஐரோப்பியர்களின் வருகை, அவர்களால் ஏற்பட்ட மாற்றங்கள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

ஐரோப்பியர்களின் வருகையால் தொழில்நுட்பம், கல்வி, சமூக நிலை, நிர்வாகம் என எல்லா நிலைகளிலும் மாற்றம் ஏற்பட்டது. சிறந்த மாற்றங்கள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. நகரத்தார்கள் அரசியல் சமூக மாற்றங்களை ஏற்றுக் கொண்டனர். தம்மை வளர்த்துக் கொண்டனர். 1500-க்குப் பிந்திய காலங்களில்

உ சிவமயம் ஸ்ரீராமஜெயம்

**செட்டிநாடு வத்தல்கள் கிடைக்கும்**

எங்களிடம் தேன்குழல் வத்தல், கிள்ளு வத்தல், கரண்டி வத்தல், சின்ன வெங்காய வடகம் (கரிவடகம்), பிரண்ட (முறுக்கு வத்தல்), கத்திரி வத்தல், மாவத்தல், அவரை வத்தல், கேப்பை வத்தல், கேரட் வத்தல், பீட்ரூட் வத்தல், தக்காளி வத்தல், கறிவேப்பிலை வத்தல் ஆகிய சுவைமிகு வத்தல்களும், எல்லா வகை பொடி வகைகளும், வேங்கரிசி மாவு, உப்புக்கண்டம், மற்றும் தடுக்கில் பின்னிய நடுவீட்டுக் கோலம் கிடைக்கும்.

தொடர்பிற்கு: லட்சுமி மணிகண்டன், காரைக்குடி
8508392087 / 8778527165 / 8760742590

ADVT

போர்த்துகீசியர்கள், டென்மார்க் நாட்டினர், ஆங்கிலேயர்கள் தமிழகத்தில் காலூன்றி விட்டனர். ஐரோப்பியர்களின் வருகையால் இந்தியா அடைந்த மாற்றங்கள் ஏராளம். மக்கள் விழிப்புணர்வு பெறத் தொடங்கியதும் ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னரே.

அதுவரையில் இந்தியாவின் கிழக்குக் கரையிலும், மேற்குக் கரையிலும் செயல்பட்ட வணிகக் குழுக்கள் கிழக்கு ஆப்ரிக்கா, மலேசியா, இந்தோனேசியா உள்ளிட்ட பல நாடுகளுடன் வணிகம் செய்து வந்தனர். இந்த வணிகச் செயல்பாடுகள் மூலம் பல கலை, பண்பாட்டு பரிமாற்றங்கள் நிகழ்ந்தன. வணிகக் குழுக்கள் பல நாடுகளுக்குச் சென்றாலும் அந்த நாட்டின் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. எனவே, வணிகர்களை எல்லா நாட்டு அரசுகளும் வரவேற்றன. இந்திய வணிகர்கள் மிகச் செழிப்பான முறையில் வணிகம் செய்து வந்தனர்.

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னர் இந்தியப் பெருங்கடலில் நடந்த வணிக முறைகள் வேறாகி விட்டன. எனவே, ஆசியாவில் அன்று இருந்த அனைத்து வணிக அமைப்புகளும் இயங்கிய முறைகளை அன்றைய அரசியல் பொருளியல் சூழ்நிலைகளின் பின்னணியில் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. தெளிந்த நீரோடை போல அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருந்த இந்திய வணிகம் 16-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காலச்சுழலில் சிக்கியது. முதலாவதாக போர்த்துக்கீசியர்களின் வருகை, இந்தியர்களின் அறம் சார்ந்த வணிக முறைகளை வீழ்த்தத் தொடங்கியது.

இக்காலத்தில் நகரத்தார்களின் வாழ்க்கை முறை, தொழில் முறை ஆகியன மாற்றம் பெற்றன. ஆனால், நகரத்தார்கள் கால மாற்றங்களுக்கு இயைந்து கொடுத்து தமது வளர்ச்சிக்கான பாதையாக அம்மாற்றங்களை எதிர்கொண்டனர். ஐரோப்பிய வணிக அமைப்புகளுடன் இணைந்து வணிகம் மேற்கொண்டனர் நகரத்தார்கள். எனவே, அந்தச் சூழலைப் புரிந்து கொள்ள ஏதுவாக ஐரோப்பிய வணிக நிறுவனங்கள் பற்றிய செய்திகளையும் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

முதலில் போர்த்துகீசியர்களும் டச்சுக்காரர்களும். வந்தவர்கள் என்ன செய்தார்கள்?. (வரலாறு வளரும்)



# நூற்றாண்டு கண்ட "அருணோதயம்" அருணன்

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையைச் சேர்ந்த லெட்சுமணன் செட்டியார், சீதை ஆச்சியின் மகனாக 18.12.1924 அன்று பிறந்தவர் அருணன் அவர்கள். இவர் இயற்பெயர் அருணாசலம். தேவகோட்டையில் பள்ளிப் படிப்பை படித்துக் கொண்டிருக்கும் போதே காந்திஜியின் "வெள்ளையனே வெளியேறு" முழக்கத்தால் ஈர்க்கப்பட்டு சுதந்திர போராட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

சிவகங்கை மாவட்ட பகுதியில் அந்தக் காலங்களில் சிறுவயதிலேயே திருமணம் செய்து வைப்பது வழக்கம். அந்த வகையில் தனது எட்டு வயதிலேயே கல்யாணியை கரம் பிடித்திருக்கிறார். அவரின் மனைவிக்கும் அப்போது வயது எட்டு. திருமணத்திற்கு பிறகும் தனது படிப்பை தொடர்ந்தவர், அன்றைய பதினொறாம் வகுப்போடு பள்ளிப்படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, 1942ஆம் ஆண்டு தீவரமடைந்த விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக செயற்பட ஆரம்பித்திருக்கிறார். தேசவிடுதலைப் போராட்ட உணர்ச்சி கொண்ட மாணவர்களை எல்லாம் ஒன்றுதிரட்டி அன்றைய பெரியவர்கள் தலைமையில் விடுதலைக்கு ஆதரவாக குரல் கொடுத்திருக்கிறார்.

1942 ஆகஸ்ட்ல் தீவிரமடைந்த "வெள்ளையனே வெளியேறு" போராட்டத்தில் ஏராளமான தலைவர்கள் பிரிட்டிஷ் அரசால் கைதுசெய்யப்பட்டனர். சின்ன அண்ணாமலை தலைமையில் தீவிரமான போராட்டத்தை நாங்கள் கையாண்டோம். மேடையில் வெள்ளையர்களுக்கு எதிராக முழக்கமிட்டோம். நானும் கைதுக்கு உள்ளாவேன் என்ற செய்தி கிடைக்க எங்கள் குடும்பத்தினர் கலங்கி போய்விட்டனர். என் மாமனார் என்னையும், என் தம்பியையும் வெற்றியூரில் பாதுகாப்பாய் கொண்டு போய் வைக்க, கைதாகாமல் போலீஸ் பிடியிலிருந்து விடுபட்டோம்.

குடும்பப் பொறுப்பு என் கண் முன் வந்துநிற்க, அத்துடன் போராட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, பணிபுரிவதா? தொழில் செய்வதா? என்ற முடிவை நோக்கி யோசிக்கும் போது, சென்னையில் சின்ன அண்ணமாலையின் "தமிழ்ப் பண்ணை" நூலகத்தை பார்த்துக் கொள்ளும் வேலை இவருக்கு கிடைத்தது.

வேலைக்கு இடையில் நல்ல இலக்கிய புத்தகங்களை விரும்பி வாங்கி படித்து தமிழ் ஆர்வத்தை வளர்த்தெடுத்துக் கொண்டார். அருணன் அவர்களிடம், என்னிடம் ஐநூறு ரூபாய் இருக்கிறது ஏதாவது ஒரு தொழில் செய்யலாமா என்று நண்பர் ஒருவர் கேட்க, தமிழ்ப்பண்ணை நூலகர் பொறுப்புக்கு நன்றி சொல்லிவிட்டு 1944-ல் "புத்தகாலயம்" என்ற நூல் வெளியீட்டு நிறுவனத்தை மயிலாப்பூரில் தொடங்கி தங்களது முதல் நூலை இருவரும் வெளியிட்டு இருக்கிறார்கள்.

அச்சடித்த அத்துனை புத்தகங்களும் குறைந்த நாட்களிலேயே விலைபோகாத புத்தகங்களாகவே காட்சியளிக்க "புத்தகாலயம்" தனது வெளியீட்டுப்பணியை நிறுத்திக் கொண்டது. சாப்பாட்டுக்கு ஏதாவது செய்ய வேண்டுமே என தலைவர்களின் படங்கள், பத்திரிகைகள், புத்தகங்களை




சென்னையில் 14.12.2024 அன்று நடைபெற்ற அருணோதயம் அருணன் அவர்களின் நூற்றாண்டு விழாவில் 100 புதிய நூல்களை தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் வெளியிட பிரபல ஜவுளி தொழிலதிபர் நல்லி குப்புசாமி செட்டியார் பெற்றுக் கொள்கிறார். உடன் அருணன் அவர்கள் குடும்பத்தினர், பதிப்பாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள் உள்ளனர்.

தலைச் சுமையாக சுமந்து வாசகர்கள் கூடும் கடற்கரை, வீடுகள் என பல இடங்களில் விற்பனை செய்து வருமானத்தை பார்த்திருக்கிறார் அருணன்.

திறமை கொண்ட இளைஞர் இப்படி தெருத் தெருவாக சுத்தலாமா, வா நான் வேலை தருகிறேன் என்று ‘முல்லை முத்தையா’ வாய்ப்பு கொடுக்க, முல்லை பதிப்பகத்தின் மதுரை நிர்வாகியானார். அங்கு பணிபுரிந்து கொண்டிருக்கும் போது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் போன்றோரின் அறிமுகம் கிடைத்தது.

நிர்வாகியாக இருப்பதோடு கவிதை, கட்டுரை என எழுத ஆரம்பித்த அருணன் அவர்களின் படைப்புகள் அன்றைய பிரபல இதழ்கள், தினசரிகளில் வெளிவர ஆரம்பித்தன. எழுத்தாளர் ஆன அருணன், முல்லை பதிப்பகத்திலிருந்து விலகி சினிமாவிலும் பாடல்கள் எழுத ஆரம்பித்திருக்கிறார். நண்பர்களோடு இணைந்து “தென்றல்” பத்திரிகையை தொடங்கி நடத்தியிருக்கிறார். தமிழர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தாலும் தொடர்ந்து நடத்த நிதி மிகப்பெரிய தடையாக இருந்ததால் தென்றல் காற்றோடு கலந்தது.

மீண்டும் பத்திரிகையாளராக பல்வேறு பத்திரிகைகளில் பணிபுரிந்த அருணன், சொந்தமாக “அருணன்” என்ற பெயரில் பத்திரிகை தொடங்க மனைவியின் அத்துனை நகைகளையும் விற்றுவிட்டார். மீண்டும் சொந்த ஊர். சிறிது காலத்திற்குப் பிறகு மீண்டும் சென்னை. மீண்டும் பத்திரிகை பணி. இப்படியே காலம் அவரை பந்தாடியது. மனிதர் எதற்கும் கலங்காது தன் மனைவி, பிள்ளைகளோடு மீண்டும் சென்னையில் புத்துணர்ச்சியோடு வாழ்க்கையை தொடங்கி நடத்திக் கொண்டிருந்தார். இதில் தான் நாம் சாதிக்கப் போகிறோம் என்று தெரியாமல் 1953-ல் தன் கைவசம் இருந்த பொது நிறுவனப் பங்குகளை விற்று சிறிது தொகையுடன் “அருணோதயம்” நூல் வெளியீட்டு நிறுவனத்தை தொடங்கி, கவிஞர் கண்ணதாசனின் “ஈழத்து ராணி” சிறுகதை தொகுப்பை முதல் நூலாக வெளியிட்டு மீண்டும் பதிப்பகப் பணியை தொடங்கியுள்ளார்.

தொடர்ந்து கவிஞரின் நூல்களை அருணன் அவர்கள் வெளியிட மெல்ல, மெல்ல அருணோதயம் வளர ஆரம்பித்தது. விற்பனையில் மந்தமடைந்தாலும் வாசகர்கள் இருப்பிடம் தேடி விற்பனை செய்யும் வழிமுறையை கையாள விற்பனை கொஞ்சம் கைகொடுத்திருக்கிறது. அடுத்தடுத்து புத்தகங்களை வெளியிட மிகவும் சிரமப்பட்டு, நிதி ஆதாரம் இன்றி கடுமையான போராட்டங்களை சந்தித்திருக்கிறார் அருணன். நண்பர்கள் உதவி, நிதி நிறுவனங்களில் கடன் என முயற்சிகளை கைவிடாமல் முயன்று, காலத்திற்கு ஏற்ற புத்தகங்களை தொடர்ந்து வெளியிட ஆரம்பித்திருக்கிறது அருணோதயம்.

தமிழ் மீது ஆர்வம் கொண்டதால் காசாக்கும் நூல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், வாசகர்கள் பயன்பெறும் நூல்களையே தொடர்ந்து வெளியிட்டு வந்திருக்கிறார். நல்ல நூல்களையும், பயனுள்ள நூல்களையும் வெளியிடும் நிறுவனமாக அருணோதயத்தை வாசகர்கள் மத்தியில் உருவாக்கியிருக்கிறார். அருணோதயத்தில் ஒரு நூல் வருகிறது என்றால் வாசகர்கள் நம்பி வாங்கி படிக்கும் விதத்தில் எழுத்துப்பிழை, அச்சு வடிவமைப்பு, தாளின் தரம் போன்றவற்றில் கவனம் செலுத்தியிருக்கிறார். இதுவரை சுமார் 3000 தலைப்புகளில் நூல்களை வெளியிட்டிருக்கிறது அருணோதயம். பல புதிய பெண் எழுத்தாளர்களை இனம் கண்டு அவர்களின் படைப்புகளை நூலாக வெளியிட்டுள்ளார் அருணன்.

இவர்கள் வெளியிட்ட சிறுவர்களுக்கான நூல்கள் பல்வேறு கேடயங்களை பரிசாக பெற்றிருக்கிறது. அத்துடன் பல்வேறு நூல்களுக்கு அரசு விருது மற்றும் பல்வேறு தனியார் அமைப்புகளின் விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

‘வாழ்க்கை வாழ்வதற்கே’, ‘இல்லற இன்பம்’, ‘புது வாழ்வு’, ‘நாட்டியக்காரி’ என பல நூல்களை அருணன் அவர்கள் எழுதியிருக்கிறார்.

ஒரு மனிதன் ஒரு தொழிலை வெற்றிகரமாக செய்வதற்கு மூலதனம் மட்டும் போதுமானது அன்று. அந்தத் தொழிலைப் பற்றிய முழு அறிவும், திறமையும், தகுதியும் இருந்தாக வேண்டும். அப்பொழுதுதான் அந்தத் தொழில் வெற்றியடையும் என்று புதிய தலைமுறைக்கு ஆலோசனை சொல்லும் அருணன் அவர்கள், மூளை பலமும், அனுபவ அறிவுப் பலமும், கடுமையான உழைப்பும் என்னிடம் இருந்ததால் தான் நான் இந்த அளவுக்கு வளர்ந்தேன் என்று தன்னுடைய “வெற்றிப் பாதை” நூலில் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார்.

தொழிலில் போட்டி, பொறாமை, மன எரிச்சல் அடைபவர்கள் நிறைய பேர் இருப்பார்கள். இவர்கள் காலை வாரிவிட்டு வீழ்த்த முயற்சிப்பார்கள், இவர்களை எல்லாம் பொருட்படுத்தாமல் நம் தொழிலில் நாம் கவனம் செலுத்தினால் நமது வெற்றிப்பாதை தொடரும். அதேபோல் தொழிலுக்காகக் கடன் வாங்கலாம், ஆனால் கடன் வாங்குவதே தொழிலாகக் கொண்டால் அந்த தொழில் வளர்ச்சியை நோக்கி செல்லாது. எனவே கவனமுடன் நிதி ஆதாரத்தைக் கையாள வேண்டும் என்று தொழில் முனைவோர்க்கு தனது அனுபவத்தையும் அந்நூலில் சொல்லியிருக்கிறார்.

ஒரு செயலை செய்வதற்கு முன் பலமுறை திட்டமிடு, திட்டமிட்டு செயலை தொடங்கியதும் உலகமே நிலை குலைந்தாலும் தனது திட்டத்தை மாற்றாமல், கைவிடாமல் செய் நிச்சயம் வெற்றியடைவாய் என்றும் தன்னம்பிக்கை தருகிறார். ஒரு திட்டத்தை செயல்படுத்தும் போது தோல்விகள் குறுக்கிடும், ஏமாற்றத்துக்கு இலக்காக நேரிடும், எதிர்ப்புகள் கிளம்பும் இவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல், மனந்தளராமல் பணியை தொடருங்கள், நிச்சயம் உங்கள் குறிக்கோளை எட்டிப்பிடித்துவிட முடியும் என்று சொல்கிறார் அருணன் அவர்கள்.

அருணோதயத்தில் நூல்களை எழுதி பதிப்பிக்க கொடுத்த எழுத்தாளர்கள் ஒற்றைக் குரலில் சொல்வது அருணன் அவர்கள் சொல்லியபடி நூல் வெளிவந்ததும், அச்சடித்த பிரதிகளுக்கான சன்மானத்தையும், ஐந்து பிரதிகளையும் கொடுத்து எழுத்தாளர்களை கௌரவிப்பார் என்று. அதுபோல் இன்றும் அவர்களது மகன்கள் திரு.சோலையப்பன், திரு.லெட்சுமணன், திரு.வெங்கடாசலம் தனது தந்தை வழியில் நிறவனத்தை நடத்தி வருகிறார்கள்.

- உணவு உலகம் இராம மெய்யப்பன்,
பத்திரிகையாளர், பதிப்பாளர்

# இராம காவியம்

தேவகோட்டை அரு.லெட்சுமணன்
(அலெக்ஸ்)

## ஜடாயு மோட்சம் - (9)

விண்ணிலே சீதையை விமானத்தில் கண்ட ஜடாயு
விரும்பத் தகாதது செய்கிறாய் ராவணா
சீதையை எடுப்பாயோ அவள் என் மகள்
மாதவன் கொண்ட மனைவி யாவாள்
நண்பன் தசரதன் அன்பு மருமகள்
விடு அவளை என தடுத்தான்
கடுமையாக தாக்கி போர் செய்தான்
கூரிய தன் மூக்கால் குத்தினான்
கோபம் கொப்பளிக்க கொதித்த ராவணன்
சிவனின் வாளால் சிறகை வெட்டினான்
வாளால் குத்தி மண்ணிலே வீசினான்
ராமன் இலக்குவன் நடந்து வரும் பாதையிலே
கிழிந்த நாராய் கிடந்தான் ஜடாயு
உயிரைப் பிடித்துக் கொண்டு ராமனை எதிர்நோக்கி
பார்த்தனர் இருவரும் பதறிப் போயினர்
ஜடாயுவை மடியிலேயே தாங்கி நடந்ததை கேட்டான்
ராவணன் செய்த செயலைச் சொல்லி
சீதையை காக்க புறப்படச் சொன்னான்
தந்தைக்கு செய்யா இமக்கடனை
ஜடாயுக்கு செய்து சாந்தி பெற்றான்
சொர்க்கம் தன்னில்
தந்தையை காண்பீர்
சொல்லாதீர் இன்றைய நிலையை
வருத்தம் கொள்வார்
விண்ணிலே நீவீர் நிம்மதியுற
வேண்டினேன் என்றான்
பின்னர் இருவரும் பெரும் நடையாக
சுக்ரீவன் இருக்கும் இடம் தேடி
மாதா சபரி சொல்படி நடந்தனர்.

## சபரி முக்தி அடைதல் - (10)

மாதா சபரியை காண கடமையாய்
இருவரும் நடந்தனர் ஆசிரமம் நோக்கி
சித்தர் கூடம் இவர்கள் இருக்க
மாதங்க முனிவர் சபரியை வாழ்த்தி
அவளின் தவம் முழுதும் சிறக்கவே
இருக்கச் சொன்னார் ராமனை எண்ணி
ராமர் வருவது திண்ணம் என்றார்
சபரியின் அருந்தவம் உண்மை என்றார்
தன்னுடன் இருந்த தவமுனிவோரை
அன்புடன் அழைத்து
பிரம்மலோகம் சரணடைந்தார்
தினம் தினம் புது மலர் திரட்டியே
மனம் மகிழ பாதையில் பதித்து
ராமர் வரவை நினைத்து இருந்தாள்
புதுமலர் தினமும் பூத்தது இதற்கே
எதிர்ப்படும் முனிவரை ராமராய் எண்ணி
ஏமாந்த நாட்கள் பலவும் உண்டு
காணும் அனைவரும் கவலை உற்றனர்
சபரியின் தவம் நலம் பெற வேண்டினர்
தினம் போல் புதுமலர் பாதையில்
பதித்து பரமனை நினைத்தாள்
மலர் மேல் நிழல் பட
மயங்கிய சபரி நிமிர்ந்து பார்த்தாள்
ராமன் இலக்குவன் அவள் முன் நிற்க
காலடி மீது கண்ணீர் விட்டு மலர்களை
தூவி மகிழ்ந்து ஆசிரமம் அழைத்து
அமரச் செய்தாள்
பசிக்கு உகந்த பல கனிபறித்து
ருசி பார்த்ததை எடுத்து படைத்தாள்
ராமன் பசியாற அனைத்தையும் படைத்தாள்
இலக்குவன் எச்சில் பழத்தை
எப்படி உண்பது என்றான்?
தவமுனி சொன்னது
தன் கண் முன் நடக்க
ஆனந்தம் கொண்டாள்
இறைவனை நினைத்தாள்
புன்னகை மாற
புதுப்பொலிவுடன் ராமனும்
சொன்னான் இலக்குவன் அறிய
பாசம் முட்டிய மாதாவின் அன்பு
நேசம் மிகுதியால் நம்மையே நினைத்தது
தேடிய பழம் எல்லாம் தெவிட்டா அமுதம்
தன்னிலை மறந்த தவமும் பாசமும்
முன்னர் இருப்பது தாயின் பக்தி
நீயும் உண்பாய் என்றான் ராமன்
விடைபெற எண்ணி வேண்டிய ராமன்
மாதா சபரி ராமனை நோக்கி
நான் முக்தி பெற குருவாய்
நீ இருந்து உபதேசி என்றாள்
ராமரும் தான் அறிந்த குருவின்
நவபக்தி மகிமையை முழுதும்
சொன்னார்
கண்ணை மூடியே ராமனை
நினைத்தவள்
முத்தியும் பெற்றாள் முழுஜோதியாய்
விண்ணில் கலக்க விரைந்து சென்றாள்
செல்லும் முன்னர் ராமனை வணங்கி
சுக்ரீவன் இருக்கும் இடத்தை
சொன்னாள்
பம்பா நதியை கடந்து ரிஷி
முகப்பர்வதம் அடையச் சொன்னாள்
உந்தன் பக்தன் ஒருவன் உள்ளான்
அவனே ஹனுமான் அவனே
முதல் மந்திரியாவான்
பலபல நன்மைகள் உன்னால் முடிய
பலரும் இங்கே காத்தே இருக்க
அயோத்தி விட்டு வந்தது விதியே
மற்றவர் வாழ்வு சிறக்க உன் அருளால்
மாதா சபரியை இருவரும் வணங்கி
சுக்ரீவன் தன்னை காணவே எண்ணி
மண்ணில் நடந்தனர் மனதை தேற்றியே
தன்னிலை மறந்த சபரியின் பக்தி
காலம் உள்ளவரை தவமாய் அறியும்.



## புத்தக வெளியீட்டு விழா

ராம்குமார் சிங்காரம் எழுதிய 60 சுயமுன்னேற்ற கட்டுரைகள் கொண்ட 'நாணயக் கனவுகள்' என்ற நூலினை தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் வெளியிட திரைப்பட பாடலாசிரியரும் கவிஞருமான திரு. நெல்லை ஜெயந்தா பெற்றுக் கொண்டார். உடன், கல்லூரிக் கல்வித் துறையின் ஓய்வுபெற்ற இணை இயக்குநர் திரு.ஏ.மதிவாணன், நூல் வெளியீட்டாளர் திரு.எஸ்.பி.அண்ணாமலை ஆகியோர் உள்ளனர். இந்நூல் ராம்குமார் சிங்காரம் எழுதிய ஒன்பதாவது நூல் என்பது குறிப்பிடத்தக்கது.



சண்முகநாதபுரம் மாத்தூர் அரும்பாக்கூர் மன்னர்வயலார் வீடு SP.RM.SP.N.RM. சண்முகம் என்ற சுப்பிரமணியன் - மீனாட்சி ஆச்சி (கண்டனூர்) சதாபிஷேகம் 06-01-2024 அன்று சண்முகநாதபுரத்தில் சிறப்பாக நடைபெற்றது. சென்னை உயர் நீதிமன்ற மேனாள் நீதியரசர் டாக்டர் M.சொக்கலிங்கம், தேவகோட்டை ராமநாதன், ஆங்கிலக் கவி Rm.சண்முகம் செட்டியார் உள்ளிட்டோர் சதாபிஷேக தம்பதிகளை வாழ்த்திப் பேசினர்.

# சிறுவர் சிறுகதை ஆங்கில நூல் வெளியீட்டு விழாக்கள்





முனைவர் தேவி நாச்சியப்பன் எழுதிய “பயணப் புறாவில் பறப்போமா!” சிறுவர் சிறுகதை நூலின் ஆங்கில மொழியாக்க வெளியீட்டு விழா நெற்குப்பையில் சோமலெ நினைவு கிளை நூலகத்தில் டிசம்பர் 28–ஆம் தேதி அன்று நடைபெற்றது. அழகப்பா பல்கலைக்கழக பேராசிரியை முனைவர் சுஜாதா மாலினி நூலை வெளியிட்டார். அந்த நூலை மையமாக வைத்து கிராமத்துச் சிறுவர்கள் ஆங்கிலத்தில் நாடகம் மற்றும் வினாடி–வினா நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றனர். ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்த திருமதி ஷாலு முத்தையா, குருவிக்கொண்டான்பட்டி K.R.M.AL. குடும்பத்தைச் சார்ந்தவர். அமெரிக்காவில் வசிக்கும் இவர் தமிழக கிராமப்புற மாணவர்களுக்கு கணினி வழியாக வாரந்தோறும் ஆங்கில வகுப்புக்களை சேவையாக நடத்தி வருகிறார். அவர் வசிக்கின்ற பிலடெல்பியா நகரில் ஜனவரி ஐந்தாம் தேதி நடைபெற்ற இந்த நூலின் அமெரிக்க வெளியீட்டு நிகழ்வில் முனைவர் செல்லப்பன் ராமசாமி வெளியிட, அறிஞர் வ.சு.ப. மாணிக்கனாரின் கொள்ளுப் பேத்தி ஓவியா முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். – தகவல் : L. சோமசுந்தரம்



# குறள் பாட்டு

குழந்தைக் கவிஞர் செல்ல கணபதி

அதிகாரம் – 38 (ஊழ்)

374) இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதல் வேறு.
உலகத்து இயற்கையை இருவே றாக
ஊழ்பிரித் திடுமாம் எப்படித் தெரியுமா
செல்வந் தராதல் வேறு அறிவில்
தேர்ந்தவ ராவது வேறுஎனக் காட்டும்.
ஊழின் வலிமையே மக்களை வாழ்வில்
உயர்ந்த அறிவின ராய்ஒரு வரையும்
வாழ்க செல்வராய் எனஒரு வரையும்
வாழ்வில் பிரிக்கும் வரையறை செய்யும்.

375) நல்லவை எல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.
செல்வம் தேட முயன்றிடும் வேளையில்
தீயதை நல்லதாய்ச் செய்யும் நல்ஊழ்
அல்லது நடந்து அனைத்தையும் இழப்பது
அய்யோ தீஊழ் ஆக்கும் தீவினை
நல்லதைத் தீயதாய் தீயதை நல்லதாய்
நாளும் மாற்றும் ஒருவனின் ஊழ்வினை
வல்லமை யோடு வருவதை ஏற்பவன்
வாழ்க்கையில் மிகப்பெரும் சாதனை.

377) வகுத்தான் வகுத்தவகை அல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.
கோடி சேர்த்தவன் துய்ப்பதும் அதனை
கொடுத்தவன் வகுக்கும் விதிப்படி அமையும்
கோடி இருந்தும் துய்க்க வியலா
கொடுமையும் நேரும் ஊழின் வலிமையால்
செல்வம் சேர்க்க விதிதுணை ஆகலாம்
செல்வம் துய்க்கவும் விதிதான் ஒருதுணை
செல்வத்தை வாரி வழங்கி மகிழச்
செய்வது விதிதான் கொடுப்பினை வேண்டும்.

அதிகாரம் – 39 (இறைமாட்சி)

381) படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.
அரசருள் யாரோ சிங்கம் போன்றவர்
ஆற்றலாய் படைகுடி விளைச்சல் அமைச்சர்
சிறந்தநற் காப்புஇடம் செவ்விய நட்பென
சேர்ந்த ஆறினைக் கொண்டவன் சிங்கமே
ஆற்றலாய்ப் படையும் அமைதியாய்க் குடிகளும்
அமோக விளைச்சலும் அறிஞராய் அமைச்சரும்
மாற்றான் புகுந்திடாத் தற்காப்பு இடமும்
மனம்நுகர் நட்பும் மன்னர்க்கு அணிகலன்.

# திருமந்திரச் சுவை – 42

## மாயை



பூங்குன்றம் இராமசாமி

நம் வாழ்வே மாயம் (மாயை) நிறைந்தது தான்.

கல்வி, செல்வம், உறவு, உலகப் பொருள்கள் அனைத்தும் 'மாயைப் பொருளே'! அவை நமக்கு அனுபவம் தந்து விலகுவன. அவற்றில் எதுவும் நம்கூட வரப்போவது இல்லை! மாயையால் நாம் பெறும் அனுபவம் மட்டுமே நம்மோடு கூட வரும்.

'நான், எனது' என்னும் நம் ஆணவம் நீங்கவே மாயைப் பொருள்களை நம்மோடு சேர்த்து, நீக்குகிறான் இறைவன். ஆனால், நாமோ அவற்றுள்ளேயே ஊறித் திளைத்துப் போகிறோம்.

நன்கு உணர்ந்தோர் 'உலகப் பொருள் அனைத்தும் மாயைப் பொருள்' என்பதை அறிவர். அவ்வாறு அறியாதோர், அவ் அறிவைப் பெறும் வரை மாயைப் பொருள்களையே பின்பற்றி மருகுவர்!

அவ்விதம், ஓர் பொருளை நாமும் 'மாயைப் பொருள்' என்று உணரும் போதே, நம் ஆணவம் தணிகிறது. அப்போதே, நாம் அதனின்று விடுபட்டுத் தெளிந்து இறை உண்மையை உணர்கிறோம்.

மாயைப் பொருள் அனைத்தும் நம் மனத்தை மயக்கும் மாயக் கண்ணாடியே. நம் வினைப்பயன் நீங்கும் வரை அது நம்மை ஆட்டிப் படைக்கும். 'பணமும் அவ்வாறே! அதுவும் ஓர் மாயைப் பொருளே'!

இதனைத் திருமூலர் வாக்காய்க் காணலாம்.
மனத்தில் எழுந்ததோர் மாயக்கண் ணாடி
நினைப்பின் அதனின் நிழலையுங் காணார்
வினைப்பயன் போக விளக்கியும் கொள்ளார்
புறக்கடை இச்சித்துப் போகின்ற வாறே (10.1681)

உயிர்களின் மனத்தில் எழுந்தது ஒரு மாயக்கண்ணாடி (நினைப்பு). அது மாயம் என்பதையும், அது மயக்கும் என்பதையும் அவர் அறியார். அவரது வினைப்பயன் அது நாம் எவ்வளவுதான் விளக்கினாலும் அவரது வினை கழியாத நிலையில் அவர் அதனை ஏற்றுக் கொள்ளார். அஃதாவது, 'சாக்கடை நோக்கி விரும்பிச் செல்வோர்' போல்வது அது.

வினையால் வரும் தீயபயன்களை அறிந்தும் மாயைப் பொருள்களை விடமாட்டாமைக்குப் பக்குவம் இன்மையே காரணம். பக்குவம் இன்மையும் ஓர் வினையன்றோ? ஆகவே, வினை நீங்கும் வரை பக்குவமின்மையும் தொடரும்.

இது பக்குவம் அற்றவர் நிலை.

ஆயினும், 'மாயக் கண்ணாடி' காட்டுவதில் இரு பொருள் உண்டு.

'பாம்பை அடித்துக் கொல்லுதல்' ஒரே செயல்தான்!

ஆயினும், பக்குவமற்றவன், 'நல்ல வேளை பாம்பு ஒழிந்தது' என மகிழ்வான். அது தன்னலம்! ஆனால், பக்குவப்பட்டவனோ, 'ஓர் உயிர் வருந்தி மாய்ந்ததே' என வருந்துவான். அது கருணை.

செயல் ஒன்றுதான்.! எண்ணந்தான் இரண்டாகிறது.!

'மாமிச உணவும்' இதே போன்ற மாயக்கண்ணாடிதான்!

மாயக் கண்ணாடி கீழ்நிலையாளனுக்கு அவனது வினையிருப்பால் அதனை மாற்றிக் காட்டும். மேனிலையாளனுக்கு நேர்வழியைக் காட்டி நிற்கும். அவர் அதனை மாயை என்று உணர்வார். எனவே, அவர் மாயையுள் ஆட்பட்டார்.

காரியம் ஒன்றுதான். உணர்வு தான் மாறுகிறது!

புறக்கடை : சாக்கடை. ★

# உங்களுடன் உரையாடுங்கள் 3



எம். சிதம்பரம்

புத்தகம் இல்லாத அறையில் என்னை பூட்டி வையுங்கள் மூன்று நாட்களுக்குள் அங்கு ஒரு புத்தகம் உருவாகியிருக்கும்... அதை.... நானே எழுதியிருப்பேன்... நம்மால் முடியாதது எதுவுமே இல்லை. ஆனால் இவ்வுலகமோ உன்னால் முடியாது, உன்னால் முடியாது என சதா உரக்கக் கூறிக்கொண்டே இருக்கும்.

இந்த உன்னால் முடியாது என்பது இவ்வுலகில் உள்ள எவரிடமிருந்து வேண்டுமானாலும் வரட்டும். ஆனால் உங்களிடமிருந்து மட்டும் வரக்கூடாது. வரவே கூடாது. வந்தால் அதை விட பேராபத்து வேறு எதுவுமில்லை. அது நாமே நம் கால்களை வெட்டிக் கொள்ளுவது போலாகும். கண்களை குத்திக் கொள்வது போலாகும். தகர்த்து விடும் உங்கள் நம்பிக்கையை.

அப்படி உள்ளுக்குள் இருந்து வரும் வார்த்தைகளுக்கு Inner voice, Inner dialogue (உள் உரையாடல்) என்று சொல்வார்கள். இந்த உன்னால் முடியாது என்பது பிறரிடமிருந்து வந்தால் அதை உன் காதில் வாங்கிக் கொள்ளாதே தொடர்ந்து முன்னேறு. உன்னிடமிருந்தே வந்தால் அதை அனுமதியாதே. அப்படிப்பட்ட எண்ணங்களோ, வார்த்தைகளோ உங்கள் உள் உரையாடலில் வந்தால், உடனே அதற்கு சிவப்பு கொடி காட்டி விடு.

இந்த உள் உரையாடலின் போது, நம் மனதில் சுமார் அறுபதினாயிரம் எண்ணங்கள் தோன்றுவதாக வல்லுனர்கள் கூறுகின்றனர். அப்படித் தோன்றும் எண்ணங்களில் எதிர்மறையான எண்ணங்களே அதிகமாய் இருக்கும். அவற்றில் மிக பிரத்யேகமான ஒன்று தான் உன்னால் முடியாது, உன்னால் முடியாது என்பது.

இந்த உள் உரையாடல் பற்றி வல்லுனர்கள் என்ன சொல்கிறார்கள் அறிந்து கொள்வோமா?

உள் உரையாடல் என்பது நமது மன ஓடையில் துள்ளி நீந்தும் ஆயிரம் மீன்களைப் போல்... நம் மன வானில் சிறகடித்து பறக்கும் பறவைகள் போல. அவ் எண்ண ஊற்றில், எண்ணங்கள் ஊறிய வண்ணம் இருக்கும்.

இந்த உள் உரையாடல் மிகவும் சக்தி வாய்ந்தது. அதுவே உங்கள் வாழ்க்கையைப் பற்றிய கண்ணோட்டத்தையும், அணுகுமுறையையும் உருவாக்கும். அது உங்களைத் தட்டி கொடுப்பதாகவும் இருக்கலாம் அல்லது அடித்து நொறுக்குவதாகவும் இருக்கலாம். உங்கள் மீது அக்கறையாகவும், அன்பாகவும், ஆதரவாகவும் இருக்கலாம் அல்லது நையாண்டி, கேலி செய்வதாகவும் இருக்கலாம்.

இந்த உள் உரையாடல் உங்களுக்குள் அடிக்கடி நிகழலாம் இல்லை நிகழாமலேயே இருக்கலாம். ஏன் எதிர்மறையான சிந்தனைகள் வருகின்றன? நம் குழந்தைப் பருவ அனுபவங்கள், வளர்ந்த சூழ்நிலை ஆகியவையே காரணம். இந்த உள் உரையாடல் நம் தவறுகளையும், குறைகளையும் மட்டுமே பூதகரமாக்கி பேசுபொருளாக்கினால் நம் மனநிலையை வெகுவாக பாதித்து நம் தன்னம்பிக்கையை அறவே சிதைத்து தாழ்வு மனப்பான்மை உடையவர்களாக்கிவிடும்.

இந்த எதிர்மறையான உள் உரையாடல்களை அப்படியே உண்மையென நம்பி ஏற்றுக் கொண்டால் மன அழுத்தத்தை உண்டாக்கி விடும். இது தீய சுழற்சியாக உருவெடுத்து மன நிம்மதியை முழுவதுமாக கெடுத்து, நம்மை நிலைகுலையச் செய்துவிடும். நியாயமற்ற பழி சுமத்தி தேவையற்ற குற்ற உணர்ச்சியினை உருவாக்கும். உங்கள் திறமைகளையும், சாதனைகளையும் பின்னுக்குத் தள்ளி உங்கள் குறைகளை அளவுக்கு அதிகமாக பூதகரமாக்கி உங்கள் பயங்களை அதிகரித்து அரிய வாய்ப்புகளைக் கோட்டை விடச்செய்யும்.

இது போன்று எதிர்மறையான உள் உரையாடல் அடிக்கடி நிகழ்ந்தால் நாம் என்ன செய்ய வேண்டும்?

1. அவற்றை உடனேயே இனங்கண்டு கொள்ளுங்கள்.
2. அப்பொழுது எப்படி நடந்து கொண்டீர்கள் என உடனே குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அதை ஆங்கிலத்தில் journalising என்பார்கள். அடுத்த முறை அது நிகழும் போது நீங்கள் கவனமாய் இருப்பீர்கள். அப்பொழுது நடந்தது தவறாக இருப்பின் இனிமேல் அவ்வாறு செய்யமாட்டீர்கள்.
3. அவற்றை விலக்கி மாற்று சிந்தனைகளை கொண்டு வாருங்கள்.
4. உங்கள் மீது வீணாகக் கோபம் கொண்டு கண்டிக்காமல், உங்களையே தண்டித்துக் கொள்ளாமல் உங்கள் மீது இறக்கம் காட்டுங்கள். உங்களை உற்சாகப்படுத்திக் கொண்டு வெற்றிப் பாதையில் ராஜநடை போடுங்கள்.


## வேலை தேவை

| | |
|---|---|
| பெயர்: | S. சிதம்பரம், B E., (ECE) |
| கோவில், ஊர்: | நேமம் கோவில், ராங்கியம் |
| பிறந்த தேதி: | 29.09.2001 |
| மதிப்பெண்: | 9.07 பாயின்ட்ஸ் |
| கல்வி ஆண்டு: | 2019-2023 |
| Project: | e shaped antenna for montoring pacemaker; Antenna used in pumping the heart in monitoring pacemaker |
| அறிந்த மொழிகள்: | ஆங்கிலம், தமிழ் |
| தொடர்புக்கு: | 98652 19159 |

# அன்பின் ஐந்திணை



அரியக்குடி " ஸ்ரீ" – சபாரத்தினம்
(garudasaba@gmail.com)



திருப்பாவை, திருவெம்பாவை, பகல் பத்து, வைகுண்ட ஏகாதசி, இராப்பத்து, திருவாதிரை என பீடுநடை போடும் மார்கழி மாதத்தில்...

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத

முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்...

1008 பிறை கண்ட ஓர் அற்புத மனிதரின் சதாபிஷேக வைபவம், தேவகோட்டையில்... மார்கழியில் திருவிழா என்றால் அரியக்குடிக்கும் அழைப்பு வரும் தானே. ஆண்டாள் சந்நதி என்கிற அடைமொழி எங்களை எல்லோரோடும் தாயாதி வழி சொந்தங்கள் ஆக்கியருள் புரியும். ரெங்கமன்னார் மாப்பிள்ளை என்றால் நாச்சியார் வீட்டாருக்குரிய மாமக்காரர்களாக கலந்து கொள்ள, வாழ்த்துக்களை வாங்கி வர, மூட நெய் பெய்து முழங்கை வழிவார கூடியிருந்து உண்டுவர ஆவலாய் போயிருந்தேன்.

ஆச்சியும், செட்டியாரும் செய்வித்த அதிசயங்கள் வாழ்நாளில் பிறரொருவர் செய்துவிட முடியுமா என்று ஒவ்வொருவரையும் புருவம் உயர்த்திப் பார்க்க வைத்தது. தெளிந்த நீரோடையில், தனக்குள் ஒளிந்திருக்கும் ஈரத்தை உச்சரிக்காத கூழாங்கல் போல, அமைதியாய் எந்த ஆர்ப்பரிப்பும் இல்லாது விழா நாயகியும், நாயகரும் வீற்றிருந்ததைப் பார்ப்பதற்குக் கோடிக் கண்கள் வேண்டும் போல இருந்தது,

வளரும் இளம் வயதினருக்கு படம் பிடித்துக் காட்டப்பட வேண்டிய வாழ்வியல் இவர்களது வாழ்க்கை. இதில் ஒளிந்திருக்கும் ஒற்றை வரிச் செய்தி நெறி பிறழாது வாழ்ந்தால், கல்வியால் விண்ணையும் எட்டலாம், என்பதே. கதைக்குள் வருவோம். ஒரு வீட்டில் மூன்று பெண் பிள்ளைகள், இரண்டு ஆண் பிள்ளைகள். தந்தை இளம் வயதில் காலமானதால், தாயார் வளர்க்க வேண்டிய காலச் சூழல்.

சரஸ்வதி அருள்பாலிக்கும் குடும்பம். அண்ணனும், தம்பியும் படிப்பில் கெட்டி. தம்பி முத்துக்கருப்பன் SSLC எனும் பள்ளி நிறைவுத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் பெறுகிறார். குடும்பத்தின் நிதி நிலைமையைப் பிள்ளைகளுக்குத் தெரிவிக்காமல் படிப்பைத் தொடர வைக்கிறார் தாயார். காரைக்குடி வள்ளல் அழகப்பர் கல்லூரியில் "இண்டெர்மீடியெட்" வகுப்பில் சேர்ந்த பிள்ளை, கல்லூரியில் முதலாவதாக வருகிறது. தம்பி பட்டப் படிப்பிலும், அண்ணன் முதுநிலை பட்டப் படிப்பிலும் ஒரே சமயத்தில் சேர வேண்டும். சமகாலத்தில் இரண்டு பிள்ளைகளையும் படிக்க வைக்க தம் வீட்டுப் பொருளாதாரம் இடமளிக்காது எனக் கருதி, வீட்டின் தோதறிந்து அண்ணன் வேலைக்குச் செல்லவும், முதுநிலைப் படிப்பைப் பின்னர் தொடருவது எனவும் தீர்மானிக்கிறார்.

கம்ப நாட்டார் புகழும் மன்னு புகழ் கோசலை, தன் மணிவயிறு வாய்த்தவர்க்கு ஒரு இராமன் மட்டுமே. இங்கே இந்த மணிவயிறு வாய்த்த வள்ளியம்மை ஆச்சி பெற்றது இரண்டு இராமன்களை.

தம்பியின் கல்வி, அழகப்பா பொறியியல் கல்லூரியில் எலக்டிரிகல்ஸ் துறையில் தொடர்கிறது. பிள்ளை பல்கலைக்கழக அளவில் முதலிடம் பெறுகிறது. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனில் முதல் பணி. செட்டிநாட்டைத் தாண்டி நம் வாமணன் எடுத்து வைத்த முதலடி நெய்வேலி மண்ணில். அடுத்த அடியைக் கவியரசர் திறந்து வைக்கிறார் "பூமியில் இருப்பதும் வானத்தில் பறப்பதும் அவரவர் எண்ணங்களே."

1962-ல் இந்திய – சீனா யுத்தம் நடைபெறுகையில், தேசியத் தலைவர்களின் பேச்சால் கவரப்பெற்று, இந்திய விமானப் படையில் சேர்வதெனத் தீர்மானிக்கிறார். இந்திய விமானப் படையில் ஓராண்டு கால கடும் பயிற்சி. அதிலும் முதலாவதாக வருகிறார். இந்திய விமானப்படையின் Permanent Commission Officer Cader-ல் அன்றைய குடியரசுத் தலைவர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்கள் கையொப்பமிட்ட Parchment of Commission-ஐ (பட்டத்தை) பெற்றிருக்கிறார். இந்த நிலையை அடைந்த முதல் நகரத்தார் என்னும் பெருமையையும் பெற்றிருக்கிறார்.

பயிற்சியின் நிறைவில், இந்தியளவில் பணியிடங்களைத் தெரிவு செய்வதற்கு, பயிற்சி பெறும் அதிகாரிகளுக்கே வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. நம்மவரோ, பயிற்சியில் முதலாவதாக வந்ததால், அவர் பணியாற்ற விரும்பும் இடத்தை அவரே தேர்வு செய்கிற வாய்ப்பும் முதலாவதாக அளிக்கப்படுகிறது. இந்திய வரைபடத்தின் கடைசிப் பகுதியை, இந்திய – சைனா பார்டரில் உள்ள சௌபுவா என்னும் இடத்தை, தான் பணியாற்ற விரும்பும் இடமாகத் தெரிவு செய்து கொள்கிறார் நம் கதையின் நாயகர்.

பணிக்காலத்தில் விமானப் படை நம் நாயகரின் பணியில் நிரவியிருந்த அர்ப்பணிப்பைக் கண்டு, ஐஐடி டெல்லியில்



M.Tech, எலக்டிரானிக் இஞ்சினியரிங் படிக்கச் செய்திருக்கிறது. எதிலும் இரண்டாவதாக வரத் தெரியாத நாயகர் இதிலும் முதலாவதாக வந்திருக்கிறார். பின்னர் Defence Electronics Research Laboratory-யில் 8 ஆண்டுகள், சிவில் மற்றும் விஞ்ஞானிகளோடு சேர்ந்து பணியாற்றி Air borne jammer எனும் புதிய விண்வெளியில் பயன்படுத்தும் போர் நுட்பத்தை, இந்தியாவிலேயே உருவாக்கியிருக்கிறார்.

தனது இந்திய விமானப் படையில் பணியாற்றிய 26 ஆண்டு காலங்களில் இந்தியா - பாகிஸ்தான் யுத்தம் மற்றும் பங்களாதேஷ் யுத்தம் ஆகியவைகளைச் சந்திக்கிறார். விங் கமாண்டர் என்னும் உயரிய பதவி வரை உயர்கிறார்.

ஆத்தா வள்ளியம்மை ஆச்சி ஒரு தீர்க்கதரிசி போலும். ஒரு வீட்டிற்கு பிள்ளை விடச் சம்மதிக்காமல், ஒரு நாட்டிற்கே பிள்ளை விட்டு ஒரு சேர பல்லாயிரம் வீடுகளில் விளக்கேற்றியிருக்கிறார்.

விமானப் படைப் பணியிலிருந்து விருப்ப ஓய்வில் வெளிவருகிறார். வெள்ளமாய்ப் படித்தது. இந்தியத் திருநாடெங்கும் பர(ற)ந்து பெற்ற அனுபவம். இதை இளைய தலைமுறைக்கு கொண்டு சேர்த்தாலென்ன.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்

என்று பேசுகிற வள்ளுவம் போல, அடுத்த பயணமாக பொறியியல் கல்லூரியில் கணினித் துறையின் பேராசிரியராக இணைந்து முதல்வராக உயருகிறார். 16 ஆண்டுகள் அயராத கல்விப் பணி. Indian Society of Technical Education இவரது கல்விப் பணியைப் பாராட்டி வாழ்நாள் சாதனையாளர் எனும் விருது வழங்கிக் கௌரவித்திருக்கிறது.

“இந்தப் 16 ஆண்டுகளில் விழா நாயகரின் முழு முயற்சியில், இந்தியாவிலேயே முதன் முதலாகப் பூத்ததுதான் B.Tech., IT பட்டயப் படிப்பு. கணினி தொழில் நுட்பத்திற்கென்று தனி பட்டயப் படிப்புத் தேவையில்லை எனப் பல்கலைக்கழகங்கள் மறுத்ததை, தனியொருவரின் முயற்சி சாத்தியமாக்கியிருக்கிறது. விளைவு இந்தியா தகவல் தொழில் நுட்பத் துறையில் மாபெரும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. மிகப் பெரிய பொருளாதாரம் ஈட்டுகிற தகவல் தொழில் நுட்பத்தை ஏற்றுமதி செய்து, அந்நியச் செலவாணி வரவிற்கு மிகப் பெரிய வாசலைத் திறந்திருக்கிறது. இந்த அனைத்து முன்னேற்றத்திற்கும் அச்சாணியாக இருந்தவர்களில் அண்ணன் முத்துக்கருப்பன் அவர்களின் தொலைநோக்குப் பார்வையும், திடமான நம்பிக்கையும் வலுவாக இருந்திருக்கிறது” எனப் புகழாரம் சூட்டுகிறார் பொருளாதார வல்லுநர் சோம.வள்ளியப்பன் அவர்கள்.

கல்வியால் உயர்ந்த இந்த ஆண் சரஸ்வதியை, பாடமும், படிப்பும் இன்னும் ஆட்கொண்டுதான் இருக்கிறது. ஆம், விழா நாயகர் தேவகோட்டையின் 100 ஆண்டுகள் பாரம்பரியமிக்க நகரத்தார் பள்ளிகளின் ஆட்சிக் குழுத் தலைவராக தற்பொழுது வலம் வருகிறார்.

விழா நாயகரின் குடும்பம் முழுதுமே சரஸ்வதி வாசம் செய்யும் மந்திராலயம் போல விளங்குகிறது. அமெரிக்காவில் மகள் திருமதி மீனாள் சாத்தப்பன் மிகவும் புகழ் பெற்ற குழந்தைகள் மருத்துவர். மாப்பிள்ளை திரு.சாத்தப்பன், Apple Inc, நிறுவனத்தின் முதுநிலை இயக்குனர். மகள் வழிப் பேரன் ஆகாஷ், மனநல மருத்துவர். பேத்தி வர்ஷா, பயிற்சி மருத்துவர். பேரனின் மனைவி லோரேன், முதுநிலை செவிலியராகவும், பேத்தியின் கணவர் கிரிஸ்டோபர், Teradata நிறுவனத்தின் முதுநிலை உற்பத்தி மேலாளராகவும் பணி செய்கிறார்கள்.

அமெரிக்காவில் மகன் திரு.கண்ணன் Cofounder and CEO - Yuga Byte, Santa Clara. மருமகள் அலமேலு உணவியலாளர். பேத்தி ஷ்ரேயா இஞ்சினியர். பேரன் விஷ்ணு இஞ்சினியரிங் பயிலும் மாணவன்.

இத்தனையையும் சாதிக்க இல்லத்தரசியின் ஒத்திசைவு எவ்வளவு தேவை. அனுசரணைக்கு இலக்கணம் நாயகரின் இல்லத்தரசி உண்ணாமலை ஆச்சி.

மூன்று தலை முறைக்கும் நிதி வேண்டுமா
காலம் முற்றும் புகழ் வளர்க்கும் மதி வேண்டுமா
தோன்றும் பகை நடுங்கும் பலம் வேண்டுமா
இவை மூன்றும் துணையிருக்கும் நலம் வேண்டுமா

என ஆச்சி அவர்களின் அப்பச்சி தியாகி தினமணி செட்டியார் அவர்கள் பார்த்து வந்த மாப்பிள்ளை அப்படி.

உலகம் புகழுகிற இந்த ஞானத்தந்தை, திரு. முத்துக்கருப்பன் அவர்களின் வாழ்வியலை “வையத்து வாழ்வீர்காள்” அறிந்து கொள்ளுங்கள் என்று நம் பிள்ளைகளுக்கும் சேர்த்து எடுத்துச் சொல்லுவோம்.

“தலையல்லால் கைம்மாறு இல்லேனே” என்று பேசுகிற நாச்சியார் திருமொழியால் வாழ்த்துவோம். வணங்குவோம், இந்த அபூர்வ சரஸ்வதியை.

# நகரத்தார் பற்றிய பதிவுகள் வர வேண்டும்



டாக்டர் சுப. திண்ணப்பன்

நகரத்தார்கள் என்ற தலைப்பிட்ட இந் நன்னூலை எழுதிய டாக்டர் சோம. வள்ளியப்பன் அவர்கள் எங்கள் பங்காளி. இளையாற்றக்குடி கோயில், பெருமருதுடையார் பிரிவைச் சேர்ந்தவர். தேவகோட்டையில் எங்கள் பழைய வீடும், அவர்கள் பழைய வீடும் மிக மிக அருகருகே ஒரே தெருவில் (பழ.அ. வீதி) உள்ளன.

அவர்கள் வீட்டினர், எங்கள் ஊருக்கு அருகில் உள்ள சிற்றூரான கோட்டூரில் சிவன் கோயில் கட்டி, திருப்பணி செய்தவர்கள். எனவே, அவர்கள் வீட்டினருக்குக் 'கோட்டூரார் வீடு' எனப் பெயர்.

அந்தக் கோயில் சிவனாரின் பெயர்தான் நயினார். அவர் தொடர்பாக 'நடந்த கூலி தரும் நயினார்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. கோட்டூருக்கு நடந்து சென்று தொழுவார் பெறும் நற்பயன் பற்றி நவிலும் நல்லதொரு கட்டுரை அது.

சோம. வள்ளியப்பன் அவர்களின் தந்தையார் திரு. CT.சோமய்யா செட்டியார், BA அவர்களை நான் நன்கு அறிவேன். அவர்கள் நான் மலேயா பல்கலைக்கழகக் கோலாலம்பூரில் பணியாற்றும் போது, திருப்பாதிரிப்புலியூர் திருக்கோயில் திருப்பணி தொடர்பாக நற்பணி ஆற்றும் நன்னோக்கத்துடன் அங்கு வந்திருந்தார்கள். அவர்களைப் பற்றி நன்கு அறியும் வாய்ப்பு எனக்கு அப்போது கிடைத்தது.

அவர்கள் 'இவன் தந்தை என் நோற்றான்' 'பெறுமவற்றுள் யாமறிவது இல்லை. அறிவறிந்த மக்கட்பேறு அல்ல பிற' என்னும் வள்ளுவர் யாம் என்னும் தன்மைப் பன்மைப் பெயர் உள்ளிட்டு பேசும் திருக்குறளுக்கு ஏற்ற பேறுபெற்ற பெருமகனார். அவர்கள் அனைவரையும் அவையத்து முந்தி இருக்கச் செய்த ஆற்றலார். தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது என்பதற்கு ஏற்ப, கண்டு மகிழ்ந்தார்கள்.

அதற்கு ஏற்ப அவர் மக்கள் அனைவரும் 'தோன்றிள் புகழோடு தோன்றுக' என்னும் குறளுக்கு ஏற்ப, தாங்கள் தோன்றிய துறைகளில் மிகச் சிறந்து விளங்கி, உயரம் தொட்டவர்கள். 'இவன் தந்தை என் நோற்றான் கொல் எனும் சொல்' என்னும் பாராட்டைப் பெறச் செய்தவர்கள். அனைவரும் பல்துறை வித்தகர்கள். வங்கித் துறையில் தொடக்க நிலையில் சேர்ந்து வானம் தொட்டவர்கள். சோம. வீரப்பன், வள்ளுவரின் தெள்ளு தமிழ் திருக்குறளைப் படித்துத் தெளிந்து, ஆராய்ந்து இக்காலச் சூழலுக்கு ஏற்றவாறு திறம்படப் பேசுபவர். எழுதும் இயல்புடையவர்.

சோம. வள்ளியப்பன், முயற்சி திருவினை ஆக்கும் என்னும் வள்ளுவரின் குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி, சுயமுன்னேற்றம், பங்குச்சந்தை, கம்பன், வணிகம், நிர்வாகம் மற்றும் பொருளாதாரம் குறித்தெல்லாம் பல நூல்கள் எழுதியவர்.

மாணவர்களுக்கு மட்டுமின்றிப் பொதுமக்களுக்கும் எளிதில் புரியும் விதம் பல அரிய செய்திகளை எவரும் எளிதில் உணருமாறு எழுதும் ஆற்றல் மிக்கவர். புதினமும், சிறுகதைகளும் எழுதியிருக்கிறார்.

தவிர, சோம. வள்ளியப்பன், அளவறிந்து சொல்லும் ஆற்றல் மிக்கவர். 'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் பேச்சாளர்' என்பதைச் சிங்கப்பூரில் இவர் பேசிய கூட்டங்களுக்குத் தலைமை தாங்கும் போது நான் உணர்ந்தேன். தன் கருத்தை விளக்கத் தக்க கணினித் தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு ஏற்ற சான்றுகளை எடுத்துக்காட்டியும் பேசும் நாவரசர்.

இவர் தம்பி, திரைப்படத் துறையில் இயங்கும் இயக்குனராகவும், ஏனைய துறை வல்லுனராகவும் திகழ்பவர். இவர் தமக்கையார் சிறந்த திருமுறை ஆன்மீகப் பற்றாளர். கைலாய யாத்திரை சென்று வந்தவர். அவர் கணவர் இராமநாதன், இயந்திரவியல் பேராசிரியர். அவரும் ஆன்மீகத்துறை வல்லுனர். சோம. வள்ளியப்பன் தங்கை நாடறிந்த பேச்சாளர்.

இப்படிப்பட்ட கல்வித் துறையில் சிறந்த குடும்பத்தில் பிறந்த சோம. வள்ளியப்பன் எழுதிய 'நகரத்தார்கள்' என்னும் நூலின் பெருமையைப் பேச, நா ஒன்று போதாது. என்னிடத்தில் எப்போதும் பேரன்பும், நன்மதிப்பும், பெருமதிப்பும் கொண்ட டாக்டர் சோம. வள்ளியப்பனின் – நகரத்தார்கள்' என்ற நூலுக்கு அணிந்துரை நல்குவதில் பெருமை கொள்கிறேன்.

ஆசிரியர் டாக்டர் சோம. வள்ளியப்பன் எழுதிய நகரத்தார்கள் என்னும் இந் நூலைப் படித்தேன். படித்.'தேன்' என இனித்தது. நகரத்தார்களைக் கோயில் வழிக் குடியினர் என்று அழைப்பார் முன்னிருந்த குன்றக்குடி அடிகளார். நகர் என்னும் சொல்லே கோயிலையும், வீட்டையும் குறிக்கும். இறைப் பற்றில் எப்போதும் முன் நிற்கும் நகரத்தார்களின் நற்பண்புகளையும், சிறப்பியல்புகளையும், தனித் தன்மைகளையும் நன்கு எடுத்துக்காட்டுகிறது இந்நூல்.

ஆசிரியர் அவ்வப்போது நகரத்தார் மன்றக் கூட்டங்கள், விழாக்களில் பேசிய பேச்சுக்கள், மற்றும் நகரத்தார் இதழ்களில் எழுதிய கட்டுரைகள் ஆகியவற்றின் தொகுப்பு இந்நூல். தொகுப்பாயினும் பகுத்திருக்கும் இயல்பு பாராட்டத்தக்கது.

ஒரு பக்கம் முதல் 20 பக்கம் வரை உள்ள கட்டுரைகள் இடம்பெற்று உள்ளன. எனவே புத்தகம், படிப்பதற்கு எளிதாகவும், சலிப்பு ஏற்படாத விதமாகவும் உள்ளது. சொல்லும், பொருளும், எழுதும் முறையும் சுவை மிக்கதாய் உள்ளன. அதுவே ஆசிரியரின் தனித்தன்மை எனப் பாராட்டலாம்.

கடவுள் பணியில் கண் செலுத்திய நகரத்தார்களை, கல்விப் பணியில் திருப்பி விட்டது,

இருபதாம் நூற்றாண்டு. கேடில் விழுச்செல்வம் கல்வி என்று கருதிய நகரத்தார்கள், பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை அமைத்து, பலரும் படித்து, முன்னேற வழி அமைத்துத் தந்தனர்.

அவர்களில் மூவேந்தர்களாக விளங்கியவர்கள், அரசர் அண்ணாமலையார். வள்ளல் அழகப்பர், நூற்பாலை மன்னர். கருமுத்து தியாகராசர். இவர்களைப் பற்றி ஆசிரியர் விரிவாக எழுதியுள்ளார். இவர்களின் கல்விக் கொடைகளை மட்டும் குறிப்பிடாமல், அவர்களின் அரிய முயற்சி, எளிமைத் தன்மை முதலியவற்றையும் சுட்டிக்காட்டும் நிகழ்வுகளையும் எடுத்துக் கூறியிருப்பது நன்று.




ஈட்டல், ஈதல், இசைபட வாழ்தல் என்ற குறிக்கோளோடு வாழ்ந்தவர் அரசர் அண்ணாமலையார். தான் குடியிருந்த வீட்டையும் கல்விக்காகக் கொடுத்தவர் வள்ளல் அழகப்பர். நூற்பாலை தொழிலில் முன் நின்று, பல கல்லூரிகளை நிறுவிய பண்பினர் தியாகராசர். இவர்களைத் தவிர, பள்ளிப் படிப்புக்கு உதவிய நகரத்தார் பலர். உணவளித்தல் போன்ற பல அறப்பணிகளைச் செய்வதிலும் முன்நின்றவர்கள் நகரத்தார்கள். பாலர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை, நிறுவிய நகரத்தார்கள் செய்த பணிகள் அளவிடற்கரியன.

இந்தப் பெருங்கொடையாளர்கள் செய்த கல்விப் பணியால், வட்டித் தொழில் செய்து பொருளீட்டிய பெருமக்கள், இன்று, அதை விட்டு, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, லண்டன், அமீரகம் முதலிய வெளிநாடுகளில், வணிகம், கணினிஇயல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் பெரிய பொறுப்புகளில் பல நகரத்தார்கள் இருப்பதைப் பார்க்க முடிகிறது.

நகரத்தார்கள் தாமே பெருந்தொழில் செய்யும் பெருமக்களாக வேண்டும் என்ற முயற்சிக்கு, அவர்களை ஊக்குவிக்கும் ஆக்கமிக்க உரைகளையும் பயிலரங்குகளையும் நடத்தியவர் ஆசிரியர், சோம. வள்ளியப்பன். அந்த விவரங்களையும் இந்நூலில் இணைத்துள்ளார். 'பாய்மரக்காலம் முதல் வாட்ஸாப் (Whatsapp) காலம் வரை பற்றிய கட்டுரை' நகரத்தாரின் அறிவுத்திறன் வளர்ச்சியைக் காட்டுகிறது.

நயினார், நடராஜர், முருகன், திருக்கைலாய காட்சி முதலில் ஆன்மிகக் கட்டுரைகள் நன்றாக இருக்கின்றன. எதையும் சுவையாகச் சொல்லும் ஆசிரியரின் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன. எங்கள் ஊர் தேவகோட்டைக்குச் சிறப்பு சேர்த்த நீதி அரசர் அரு. லட்சுமணன் அமைத்த தியான மண்டபம், இறப்பிலும் பிரியாத இணையர் பற்றிய செய்திப் பகுதிகள் சிறப்பாக உள்ளன.

தேவகோட்டையில் கோயில் கொண்ட சட்டி சாமி சித்தர், தி.ராம. சாமி வீட்டு பழனி ஆண்டவர், (தீனா வகை) பற்றிய குறிப்புகள் போன்றவை பாராட்டும் வகையில் உள்ளன. இதைப் போலப் படிப்பாலும் பல சிறப்புகள் பெற்ற தினமணி பிரகதீஸ்வரன், ரவி வெங்கடாசலம் போன்ற மதிப்புமிக்கவர்கள் குறித்த விவரங்களும் உள்ளன. இல்லற வாழ்க்கையில் ஒற்றுமை வேண்டும் கட்டுரையைப் பலரும் படித்து பயன் பெற வேண்டும். "இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக்கடை" என்ற குறளுக்கு உரை போல உள்ளது இந்தக் கட்டுரை. ஆசிரியரின் பெற்றோர்கள் படத்தைப் பார்த்து மகிழ்ந்தேன்.

இறுதிப் பகுதியில் உள்ள கட்டுரைகளில் நகரத்தார்கள் பற்றிய தோற்றம், மாற்றம், தனித்தன்மைகள், பழக்க வழக்கங்கள், சொல் வழக்குகள் விரிவாகவும், சுருக்கமாகவும் கூறப்பட்டிருக்கின்றன. ஒரே ஒரு பக்கத்தில் நகரத்தார்களின் வழிமுறைகள், பழக்கங்கள் இடம் பெற்றுள்ளன. அதன் அற்புதத் தலைப்பு ஆசிரியரின் அக்கறையையும் காட்டுகின்றது.

பாரதியார், நகரத்தார்கள் குறித்து எழுதிய பாடலை இணைத்திருப்பது போற்றத்தக்கது. நகரத்தார்கள் புத்தகத்தின் இறுதிப்பகுதி, நகரத்தார்கள் குறித்த ஆய்வு போல அமைந்திருக்கிறது. படித்து மகிழ்ந்தேன்.

குறிப்பாக, இறுதிப் பகுதியில் உள்ள 'நகரத்தார்களின் அடையாளங்களும் பெருமைகளும்' என்ற கட்டுரை நல்லதொரு தொகுப்பு. அதுபோல 'நகரத்தார்கள் மதிக்கப்படுவது ஏன்?' என்று இவரே அருமையாக ஒரு கேள்வியை எழுப்பிக் கொண்டு, அதற்கான பதில்களை அழகாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். நகரத்தார்களின் வெற்றிக்கான காரணங்கள் எவை என்பதை விளக்கமாக எழுதியிருக்கிறார் என்பது போற்றத்தக்கது.

அந்தப் பகுதியை நான் படித்து மகிழ்ந்தேன். அதன்பின் நகரத்தார்கள் நம் நாட்டுக்கும், உலகிற்கும் செய்த பங்களிப்புகளை அழகாக பட்டியலிடுகிறார். அது நிச்சயம் பாராட்ட வேண்டிய பகுதி என்று சொல்லலாம். அதுபோல 'வேள் வணிகர் நாளை', நகரத்தார் சமூகம் வருங்காலத்தில் எப்படி எல்லாம் போகும் என்பதை நன்றாக எதிர்காலச் சிந்தனையோடும், அக்கறையோடும் எழுதி இருக்கின்றார். நூலின் இறுதிப் பகுதியில், நகரத்தார்கள் குணங்களையும், பழக்கங்களையும் மிகச்சுருக்கமாக, ஆறு பகுதிகளாக பகுத்துப் பேசியுள்ளார்.

நகரத்தார்கள் வெற்றிக்குக் காரணங்கள் எவை என்பதை, 'திங்கிங் பிஃக்' உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்; ரிஸ்க் டேக்கிங், இடரினை உணர்தல்; 'காஸ்ட் கான்ஷியஸ்னஸ் அதாவது விலைமதிப்பு உணர்வு, டீடெயில் பிராசஸ், விரிவான நடைமுறை: பர்பெக்சன், ஒழுங்குமுறை, ஸ்டிரக்ச்சர்டு, அமைப்பு முறை என்று இப்படி ஏழு கருத்துருவாக்கங்களுக்குள் வைத்து எழுதியிருக்கிறார்.

அவற்றின் விரிவுதான் இந்த நூலென்று கூறலாம். எனவே இவரால் மிகச் சுருக்கமாக சொல்ல முடிகிறது. உடன் எதையும் விரிவாகச் சொல்லும், ஆற்றலும் படைத்திருக்கிறார். இரண்டும் உள்ள சோம. வள்ளியப்பன் அவர்களுடைய இந்த நூலை நான் மனதாரப் பாராட்டி மகிழ்கிறேன். இந்த நூலை பலரும் வாங்கிப் படிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறேன். அவருக்கு என்னுடைய வாழ்த்துகளைச் சொல்கிறேன். மேலும், இது போன்ற பல நூல்களை வெளி வர வேண்டும். ♦

# நகரத்தார் சிகரத்தார் 110



காரைக்குடி நாராயணன்

செட்டியார் மொஃபைலில் பொன்னழகியுடன் பேசிக் கொண்டிருந்தார். குட்டி காபி டம்ளரை எடுத்துக் கொண்டு போனாள்.

ராஜ்மோகன் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து அதை ஆர்வமாகக் கேட்டார்.

இதபாரு பொன்னழகி, நீ பொறந்த சிறுவயல்லேயும் எனக்குச் சொந்த பந்தம் நிறைய இருக்காங்க. வாக்கப்பட்டுப் போன ஆறாவயல்லேயும் எனக்குத் தாயபுள்ளைகள் இருக்காங்க. உன் கஷ்டம் எனக்குப் புரியாம இல்லை. உன் புருஷன் கல்யாணமான கொஞ்ச நாள்லே சிகரெட்டைப் புடிச்சுப் புடிச்சு அவனுக்கே கொள்ளி வச்சுக்கிட்டான். பாவம். நீ பாடாப் பட்டு வேலை பாத்து உன் ஒரே பிள்ளையையும் உயிரா வளத்துப் படிக்க வச்சே. அவனும் IT யில வேலை பாத்து லட்ச ரூபாய் மாசம் சம்பாதிக்குறான். அவனுக்குப் புடிச்ச பொண்ணா அவன் தேடுறான். நீ இப்போ பொம்புளைப் புள்ளைகள் போடுற நிபந்தனைகளுக்குப் பயந்து வர்ர பொண்ணுகள்ல நல்ல பொண்ணாப் பாத்துக் கட்டிவைக்க நெனைக்காதே. எல்லாம் எனக்குத் தெரியும். என்ன பண்றது. உன் பையன், அவனுக்குப் புடிச்சதைச் செஞ்சுக்கணும்னு நெனைக்குறான். பொண்ணு வீடுகள்ல போடுற நிபந்தனைகள்ல பாதிக் கல்யாணம் நடக்காமத் தள்ளிக்கிட்டுப் போகுது. அப்படியே கல்யாணம் ஆனாலும் ஆத்தா அப்பச்சி கூட இருக்கக் கூடாதுன்னு வேற நிபந்தனை போடுதுக. காலம் கெட்டுப் போச்சு.

பொன்னழகி கேவி அழுவது மொஃபைலில் செட்டியாருக்குக் கேட்டது. அவளைச் சாந்தப்படுத்தி விட்டு மேலே பேசினார்.

நல்ல காலமா இப்போ பிள்ளையார்பட்டிக் கோயிலும், இரணிக் கோவிலும் மனசு ஒத்து பொண்ணு எடுக்கலாம். பொண்ணு கொடுக்கலாம்னு தீர்மானம் நிறைவேத்திக் கையெழுத்துப் போட்டுட்டாங்களாம். ரெண்டு மூனு கல்யாணம் கூட நல்லபடியா முடிஞ் சுதுங்குறாங்க. அதனால உன் மகனுக்குச் சொன்ன இரணிக்கோயில் பொண்ணை வேற எதுவும் கேக்காமச் சரின்னு சொல்லிடு. எடக்கு முடக்கா, இசகு பிசகாப் பேசுறவன் பேசிக்கிட்டுத்தான் இருப்பான். அதை எல்லாம் நீ காதுல போட்டுக்காமச் சீக்கிரம் உன் மகன் கல்யாணத்தை முடி. பிள்ளையார்பட்டிக் கோவிலும், இரணிக்கோவிலும் எடுத்த முடிவு நல்ல முடிவுதான். புரியுதா?

செட்டியார் மொஃபைலை வைத்து விட்டுப் பெருமூச்சு விட்டார். அவரிடம் ராஜ்மோகன் சிரித்துக் கொண்டே கேட்டார்.

அதென்னய்யா எடக்கு முடக்கு. எசகு பிசகு.

அதுவா எங்க நகரத்தார் வீடுகள்ல பேசுற அடைமொழி. எங்க அப்பத்தா ஆயாவெல்லாம் அடிக்கடி பேசுவாங்க.

அந்தி சந்தி, அரைகுறை, சரிபாதி, அலுப்பு, சலிப்பு, உடல்வலி, உள்ளச் சோர்வு, இசகு பிசகு,

இயல்பு தெரிந்து ஏமாற்றுவது, அறியாமல் ஏமாற்றுவது,

எடக்கு முடக்கு, கேலி செய்து இகழ்வது, கடுமையாகப் பேசுவது, ஏட்டிக்குப் போட்டி, விரும்பும் பொருளை விருப்பமில்லாமல் செய்வது, ஒட்டு உறவு, ரத்த சொந்தங்களும், நெருக்கங்களும், கடை கண்ணி, தனி வியாபாரம், தொழில் சார்ந்த வணிகம், கிண்டலும், கேலியும், ஒருவன் மறுத்ததை அவன் வாயாலே சொல்ல வைத்து நகையாடுவது, பிள்ளை குட்டி, ஆண் பெண், வாட்ட சாட்டம், வலிமையான தோற்றம், வாளிப்பான தோற்றம்.

காளிமுத்து பதறியபடி உள்ளே இருந்து ஓடிவந்தான்.

ஏன் இப்படிப் பதறி ஓடுறே.

என் மகளுக்குப் பிரசவ வலி ஏற்பட்டுக் கஷ்டப்படுறாளாம். டாக்டரம்மா சீரியன் பண்ணித்தான் புள்ளையை எடுக்கணும்னு சொல்லிட்டாங்களாம். நான் நாளைக்கு வர்ரேன். ஆச்சிட்ட சொல்லிடுங்க.

காளிமுத்து திரும்பி பார்க்காமல் ஓடினான். புரியாதவன் காசு பணம் வாங்கிக்காம ஓடுறான்.

ராஜ்மோகன் புரியாமல் கேட்டார்.

அதென்னய்யா சீரியன் பண்ணனும்னு டாக்டரம்மா சொன்னதாச் சொல்லிட்டு ஓடுறாரு.

எனக்குப் புரியலே. செட்டியார் சிரித்தபடி சொன்னார்.

சிசரியனைத்தான் சீரியன்ட்டுப் போறான்.

டைரக்டர் சார் சிசரியன்னு ஏன் இதுக்குப் பேரு வந்துது தெரியுமா?

கத்தி போட்டுப் புள்ளையை எடுக்குறதாலே.

அதான் இல்லை. உலகத்திலே முதமுதலாச் சிசரியன் பண்ணிப் பிறந்த குழந்தைக்குப் பேரு என்ன வச்சாங்க தெரியுமா?

நீங்களே சொல்லிடுங்க.

அந்தக் குழந்தை தான் சீசர். அப்புறம் தான் ஜுலியட் சீசர்.

ராஜ்மோகன் கை தட்டிப் பாராட்டினார்.

ஆச்சி வேலைகளை முடித்துக் கொண்டு வெளியே வந்து துளசி மாடத்தைச் சுற்றி விட்டு மகாலெட்சுமி போல வந்து உட்கார்ந்தார். முருகப்பன் பினாங்கு தண்ணீர்மலையான் கோயில் பற்றி விவரம் கேட்க, ஆச்சி சொல்ல ஆரம்பித்தார்.

நகரத்தார்கள் 1818-ஆம் ஆண்டில் அங்கே தொழில் தொடங்குனாங்க. குருமார்கள் சொன்னபடி வேலை வைத்து வணங்குனாங்க. 1850-ல் பினாங்கு வீதியில இருந்த வீட்டைக் கோயில் வீடா மாத்தி உற்சவமூர்த்தியைப் பிரதிஷ்டை செஞ்சாங்க. 1854-ல் வாட்டர்பால் ரோட்டில் 5 ஏக்கர் நிலம் வாங்கி தண்டாயுதபாணி கோயில் கட்டி 12.12.1857-ல் குடமுழுக்கு செஞ்சாங்க. கோவிலூர் ஆதினம் வரைஞ்சு அனுப்புன வரைபடத்தின்



படி தண்ணீர்மலையான் கோயிலை கட்டுனாங்க. இந்தக் கோயிலை செட்டிநாட்டுப் பாணியில காரைக்குடி கட்டடக் கலைச் சிற்பிகளைக் கொண்டு வடிவமைச்சாங்க. கிழக்கு நோக்கி இருக்குற கருவறையில தண்டாயுதபாணி தண்ணீர்மலையான் காட்சி தந்து அருள்புரியுறார்.

ராஜ்மோகன் மொஃபைலில் எல்லாவற்றையும் பதிவு செய்தார். ஆச்சி தொடர்ந்து சொன்னார்.

இந்தத் தண்டாயுதபாணி வலது தொடையில அழகான மச்சம் இருக்குது. இதை அருளோடு கூடிய சக்தியா நெனைக்குறாங்க. இங்கே உள்ள மண்டபங்கள் எல்லாமே பர்மாவுல இருந்து கொண்டு வரப்பட்ட தேக்கு மரங்களால செய்யப்பட்டது. இங்கே பாரத தேசத்து வரலாற்றுப் படங்களும், ரவிவர்மா வரைஞ்ச அழகான ஓவியங்களும் இருக்கின்றன.

முருகப்பன், ஆச்சி சொல்வதைக் கேட்பது போல, அவன் மனைவியிடம் ஏதோ பேசிவிட்டு வந்து உட்கார்ந்தான். ஆச்சி அதைக் கவனிக்காதது போலப் பேசினார்.

தை மாசம் பூச நட்சத்திரமும், பௌர்ணமியும் சேர்ந்து வர்ர நாள் தான் தைப்பூசம். அரசு விடுமுறை.

பல வெளிநாட்டுக்காரங்க வருவாங்க. பல விதமான காவடிகள் வரும். ஆரம்பத்தில அஞ்சு நாட்கள் நடந்த இந்தப் பக்தித் திருவிழா நடைமுறைக் காரணங்களால் மூனு நாளாயிடுச்சு.

ராஜ்மோகன் ஏதோ ஞாபகம் வந்தததைச் சொன்னார்.

ஆச்சி. நம்ம அய்யா கூடக் கடிதம் எழுதி முடிச்சிட்டு தண்டாயுதபாணி துணைன்னு எழுதுனதைப் பாத்தேன்.

செட்டியார் தனக்கும் பேச வாய்ப்புக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

டைரக்டர் சார். இது என் பழக்கம் மட்டும் இல்லை. எங்க காலத்து நகரத்தார்கன் பழக்கம். இந்தத் தண்டாயுதபாணி துணைன்னு நாங்க எழுதி முடிக்குறதை, மலேசியா நீதிமன்றம் இதை எங்க கையெழுத்துக்குச் சமமா நெனைக்குது.

செட்டியார் சொல்லியபடி விக்கல் எடுத்தார். ஆச்சி, டம்ளரில் தண்ணீரைக் கொடுத்தபடி பேசினார்.

விக்கலுக்குப் பயந்தா வயிறு நிறையாது. சிக்கலுக்குப் பயந்தா வாழ்க்கை நிறையாது, ஆச்சியின் யதார்த்தமான பேச்சைக் கேட்டு ராஜ்மோகன் மெல்லச் சிரித்தார். செட்டியார் விக்கலோடு ஆச்சியைச் சொல்லச் சொல்லிக் கை காட்டினார்.

தம்பி. பல நாடுகள்லேருந்து இந்த தைப்பூச விழாவுக்குச் சாதிமதமில்லாம வந்தாலும் சீனர்களோட பக்தி ஆச்சர்யப்பட வைக்கும். பக்தர்கள் வழியெல்லாம் லட்சக்கணக்கான சிதறு தேங்காய்களை உடைப்பாங்க.

கடைசியா இந்தத் தேங்காய்களை எல்லாம் இயந்திரங்கள் மூலமாக கடல்ல கொண்டு போய்க் கொட்டிடுவாங்க. வாண வேடிக்கைகளும், அலங்காரங்களும், பால் குடம் எடுக்குறதும், தொட்டில் கட்டுறதும் நேரே போய்ப் பாக்கக் கொடுத்து வைக்கணும். இந்த விழாவுல பினாங்கு முதல்வர் குடும்பத்தோட வந்து கும்பிட்டுப் போவாரு. அவருக்கு நகரத்தார்கள் மரியாதை செய்வாங்க.

இப்போது முருகப்பன் அவன் மனைவியிடம் ஓரமாகச் சென்று கத்தி விட்டு வந்தான்.

ஆச்சி கேட்டார்.

முருகப்பா, என்னடா பிரச்சனை. அடிக்கடி போய் பேசிட்டு வர்ரே.

அப்பத்தா, நாங்க அண்ணன் தம்பிக ஏழு பேர்கள் பொறந்தோம். அந்தக் காலத்தில எல்லாரு வீட்டுலேயும் ஏழெட்டுப் பிள்ளைகள்தான். அதுல நான் ஒருத்தனே என் அப்பச்சியை என் வீட்ல கொண்டாந்து வச்சுக்க முடியுமா? அதான் முடியாதுன்னேன்.

முருகப்பா நீ இப்போ நெனைக்குற மாதிரி உன் புள்ளைகள் நாளைக்கு நெனைச்சா எப்படி இருக்கும். சவூதி அரேபியாவுல ரியாத் நீதிமன்றத்தில 70 வயது 80 வயதான இரண்டு சகோதரர்கள் வழக்குத் தொடுத்தாங்க. என்ன தெரியுமா? 100 வயதான அப்பாவை 80 வயதான என் அண்ணனே கவனிச்சுக்குறார். 70 வயதான எங்கிட்ட அனுப்பமாட்டேங்குறாரு. என்னிடம் அனுப்பச் சொல்லுங்கள்ன்னு நீதிபதிகிட்ட கேட்டான். நீதிபதி, அப்பாவிடம், உங்கள் அபிப்பிராயம் என்னன்னு கேட்டார். என் மக்கள் ரெண்டு பேரும் எனக்குச் சமம். இத்தனை ஆண்டுகள் மூத்தவன்தான் என்னைக் கவனித்துக் கொண்டான். இளையவனிடம் போகிறேன் என்றதும் அண்ணன் அழுதான். நீதிபதி அப்படியே தீர்ப்புச் சொன்னதும், என் சொர்க்கத்தின் வழியை அடைத்து விட்டீர்களே என்று கதறினான். இது வரலாற்றில் இடம் பிடித்த தீர்ப்பு. பிள்ளைகள் பெத்தவங்களை கால்பந்தா நினைச்சு எட்டி உதைக்கக் கூடாது. நான் சொன்னபடி தண்ணீர்மலையானைக் கும்பிட்டு வா. உனக்கு எல்லாம் நல்லபடியா நடக்கும்.

செட்டியார் முருகப்பனிடம் பத்தாயிரம் ரூபாய் தந்து அவனை அனுப்பி வைத்தார்.

(தொடரும்)

# பிள்ளையார் நோன்பு விழா நிகழ்வுகள்

## ஈரோடு நகரத்தார் சங்கம்



ஈரோடு நகரத்தார் சங்க பிள்ளையார் நோன்பு விழாவை சங்க செட்டிநாடு பேலஸ்ஸில் 625 நகரத்தார் பெருமக்களுக்கு தலைவர் NSS சிவசுப்ரமணியம் செட்டியார், CT.கருப்பையா செட்டியார், A.முருகப்ப செட்டியார் (துணைத் தலைவர்), இரத்தினசபாபதி செட்டியார் ஆகியோர் இழை எடுத்து கொடுத்து, இரவு எல்லோருக்கும் சிறப்பான விருந்து இனிதே நடைபெற்றது. செயலர் RM.ராமநாதன் செட்டியார், இணைச் செயலாளர்கள் S.வெங்கடாசலம் செட்டியார், PL.லெட்சுமணன் செட்டியார் ஆகியோருடன் பொருளாளர் M.சோமசுந்தரம் செட்டியார் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுடன் சிறப்பாக ஏற்பாடு செய்து இனிதே நடந்தேறியது.

## திருநகர் நகரத்தார் சங்கம்

04.01.2025 திருநகர் நகரத்தார் சங்கத்தின் பிள்ளையார் நோன்பு விழா திருப்பரங்குன்றம் நகர விடுதியில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 425 நகரத்தார்கள் இழை எடுத்துக் கொண்டார்கள். 16 மங்களப் பொருட்கள் ஏலம் விடப்பட்டன. வந்திருந்த அனைவருக்கும் அறுசுவை விருந்து வழங்கப்பட்டது. பணியார பிரசாதம் கொடுக்கப்பட்டது. தலைவர் AL. பழனியப்பன், செயலாளர் சி. நாகராஜன், பொருளாளர் சுப்ரமணியன், துணைத் தலைவர் மீனாட்சி சுந்தரம், இணைச் செயலாளர் குமார், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்றனர். அனைவருக்கும் தினசரி நாள் காட்டி வழங்கப்பட்டது.



## மும்பை நகரத்தார் சங்கம்

மும்பை நகர விடுதியில் 04.01.25 சனிக்கிழமை அன்று நடந்த பிள்ளையார் நோன்பு நிகழ்ச்சியில் சுமார் 90 நகரத்தார் குடும்பத்தினர் கலந்து கொண்டு குழந்தைகள் உட்பட 262 பேர் இழை எடுத்து விநாயகரை வழிபட்டனர். விடுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சோலார் பேனல்கள், சிசிடிவி கேமராக்கள் மற்றும் விடுதியில் தங்க உருவாக்கப்பட்ட online booking system பற்றிய விபரங்கள்/ பலன்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது.



## சென்னைவாழ் நேமத்தான்பட்டி நகரத்தார்கள்

சென்னை புரசைவாக்கத்தில் வள்ளல் அழகப்பா செட்டியார் மேல்நிலைப் பள்ளியில் பிள்ளையார் நோன்பு விழா சிறப்பாக நடைபெற்றது, நேமத்தான்பட்டி நகரத்தார் பெருமக்கள் பெருமளவு கலந்து கொண்டார்கள். வெளியூர் நகரத்தார்களும் விழாவில் கலந்து கொண்டு இழை எடுத்து கொண்டார்கள். அனைவருக்கும் அறுசுவை பலகாரம் வழங்கப்பட்டது. இழை எடுத்த பிறகு மங்களப் பொருட்கள் ஏலம் விடப்பட்டது.





# கர்நாடகா நகரத்தார் சங்கம்

மார்கழி மாதம், 20-ஆம் தேதி, (04.01.2025) சனிக்கிழமை, மாலை 6.30 மணி முதல் 9.30 மணி வரை கர்நாடக நகரத்தார் சங்கம் சார்பாக பிள்ளையார் நோன்பு விழா - பெங்களூர், ராஜராஜேஸ்வரி நகர், மீனாட்சி திருமண மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நிறுவனத் தலைவர் திரு. AL. முத்தையா செட்டியார் (92 வயது) (சாமுண்டி டெக்ஸ்டைல்ஸ்) அவர்கள் தலைப்பாகை கட்டிக் கொண்டு இழை எடுத்துக் கொடுத்தார்கள். தொடர்ந்து தற்போதைய சங்க தலைவர் திரு. C. வள்ளியப்ப செட்டியார், பொருளாளர் திரு. MV. பெத்தபெருமாள் செட்டியார், திரு. KL. வள்ளியப்ப செட்டியார், திரு. கண்ணன் செட்டியார் (IISc.) ஆகியோர் இழை எடுத்துக் கொடுத்தனர். விழா தொடக்கத்தில் திரு. C. வள்ளியப்பன், திரு. V. வீரப்பன் (WIPRO) ஆகியோர் உரையாற்றினர். 1100 பேர் இழை எடுத்துக் கொண்டனர். இரவு உணவாக இராயவரம் மீசை கருப்பையாவின் செட்டி நாட்டுப் பலகாரம் பரிமாறப்பட்டது. சங்க உறுப்பினர்களுக்கு 2025ஆம் வருட பிள்ளையார்பட்டி காலண்டர் மற்றும் காளாஞ்சி வழங்கப்பட்டன. சங்க நிர்வாகிகள் திரு. சோலையப்பன் (செயலாளர்), திரு. பெத்தபெருமாள் (பொருளாளர்) ஆகியோர் தலைமையில், சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவரும் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

தகவல்: AL. தண்டாயுதபாணி, பெங்களூரு

# நோ யுவர் நகரத்தார் விருது வழங்கும் விழா

பல்துறைகளில் சிறந்து விளங்கும் நகரத்தார்கள் 43 பேருக்கு விருது வழங்கும் விழா நடைபெற்றது. நல்லாசிரியர் சேவு. முத்துக்குமார் வந்திருந்தவர்களை வரவேற்றார். நோ யுவர் நகரத்தார் இணையவழி தொலைகாட்சி இயக்குனர் அண. சீனிவாசன் அறிமுக உரையாற்றினார். அருள்மிகு பினாங் தண்டாயுதபாணி கோவில் அறங்காவலர் prc வீரப்பன் தலைமை வகித்தார். தேவகோட்டை கம்பன் கழகத் தலைவர் அரு. சோமசுந்தரம் செட்டியார் முன்னிலை வகித்தார். மேலை சிவபுரி கேப்பிட்டல் ஃபார்மா. கே ஆர். செல்வ ராமு செட்டியார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார் இளைய தமிழ்க் கடல் தேவகோட்டை ராமநாதன் விருது பெற்றவர்களை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றினார். தண்ணீர் மலை டைமண்ட்ஸ் லட்சுமணன் கணேஷ் செட்டியார் ஏற்புரையாற்றினார். சீனிவாசனின் துணைவியார் ரேணுகா நன்றி கூறினார். சுமார் 300 பேர் கலந்து கொண்டனர்.




விருது வழங்கிய நிகழ்ச்சிக்குப் பிறகு அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது. பல்வேறு துறையில் சிறந்து விளங்கும் நகரத்தார்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பாக அமைந்தது. பத்திரிகை பிரிவில் நமது செட்டிநாடு இதழுக்கு விருது வழங்கப்பட்டது. விருதுகள் மூலம் விருது பெற்றவர்களை ஊக்குவிப்பதோடு இன்னும் பலரையும் இந்த நிகழ்வு ஊக்குவிக்கும் உற்சாகப்படுத்தும்.

சென்ற இதழ் தொடர்ச்சி



# வாழையடி வாழை

சிறுகூடல்பட்டி முத்துக்கருப்பன்

அவர்களிடம் பேசிக் கொண்டிருப்பதும் அவ்வளவு எளிதல்ல. அதற்கு தனிப் பயிற்சி வேண்டும். இல்லையென்றால், பேசத் தொடங்கிய சில நிமிடங்களிலேயே முட்டுச் சந்தில் போய் நின்று விடுவோம். அது அவர்கள் குறை அல்ல. முதுமை அவர்கள் மூளையின் செயலாக்கத்திலும், செய்திப் பரிமாற்றத்திலும் சிறிது பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. அதை மீறி நீங்கள் சரியான தடத்தில் இணைந்து விட்டால், உங்கள் உரையாடல் வளமான தங்கச் சுரங்கமாகி விடும்.

அதற்கான சில யுக்திகளைக் கையாளுங்கள்:

1. பெரியவர்களின் செவிப்புலன், கண்பார்வை, மூளை நரம்புகளில் முதுமை செய்திருக்கும் மாற்றங்களைப் பற்றி உங்கள் மருத்துவ நண்பர்களுடன் கலந்துரையாடித் தெரிந்து கொள்ளுங்கள்.
2. பெரியவர்களிடம் கேள்விகளைக் கேளுங்கள். பதிலுக்காகப் பொறுமையாகக் காத்திருங்கள்.
3. பொதுவாகப் பெரியவர்கள் தங்களை யாரும் தொந்தரவு செய்யாமல் தன்னிச்சையாக இருப்பதையே விரும்புவார்கள். ஆனால், நீங்கள் அவர்கள்மீது அக்கறைப்பட்டே அந்தக் கேள்விகளைக் கேட்கிறீர்கள் என்பது புரிந்து விட்டால், தங்கள் மனதைத் திறந்து வைக்கத் தயாராகி விடுவார்கள்.
4. மிக எளிய கேள்விகளோடு தொடங்குங்கள்:
    - “உங்களுக்கு என்ன சாப்பிடப் பிடிக்கும், இந்த வாரம் கோவிலுக்குப் போவோமா?” என்பது போல.
    - அவர்களின் கடந்த கால வாழ்க்கையில் அவர்கள் மிகவும் நேசித்துச் சந்தோஷப்படும் நினைவுகள் எவை என்று கேளுங்கள்.
    - எதைப் பற்றிச் சொல்லும் போது அவர்கள் அதிக ஆர்வம் காட்டுகிறார்களோ, அதைப் பற்றிய விவரம் கேளுங்கள்.
5. சொல்வதைக் கூர்ந்து கவனியுங்கள்.

    பெரியவர்களைப் பேசவிட்டு ஒப்புக்குச் செவி சாய்க்காமல், சொல்வதில் உள்ள உள் அர்த்தத்தை நீங்களும் உள் வாங்கிக் கொள்ளுங்கள்.



    அவர்கள் சொற்களில் படிந்துள்ள உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு அதற்குப் பதில் கொடுங்கள்.

6. பெரியவர்கள் பேசி முடித்த பின், அவர்கள் சொன்னதை அவர்களுக்குச் சுருக்கமாகத் திரும்பச் சொல்லி, அவர்கள் இதைத்தான் சொல்ல விரும்பினார்களா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். இதனால் உங்கள் மீது அவர்களுக்கு ஈடுபாடும் பிரியமும் அதிகமாகும்.
7. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், விவாதம் செய்வதற்கோ அல்லது உங்கள் கருத்தை நிறுவுவதற்கோ முயற்சி செய்யாதீர்கள்.
8. நீங்கள் பேசும்போது அவர்கள் முகம் பார்த்து, கண்ணோடு கண் பார்த்துப் பேசுங்கள்.

    உங்கள் உதடுகளின் அசைவு, பேசும்போது உங்கள் முகத்தில் தோன்றும் உணர்ச்சிகள் இவை நீங்கள் சொல்வதை அவர்கள் நன்றாகப் புரிந்து கொள்ள உதவும்.
9. உங்கள் பேச்சு மிதமான வேகத்தில் சீராக இருக்கட்டும்.
10. நகைச்சுவை உணர்வோடு பேசுங்கள். அவர்களைக் கலகலப்பாக வைத்திருக்க அது உதவும்.
11. உங்களிடம் பெரியவர்கள் அனுதாபத்தை எதிர்பார்க்கவே இல்லை. அக்கறையைத்தான் விரும்புகிறார்கள்.

## தலைமுறையின் கதையைத் தெரிந்து கொள்ளுங்கள்:

தன் தலைமுறையின் வரலாற்றைத் தெரிந்து வைத்திருக்காதவன் பொட்டல் வெளியில் தனியே நிற்கும் மொட்டை மரத்திற்கு ஒப்பானவன்.

வீட்டில் உள்ள பெரியவர்கள் உங்கள் குடும்பத்தின் மரபு, பாரம்பரியத்தைப் பற்றிய கதைகளைச் சொல்லக் கூடிய கல்வெட்டுக்கள், குகைச் சித்திரங்கள் போன்றவர்கள். உங்கள் தலைமுறைகள் கடந்து வந்த பயணக் கதைகளைச் சொல்லச் சொல்ல பெரியவர்களின் மூளை நரம்புகள் சுறுசுறுப்படையும். தங்கள் பரம்பரை தலைநிமிர்ந்து நிற்க, ஐயாக்கள் பட்ட பாட்டையும், வீழ்ச்சியையும், எழுச்சியையும் பற்றிய நினைவுகளை அடுத்த தலைமுறையான உங்களுக்குக் கடத்தும்போது, தாங்கள் பிறந்ததன் பயனை அடைந்து விட்டதாகப் பூரிப்பார்கள்.

ஒரு குடும்பத்தில் வழிவழியே வந்தவர்களில் நடுவே ஒரு சிலர் குணக் கேட்டால் சீர் அழிந்து போயிருந்தாலும், அந்தக் கதைகளைக் கேட்கும் போது, உங்கள் உள்ளம் கிளர்ந்தெழுந்து, "இழந்த பெருமைகளை என் காலத்தில் மீட்டெடுப்பேன்" என்று சபதம் ஏற்க மாட்டீர்களா?

அது மட்டுமல்ல, இதுவரை வெறும் பெயர்களாகத் தெரிந்த நம் மூதாதையர்கள், இப்போது அவர்களைப் பற்றிய கதைகளை அறியும் போது, விஸ்வரூபம் கொண்டு மாமனிதர்களாகத் தோன்றமாட்டார்களா!

இப்படி உணர்வுப்பூர்வமாக வாழ்வதை விடுத்து, காசு பணத்தையே கணக்குப் பண்ணிக் கொண்டிருந்தால், வாழ்க்கையில் என்ன மிஞ்சும்? ஆகவே வீட்டில் உள்ள மூப்படைந்த 'குழந்தை'களையும், தலைவாழை மரங்களையும் கண்ணிலும் நெஞ்சிலும் வைத்துக் காப்போம். கூட்டுக் குடும்பமாக, குழந்தை குட்டிகளோடு ஒன்றாக வாழ்வோம், வாருங்கள்!

திருமதி ஜயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் ஒரு மேடைப் பேச்சில் கீழ்க்கண்ட செய்தியைக் குறிப்பிட்டுப் பேசியதைக் கேட்டேன்:

ஒரு தாய், வளர்ந்து வாலிபனாய் நிற்கும் தன் மகனிடம் கேட்டாள்: "மகனே! உன் உடம்பில் உள்ள உறுப்புக்களில் உயர்வானது எது தெரியுமா?"

மகன்: கண் என்றான், மூளை என்றான், இதயம் என்றான்.

தாய் சொன்னாள்: "இல்லை மகனே! உன் தோள்தான் உயர்வானது. அதை நீ உறுதியுடனும், உரமாகவும் வைத்துக் கொண்டால், உன்னை வளர்த்தெடுத்த உன் தந்தையும், பாட்டனும் வயது முதிர்ந்து தளர்ந்து நிற்கும் நேரத்தில், "என் தோள் மீது சாய்ந்து கொள்ளுங்கள். நான் உங்களைத் தாங்குகிறேன்!" என்று நம்பிக்கையோடு நீ சொல்ல முடியும். உன்னை ஆளாக்கியதற்கு அவர்களுக்கு நீ செய்யும் கைம்மாறு அதுவாகத்தானே இருக்க முடியும்!" ♦


## நமது செட்டிநாடு சந்தா படிவம்

திரு/திருமதி..........................................................................................

முகவரி..........................................................................................

..........................................................................................

கோவில்................................................பிரிவு................................சொந்த ஊர்........................................

கைபேசி........................ தொலைபேசி............................ ▸▸ இமெயில் ..................................................

▸▸ புதிய சந்தா ☐ / சந்தா புதுப்பித்தல் ☐ / Ref No.............................................................

செலுத்திய சந்தா ரூபாய் ஓராண்டு 300/- இரண்டு ஆண்டு 500/- ஐந்து ஆண்டு 1250/-

☐ மணியார்டர் ☐ காசோலை ☐ RTGS ☐ GOOGLE PAY மூலம் செலுத்தி விவரம் தெரிவிக்கவும்.

வங்கி.............................................................../ எண்................................./ நாள்........................

அனுப்ப வேண்டிய முகவரி: "நமது செட்டிநாடு" (மாத இதழ்), ராணி சீதை அரங்கம், 3வது தளம், 603, அண்ணா சாலை, சென்னை 600 006. தொ.பே.எண்: 04442951888

வெளிநாடு சந்தா விவரம்: சிங்கப்பூர், மலேசியா ஆண்டிற்கு SG $ 40/ பிற நாடுகள் ஆண்டிற்கு US $50/

**Cheque to be drawn in favour of**

Chettinad Print Media P Ltd,
A/C No: 6412480441
Indian Bank, Thousand Lights Branch,
Chennai - 600 006. IFSC : IDIB000T020,

Or

Chettinad Print Media P Ltd.
A/C No:57500000199320
HDFC Bank, R.K.Salai Branch,
Chennai - 600 004, IFSC : HDFC0001097




Namadhu Chettinad Published and Printed by N.Avadaiappan on behalf of M/S Chettinad Print Media (P) Ltd., Printed at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai - 600 083 and Published from Chettinad Print Media (P) Ltd., Rani Seethai Hall Building, 603, Anna Salai, Chennai - 600 006. Editor : N.Avadaiappan


Chettinad
Sarvalokaa Education
International School
Activities that nurture
children
holistically
• Archery
• Theatre
• Dance
• Instrumental Music
• Taekwondo
• Chess
• Soccer
ADMISSIONS
OPEN
ENQUIRE
FOR
DETAILS
044 47429900
73 5872 1784
www.sarvalokaa.org
Cambridge Assessment
International Education

Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CH(C)583/2025-2027
Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)/WPP-542/2025-2027 and published on first week of every month.
Posted at Egmore. RMS PATRIKA Channel Posted on 15-21 January - 2025

